உ

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின்

தசாவதாரங்களில்

கடைசியவதாரமாகிய

கல்க்யவதார சரித்ரமாகிய

# கல்கிபுராணம்.

இது,


## வித்வான் க. தேசிகாசார்யாரால்


ஸம்ஸ்க்ருதத்திலிருந்து

தமிழில்மொழிபெயர்க்கப்பட்டு,


## அ. அனந்தாசார்யாரால்



சென்னை :

ஸ்ரீ மட்டுவார்குழலம்பாள் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1903.



*Registered copy-right.*



இதன் விலை அணா - 12. வி. பி. செலவு அணா - 3.

இந்த அட்டைப்பாரம் மட்டும் சென்னைப் பண்டிதமித்திர பிரஸில் அச்சிடப்பட்டது.

# விளம்பரம்.

[illegible] சென்னப்பட்டணம் பைராகிமடம் [illegible] அ. அநந்தாசார்யிடத்தில் வாங்கிக் [illegible]

[illegible]ஷத், சங்கர, ராமாநுஜ மத்வ, பாஷ்யங்களை ப்ரதிபதத்துடன் தமிழ் மொழிபெயர்ப்பு நல்ல காகிதம் ரூ 5-0-0. தபால் சார்ச் அ. 8.

[illegible] ஸந்த்யாவந்தனபாஷ்யம் [illegible] ஸ்ரீ[illegible] [illegible] நாராயணஸூக்தம், 3 வேத அமாவாஸ்ய தர்ப்பணம் [illegible] ஸஹஸ்ரநாமம் ப்ரஹ்மயஜ்ஞம் முதலானவைகளுக்கு சங்கர, ராமாநுஜ, மத்வ, பாஷ்யங்களை ப்ரதி பதத்துடன் தமிழ் மொழிபெயர்ப்பு ரூ. 1 - 4 - 0. தபால்கூலி 0 - 3 - 0.

பகவத்கீதை [illegible]சுலோகம் தமிழ்சுலோகம் சங்கர, ராமாநுஜ, மத்வ, பாஷ்யம் ப்ரதிபதத்துடன் தமிழ்மொழிபெயர்ப்பு 1-0-0. தபால்கூலி 0-3-0.

[illegible] தமிழ் மொழிபெயர்ப்பு ரூ. 0-12-0. 0-2-0.

[illegible] தசாவதாரத்தில் கடைசியான அவதாரத்தின் வைபவங்களை சொல்லுகிறது. இது ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் [illegible]மாக மொழி பெயர்க்கப்பட்டது. இதில் கலியுகத்தில் நடக்கும் ஆச்சர்யங்களும் [illegible] ஸகல தர்மாதர்மங்களும் கூறப்பட்டிருக்கிறது. இது படிக்கப்படிக்க [illegible] இதில் படங்களும் அடங்கியிருக்கின்றன. இதன்விலை ரூ. [illegible] தபால்கூலி 0-3-0

சுந்தரகாண்டம் ப்ரதிசுலோகத்துக்கு தமிழ் அர்த்தம் ரூ. 1-8-0. தபால் கூலி 0 - 4 - 0.

[illegible] ப்ரதிபதம். சங்கர, ராமாநுஜ பாஷ்யம் தமிழ்மொழிபெயர்ப்பு ரூ. 1-4-0 0-3-0.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| [illegible]பாஷ்யம் ப்ரதிபதத்துடன் தமிழ்மொழிபெயர்ப்பு நல்ல காகிதம் | ரூ. 1-8-0. | | | தபால்கூலி | 0-4-0. | | |
| [illegible] படங்களுடன் நல்ல காகிதம் | 0 | 6 | 0 | ,, | [illegible] | 3 | [illegible] |
| [illegible] வ்யாக்யானம் | 3 | 0 | 0 | ,, | 0 | 3 | 0 |
| [illegible] | 0 | 12 | 0 | ,, | 0 | 3 | 0 |
| [illegible] | 1 | 4 | 0 | ,, | 0 | 3 | 0 |
| 108 [illegible] | 4 | 0 | 0 | ,, | 0 | 5 | 0 |
| [illegible] | 2 | 0 | 0 | ,, | 0 | [illegible] | 0 |
| [illegible] வ்யாக்யானத்துடன் | 0 | 12 | 0 | ,, | [illegible] | 3 | 0 |
| [illegible] வ்யாக்யானம் | 4 | 0 | 0 | ,, | 0 | 14 | 0 |

தபால்கூலி ப்ரத்யேகம்.

| | | | |
|---|---|---|---|
| [illegible] படங்களுடன் 4 வால்யம் | 6 | 8 | 0 |
| [illegible] காகிதம் | 8 | 0 | 0 |
| [illegible] | 1 | 12 | 0 |
| ஸ்ரீ[illegible] | 2 | 3 | 0 |

[illegible] நல்ல காகிதம் ரூ. 4 - 0 - 0

[illegible] 3 - 12 - 0.

[illegible] தமிழ் [illegible]யாக அச்சிட்டுவருகிறது.

[illegible] முடிந்தபிறகு வாங்குவோர்களுக்கு ரூ. 5-0-0.

[illegible] வேண்டினால் வி. பி. மூலமாய் [illegible]

அ. அநந்தாசாரியர்.

உ

ஸ்ரீராமஜயம்.

# கலியுகதர்மம்.

கல்கிபகவான் ஸௌதபௌராணிகருக்குச் சொல்லுகிறார்;
ஸௌதபௌராணிகர் சௌனகாதி மஹரிஷிகளைப் பார்த்து நீங்கள்
[illegible] சொல்லவேண்டுமென்று சொல்லுகிறார்.

அந்நஶூலா ஜநபதாஶ் ஶிவஶூலா த்விஜாதய: ।
கேஶஶூலா: ஸ்த்ரியஶ்சைவ பவிஷ்யந்தி கலௌ யுகே ॥ க.

கலியுகத்தில் ஜனங்கள் எல்லோரும் அன்னவிக்கிரயம் பண்ணப் போகிறார்கள். பிராமணர்கள் மந்திரங்களை விற்கப்போகிறார்கள். ஸ்திரீகள் யாவரும் பதிவிரதாதருமமற்றவர்களாயிருக்கப் போகிறார்கள்.

வேதவிக்ரயிணோ விப்ரா ப்ராஹ்மண்யோ துக்தவிக்ரயா: ।
மாம்ஸவிக்ரயிணோ வைஶ்யா பவிஷ்யந்தி கலௌ யுகே ॥ உ.

பிராமணர்கள் வேதங்களைக் கீழ்ப்பட்ட ஜாதியாருக்குச்சொல்லி பிழைக்கப்போகிறார்கள். பிராம்மணஸ்திரீகள் மோர்-தயிர்-பால் முதலியவைகளை விற்கப்போகிறார்கள். வைசியர்கள் எல்லோரும் மாம்சங்களை விற்கப் போகிறார்கள்.

ஶிஶ்நோதரா பவிஷ்யந்தி ப்ரஹ்மக்ஷத்ரவிஶாதய: ।
ஸச்சூத்ராஸ்ஸ்வகர்மநிரதா பவிஷ்யந்தி கலௌ யுகே ॥ ங.

கலியுகத்தில் பிராமணாதி மூன்றுவர்ணத்தாரும் ஸ்வகர்மத்தை விடுத்து வயிற்றை நிறைப்பதிலும் மாதரைப்புணர்வதிலும் ஆசையுள்ளவர்களாயிருப்பார்கள். சூத்திரர்கள் நற்செய்கை நல்லொழுக்கமுள்ளவர்களாயிருப்பார்கள்.

அஷ்டவர்ஷே ஸ்த்ரிய: ப்ரஸவம் கரிஷ்யந்தி ந ஸம்ஶய: ।
பாரதந்த்ர்யம் த்யக்ஷ்யந்தி பயம் ந விந்ததே ॥ ச.

ஸ்திரீகள் எல்லோரும் எட்டாவது வருஷத்தில் புத்திரர்களைப் பிரஸவிப்பார்கள். பயமில்லாமல் புருஷனைப் புணருவார்கள்.

பஹ்வபத்யா பவிஷ்யந்தி வராஹா இவ யோஷித: ।
கண்டூயநம் கரிஷ்யந்தி கராப்யாம் ஸ்த்ரிய: ॥ ரு.

ஸ்திரீகள் யாவரும் பன்றிபோல் பத்து எட்டு குட்டி யீனுவார்கள். இரண்டு கைகளாலும் தினவுசொறிந்து கொள்ளப்போகிறார்கள்.

[illegible] பிடிக்கப்போகின்றன. விதவைகள் ஒரு புருஷனை மணந்து சந்ததியை உண்டுபண்ணப்போகிறார்கள். புருஷனுடன் சண்டை [illegible] கலகங்களில் ஸ்திரீகள் ஈடுபடப்போகிறார்கள்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] சொல்வார்கள். ஒருவரும் தத்துவத்தை யறியார். பிராம[illegible] வெளிக்கு மாத்திரம் நன்றாக வேஷம் போடுவார்கள்.

[illegible] ।
[illegible] ॥ ௧௦

கலியுகத்தில் ஜனங்கள் பொய்யை சத்தியமாயும் மெய்யை அசத்தியமாயும் [illegible] கெட்டவைகளாகவும் பிதற்றிக்கொண்டு திரிவார்கள். ஒரு பொழுதாகிலும் நியாயமான வழியில் போகமாட்டார்கள்.

[illegible] ।
[illegible] ॥ ௧௧

[illegible] நித்தியகர்மங்களை விடுத்து இதரர்களுக்கு மாத்திரம் ஞானத்தைப் போதித்து குலிங்கபக்ஷிகள் போல் திரிவார்கள்.

[illegible] ।
[illegible] ॥ ௧௨

கலியுகத்தில் தினந்தோறும் நித்திய கர்மங்களை விடுத்து அதர்மங்களைச் செய்து [illegible] முதலான தாமஸ பதார்த்தங்களை புஜித்துக் கொண்டு [illegible] மாத்திரம் தரித்துக்கொண்டு திரியப்போகிறார்கள்.

[illegible]
[illegible]

கலியுகத்தில் வித்தியாகுருவென்றும் மந்திரோபதேசகுருவென்றும் சிஷ்யனென்கிற பேதமில்லாமல் பெயரளவில் மாத்திரம் பேதத்தை யடைந்த ஆசாரிய பத்தினியை சிஷ்யனும், சிஷ்யபத்தினியை குருவும் அனுபவிக்கப் போகிறார்கள்.

[illegible]
[illegible] ௧௪.

கலியுகத்தில் மிருகம் முதலான ஜந்துக்கள் வயிற்றில் விசித்திர ஜந்துக்களும் கலியின் முடிவில் மறுவிய யோநியில் உற்பத்திகளு முண்டாகப் போகின்றன.

[illegible]
[illegible] ௧௫.

ஓ முனிவரே கலியுகத்தில் ஜந்துக்கள், அணைத்தோறும் அசாஸ்த்ரியமாக ஆயிரம்பங்கு அதிகமாக உண்டாகப்போகின்றன.

[illegible]
[illegible] ௧௬.

[illegible]
[illegible] ௧௭.

பூமியானது ஜனங்களுடைய பாபங்களைப் பொறுக்கமுடியாமல் பிளக்கப்போகிறது. அதனால் தேசங்களென்ன தெல்லாம் நாசமடையப்போகிறது. கலியுகத்தில் (மனிதர்கள்) தாய் தந்தைகளைச் சேர்ந்தவர்களை த்வேஷித்தவர்களும், மனைவிகளைச் சேர்ந்தவர்களிடத்தில் அன்பு கூர்ந்தவர்களும், தினந்தோறும் மித்ரத்ரோஹிகள். பீடிக்கப்பட்டவர்களா யிருக்கப்போகிறார்கள்.

[illegible]
[illegible] ௧௮

தனத்தின் ஆசை ஆகிற பாசங்கொண்டு கட்டுண்டு கேவலம் கிழவனான புருஷனையுவராக எண்ணினவர்களாகி (அவரவர்கள்) கன்யகைகளைக் கெடுக்க போகிறார்கள்.

[illegible]
[illegible]
[illegible]

அதனாலே ஜகமெல்லாம் ஸங்கரமாக(அதாவது எல்லஜாதியும் ஒரேஜாதியாக) ஆகப்போகிறது. அந்த பாபத்தினால் ஸ்திரமாக துர்பிக்ஷம் (அதாவது கருப்பு உண்டாகப்போகிறது, ஓ முனிவரே அதனால் மனிதர்கள் ஒருவரொருவரை பிடுங்கித்தின்னப்போகிறார்கள். தெய்வச்செயல் என்ன ஆச்சரியம்.

ஶாஸ்த்ராணி ஸ்வல்பம் சைவ ச்ருத்வா நார்ய: கலௌ யுகே ।
வஞ்சயிஷ்யந்தி சைவ நித்யம் ஸ்வைரிண்யோ ந பதிந் ஜாரத: ॥

கலியுகத்தில் ஸ்திரீகள் கொஞ்சம் சாஸ்திரங்களை படித்துவிட்டு அதற்குக்கெட்ட அபிப்பிராயத்தை கல்பித்து குச்சிதவாதங்களைப் பண்ணிக்கொண்டு எப்பொழுதும் தங்கள் புருஷர்களை நானுவிதத்தாலும் வஞ்சனை செய்யப்போகிறார்கள்.

கிஞ்சிஜ்ஜ்ஞாநா: கலௌ மர்த்யா: ஸர்வே ஸர்வஜ்ஞதாப்ரியா: ।
ஆசார்யாந் நிந்தயிஷ்யந்தி கமிஷ்யந்தி ச நாரகம் ॥ ௨௧௯

கலியுகத்தில் கொஞ்சம் படித்த மனிதர்களெல்லோரும் தங்களையே குருவென்றெண்ணிக்கொண்டு ஆசாரியர்களை நிந்திக்கப் போகிறார்கள் அதனாலும் நரகத்தை அடையப்போகிறார்கள்.

கிம் வா ஸம்யக் ப்ரோக்தேந ஸர்வம் கஷ்டம் கலௌ பவேத் ।
ஸாதூநாம் ரக்ஷணம் நித்யம் ந ஹி பகவாநிதரா ॥ ௨௨௦

விசேஷமாகச் சொல்லுவதனால் என்ன பிரயோசனம்; கலியுகத்தில் எல்லாம் கெட்டதாக ஆகப்போகிறது; நல்லவர்களுக்கு ரக்ஷகன் பகவானன்றி வேறொருவரில்லை.

கலியின் விசித்திரமான அதர்மத்தை யானென்ன சொல்வேன். கலியின் சொரூபத்தை விஸ்தரித்துச் சொல்லுகிறேன் கேளும். கலியுகத்தில் மனிதருக்கு வர்ணாச்சிரமாசாரமுள்ள நடக்கை இராது, மனுஷியர் ஒன்பது அங்குலம் பிரமாணமுள்ளவர்களா யிருப்பார்கள், ருக், யஜுஸ் ஸாம புராணம் தர்மசாஸ்திரம் முதலானவைகளை விட்டுவிடப்போகிறார்கள். குரு சிஷ்யக்ரமம் கிடையாது, தம்பதிகள் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ளவேண்டிய தர்மமுமில்லை, பிராமணர்கள் ஸத்யமாக நடக்கமாட்டார்கள், ஸ்திரீகள் பணமில்லாத தம்புருஷர்களை விட்டுப் பணத்தை வைத்துக் கொண்டு இருக்கிறவனையே புருஷனாகத் தேடிக் கொள்ளுவார்கள், சிலர் எவன் விசேஷமாய்ப் பணம் கொடுப்பானோ அவனையே சுவாமி என்று சொல்லுவார்கள். நற்குலத்தில் பிறந்தவர்களைச்சுவாமியாக நினைக்கமாட்டார்கள். அதிதி முதலானவர்களை ஆதரிக்கமாட்டார்கள் ஸ்திரீகளெல்லாரும் சனுக்கு (அதாவது தனுக்கு அல்லது த்ரோக்கு) செய்கிறவனிடத்தில் இஷ்டப்படுவார்கள். சூத்திராதிகள் பிராமணரைத் தங்களைப் போல் சாதாரண மனிதராக நினைப்பார்கள். பசுமாடுகளை ஜனங்களுக்குப்

யால் கொடுப்பதைப்பற்றி மேன்மையான எண்ணமேயல்லது தானாகவே நல்ல ஜன்மம் என்று நினைக்கமாட்டார்கள். ஜனங்கள் மழையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு காய், கிழங்கு, முதலானதுகளைச் சாப்பிடப்போகிறார்கள். சுகமும் உத்ஸாஹமுமில்லாதவர்களாய் திரவியம் க்ஷீணித்தவர்களாய் எக்காலத்திலும் துன்பங்களை அடைவார்கள். அக்நிபூஜை விஷ்ணுபூஜை சிவபூஜை முதலானதுகளை விட்டுவிடுவார்கள். ஸ்திரீகள் வெகு பிள்ளைப் பெற்றுக்கொண்டுச் செல்வமில்லாமல் கஷ்டப்படப் போகிறார்கள். குலஸ்த்ரீகள் ஹீநபுருஷனை இச்சித்து தங்கள் புருஷனுக்கு பலவகை துன்பம் செய்வார்கள். ப்ரஹ்மசாரி விரதாநுஷ்டான மில்லாமல் வேதாத்தியயனம் யஞ்ஞம் செய்வார்கள், சன்னியாசிகள், பெண்பிள்ளை தாரம் என்னு மிவர்களிடத்தில் ஆசைவைத்து மேலுக்குமாத்திரம் சன்னியாசி வேஷம் போட்டுக்கொண்டு பிராமணனை தூஷிப்பார்கள், கலியில் அக்கிரமத்தினால் 20 - வயதுக்குள் ஆயுஸ்ஸு க்ஷீணித்துவிடும். நாஸ்திகர்கள், வேதம் ஸ்ம்ருதி தைவம் இவைகளில்லையென்று சொல்லுவார்கள். அதிக அக்ரமத்தினால் மழையில்லாமல் ஆயுஸ்ஸு க்ஷீணித்துவிடும். கலியுகத்தில் விஷ்ணுகலை மாறிவிடும், நாஸ்திகர் அதிகப்படும், ஸ்ம்ருதி - ச்ருதி - புராணம் எல்லாம் பொய் என்று சொல்லுவார்கள். எல்லாஜாதியும் ஒன்றாய் சம்பந்தம் பண்ணலாமென்று ஜனங்கள் சொல்லுவார்கள். ப்ராமணர்கள் சந்தியாவந்தநம் தேவபூஜை முதலியவைகளை விட்டுவிடுவார்கள். சூத்திரர்கள் விஷ்ணுபூஜை சிவபூஜை முதலானதுகளைச் செய்வார்கள், அதிக அக்ரமம் செய்தவர்களுக்கு மஹாபாதகமுண்டு, நரக விவரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

சூகரம் - பன்றிகளால் பிடிக்கப்படுமிடம், ரோதம்-அசையவொட்டாமல் நிறுத்தப்படுமிடம், தாலம்-பனைமரத்தினின்றும் விழுதல், அதின்மட்டைகளினாலே அறுத்தல், விசஸனம்-கைவாளாலே அறுத்தல், மகாச்சுவாலம்,எரிகிற நெருப்பு-தப்தகும்பம், காய்ச்சின எண்ணெய்க்குடம்-லவணம், அறுத்தறுத்துக் காய்ச்சின வுப்பிடுவது, வீலோகிதம்-உதிரத்தை யுறியும்படி செய்வது, வைதரணி - கடப்பதற்கு வருத்தமான உதிரஆறு. கிரிமிசம் - புழுக்கற்றொளைக்குமிடம், கிருமிபோஜனம் - புழுக்களைத் தின்னுமிடம், கிருஷ்ணம்-நெருங்கின இருள்களின்மேல் நடக்கச்செய்யுமிடம், தாருணம் - சகிக்கக்கூடாத குளிராயிருக்குமிடம், சந்தமிசம் - சந்தமிம் யென்னு மாயுத்தத்தினால் நாக்கைப் பிடுங்குமிடம், அசிபத்திரவனம் - நாற்புறத்திலுங் கொடிய கத்திகளைக்கட்டி நடக்குமிடம், க்ருஷ்ணசூத்திரம் - சக்கரத்தில் ஏற்றிக்கால் விரலில் ஒரு கயிறுமாட்டி உடலெல்லா மொன்றாம்படி யிறுக்கிக் கட்டியறுக்கப்படும் படியான இடம், அவற்றுள் பாவிகளுக்கு ஆயுதபயம் அக்நிபயம் ஜந்துபயம் அனேகமானபயமுண்டு. அநியாயமாய்ப் பேசுகிறவன் அநியாயமாகச்செய்கிறவன். பொய்சொல்லுகின்றவன் ரௌரவத்தில் விழுவார்கள். சிசுவைக்கொல்லுகிறவனும் ஜனங்களை அழிகிறவனும், மகாநரகத்தையடைகிறான். குருவின்மனைவியோடு புணர்கின்றவனும், உடன்பிறந்தாளைச் சேரு

கின்றவனும், ராஜாவைக்கொல்லுகின்றவனும் தப்த கும்பத்திற்கு போவார்கள், மருமகள், மகள், முதலானோரோடு புணர்கின்றவனும் புணரக்கூடாத பெண்களோடு புணர்கின்றவனும், வேதவிக்கிரயஞ்செய்கின்றவனும் பயங்கரமான நரகத்தை யடைவார்கள். தேவதூஷணை பிராமண தூஷணை பிதரு தூஷணைகளைச் செய்கிறவனும், உத்தம வஸ்துக்களைத் தூஷிப்பவனும் பிறர்க்குத் தீங்குசெய்பவனும் சூனியம் வைக்கின்றவனும் அக்நிஜ்வாலையில் விழுவான், சோதிடநூலை நன்றாகப் பாராமல் பயன் சொல்லுகின்றவன் அதோமுகத்தில் வாதைப்படுவான். பூனைகோழி ஆடு நாய் பன்றி இவற்றை எப்போதும் லாலனை செய்பவனும் அந்நரகத்தையே யடைவான்.

கூத்தாடிப் பிழைக்கும் பிராமணன், மீன் பிடிப்பவன், குண்டகோளகர் முதலானோருடைய அன்னத்தைத்தின்பவன் விஷமிருக்கின்றவன், மனைவியைக்கூட்டிக் கொடுத்துப் பிழைக்கின்றவன், வீட்டைக் கொளுத்திவிடுகின்றவன், சிநேகிதனைக்கெடுப்பவன், பறவைகளைக் கொலைக்கு விற்றுப்பிழைப்பவன், ஊர்க்காகயாகஞ் செய்கின்றவன் ருதிராம்பத்திலே போய்விழுவான். வைதிக வுபயோகமில்லாமல் வீணாய்ப் பலாசுமுதலிய மரங்களைச் சேதிப்பவனும் ஆடுவிற்கின்றவன் மிருகங்களைக் கொன்றுதிரிகின்றவன் முதலானோரும் அக்நிச்சுவாலையில் போடப்படுவார்கள். மனோவாக்காயங்களினாலே பாதகஞ்செய்தல் முதலான துஷ்கருமமுடையவரெல்லாம் யாதனைப்படும்படியான நரகங்களை அடைவார்கள். நரகலோகத்திலிருக்கின்றபிராணிகள் தலைகீழா இருந்துகொண்டு சொர்க்கலோகத்திலிருக்கிற தேவர்களைப்பார்த்துத் துன்பப்பட்டுக் கொண்டு இருப்பார்கள் பாவிகள் நரகமநுபவித்த பிறகு ஸ்தாவரங்களாகவும், புழுக்களாகவும், ஜலசரங்களாகவும், பக்ஷிகளாகவும், மிருகங்களாகவும் மனிதராகவும் மனிதரில் தரும சீலராகவும், தேவர்களாகவும், மோக்ஷமடையத் தக்கவராகவும்முறையே ஆவார்கள். சுவர்க்கத்திலெத்தனை ஆத்துமாக்களிருக்கிறதோ அத்தனை ஆத்துமாக்கள் நரகத்திலேயும் உண்டு, எந்த ஜந்து பாவஞ்செய்து(அதாவது ஜீவன்)ப்ராயச்சித்தஞ்செய்து கொள்ளவில்லையோ அது நரகத்தை யடையும்.

வேதங்களிலே எந்தெந்த பாவங்களுக்கு எந்தெந்தப் பிராயச்சித்தங்கள் காணப்படுமோ அவைகளை நன்றாயாராய்ந்து மனுமுதலான மகாரிஷிகள் அற்பத்திற் கற்பமாகவும், கனத்திற்குக் கனமாகவும், தாங்கள் செய்த தரும சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கின்றன கேளும் சூதமகாருஷியே.

சாந்திராயண முதலான தவங்களாயும். யக்கியம், தானம், முதலான கருமங்களாயும்விதிக்கப்பட்டிருக்கிற சகல பிராயச்சித்தங்களுக்கும் மேலான பிராயச்சித்தஞ்செய்துகொண்டு ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸ்மரணசங்கீர்த்தநத்தினால் பாவம்போய்விடும். ஸ்ரீ ஹரிஸ்மரணமே சிறந்தது. இந்த ஸ்ரீ ஹரிஸ்மரணத்திற்குக் காலாதிநியமம் வேண்டியதில்லை காலை நடுப்பகல். மாலை, இராத்திரி ஆகிய எக்காலத்திலும் ஸ்மரிக்கவேண்டும். பாபத்தினின்றும் கிலேசங்கள் ஒன்றும் நீங்கினவனாய் மோக்ஷத்தை அடைவான். ஸ்ரீவிஷ்ணுபகவானை ஸ்மரிக்கிற மனிதன் சகலமான பாவம் போய் மோக்ஷத்தை யடைகிறான்.

ஹரி

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமஹாவிஷ்ணு கல்கியாவதாரம்.

ஸம்ஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

# கல்கிபுராணம்.

இந்திராதிதேவர்களும், முனீஸ்வரர்களும், லோகபாலர்களும், மூவுலகிலுள்ள ஜனங்களும், வேதங்களாலும், உபநிஷத்துகளாலும், சாஸ்திரங்களாலும், துதிசெய்யப்பட்ட கியானனந்தசுவரூபியாயிருக்கிறதும் விக்கினங்களைப்போக்கடிக்கிறதும் எந்தப் பரம்பொருளோ அந்தபரமாத்துமாவை தங்கள் தங்கள் சித்தியின்பொருட்டு வணங்குகிறார்கள்.

எந்த பகவானுடைய கையாகிற பயங்கரமாகிய சர்ப்பங்களுடைய ஜ்வாலையினால் பிரகாசிக்கிற சரீரங்களை யுடையவர்களாகியும் பூமியிலுண்டான ஜனங்களுக்குத் தீங்குண்டாக்கின ராஜாக்களை சிக்ஷிக்க இப்பூமியின்கண் கல்கியாவதாரம்பண்ணின பகவான் நம்மை ரக்ஷிக்கக்கடவது என்று சொன்னது.

## புராணத்தின் வரலாறு.

நைமிசாரணிய வாசிகளாகிய சௌனகாதிமஹாரிஷிகள் சூதபுராணிகரைப்பார்த்து மேல்வருமாறு வினவினர்.

லோமசம்ஹா ரிஷியின் பிள்ளையாயும் முக்காலங்களை யுணர்ந்தவராகியும் புராணங்களை யுபதேசிப்பவராகியும் விளங்கும் சூதபுராணிகரே எங்களுக்கு பகவத்குணங்களை பிரதிபாதிக்கின்ற கதையைச் சொல்லவேணும். ஓ மஹாநுபாவா ஜகத்துக்கெல்லாம் பிரபுவாகியகலியானவன் யார், எவ்விடத்தி லுதித்தார் நித்தியநைமித்திக தர்மங்களெல்லாம் எப்படி

கலியினால் நாசம்பண்ணப்பட்டது என்று கூறிய சௌன்காதிரிஷிக ளுடைய வாக்கியங்களைக்கேட்ட சூதபுராணிகர் ஒரு முஹூர்த்த மாலோசித்து ஸ்ரீஹரியை தியானம்பண்ணி மயிர்க்கூச்சலுண்டாக

ரிஷிகளைப்பார்த்து சூதபுராணிகர் சொல்லுகிறார். மேலே நடக் கப்போகிற பரமாச்சரியமான சரித்திரத்தைக் கேளுங்கள் இது முன் னால் சிருஷ்டிகர்த்தாவான பிரம்மாவானவர் நாரதரைக்குறித்துச்சொல் லியருளினார். நாரதர் வேதவியாசருக்குச் சொல்லி அருளினார். வியா ஸர் தன்பிள்ளையான பிரும்பராதருக்குபதேசித்தார். அந்த பிரும்பராதர் அபிமன்யு புத்திரரான விஷ்ணுராதருக்கு மஹாஜனங்கள் நிறைந்த சபையில் பதினெண்புராண தர்மங்களையும் சூக்ஷம தர்மங்களையு முபதேசித்தார். அந்தவிஷ்ணுராதாவானவர் மோக்ஷமடைந்த ஏழாம் நாளில் மார்க்கண்டேயர்முதலான மஹாரிஷிகளுக்கு பிரும்பராதரென் கிற சுகபிரும்ம•முபதேசித்தது. அந்த சுகருடைய முகத்திலிருந்து பவிஷ்யத்தாய் நடக்கப்போகிறதர்மங்களையும் பகவத்சம்பந்தமான சரித் திரங்களையும் கேட்கிறவர்களுடைய பாபத்தைப்போக்கி மோக்ஷத்தை யளிக்கும் ஸத்கதைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள் மஹிமையுள்ள பிரம்மரிஷிகளே பரமாத்மாவான ஸ்ரீகிருஷ்ணன் விபவாவதாரமாய் இவ் வுலகின்கண் ஸாதுக்களை ரக்ஷித்த பிறகு தன்ஸ்தானமாகிய வைகுண் டம் எழுந்தருளின பிறகு கலியானவர் அவதாரஞ்செய்தார்.

கலியின் உற்பத்தி முடிந்தது.

---

பிரளயம் முடிந்தவுடன் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மாவானவர் தன் பின்பாகத்தில் கோரமாயும் கறுத்ததாயுமிருக்கிற பாபத்தை சிரு ஷ்டித்தார். அதற்குத்தான் அதர்மமென்றுபெயர். அந்த அதர்மத்தி னுடைய வம்சத்தைச் சொன்னமாத்திரத்தில் ஸமஸ்தபாதகமும் நசித் துப்போய்விடும். (ஸேசாதார்ம இதிகியாத꞉ தஸ்யவம் ஸானுகீர்த்தனாத் ஸ்ரவணாஸ்த் மரணால்லோக꞉ ஸர்வபாபை꞉ ப்ரமுச்யதே.) அந்த அதர் மத்துக்கு பொய்யை பாரியாளாயும் அதிக கோபத்தையுடைய டம் பத்தை பிள்ளையாயும் மாயை தன்னுடன் பிறந்தவளாயும் அவள் வயிற் றில் லோபமென்கிற பிள்ளையும் ஹிம்சமென்கிற பெண்ணையும் உண் டுபண்ணினார் லோபமும் ஹிம்சையும் கல்யாணம் பண்ணிக்கொண்டு குரோதமென்கிறபிள்ளையை யுண்டுபண்ணினார்கள். அந்தகோபமானது ஹிம்சையென்கிற பெண்ணின்வயற்றில் கலியை யுண்டுபண்ணிற்று.

## கலிபுருஷ லக்ஷணம்.

இடதுகையில் தன்னுடைய லிங்கமும் அஞ்சனம்போன்ற சரீரமும் நீண்ட வயிற்றையும் பயங்கரமானமுகமும் எப்பொழுதுமசைந்து கொண்டிருக்கிற நாக்கும் துர்க்கந்தமான சரீரமும் சூதாடல், ஸ்திரீ சம்போகம், கள்குடித்தல், முதலான கெட்ட நடக்கைக்கு இருப்பிடமாயிருக்கிற ரூபத்தை யுடையது.

அந்த கலிபுருஷன் தன்னுடன் பிறந்தாளான மிருக்த்தியின் வயிற்றில் பயமென்கிறபிள்ளையும் மிருத்யுவென்கிற பெண்ணையும் உண்டுபண்ணினான். மேற்சொன்ன பயமும், மிருத்வியும் மணந்து நரகமென்கிற பிள்ளையை உண்டுபண்ணிற்று. அந்த நரகமானது யாதனையென்கிற பெண்ணை மணந்து அவளிடத்தில் எண்ணிக்கையில்லாத பெண்ணையும் பிள்ளையும் உண்டாக்கிற்று. இப்படி கலியின்குலத்தில் பிறந்த அனேக பிள்ளைகள் தர்மத்தையும், யாகத்தையும், போகத்தையும், தானத்தையும், மானத்தையும், ஆசாரத்தையும், கோசாரத்தையும், தூஷித்துக் கொண்டும் மனோவியாதி-ரோகம் - துன்பம்-பயம்-துக்கம் முதலானதுகளை யுண்டுபண்ணிக்கொண்டும் உலகமுழுதும் பரவி யிருக்கிறார்கள்.

## கலியிலிருக்கும் முறைமைகள்.

கலியின்முதல் பாதத்தில் அந்தந்த காலத்துக்குண்டான ஆசாரமில்லாதவர்களாயும், சஞ்சலபுத்தி யுள்ளவர்களாயும், எக்காலத்திலும் ஸ்திரீகளிடத்தி லாசையுள்ளவர்களாகியும், பெருமைக்காசாரம் பாராட்டுபவராயும், கெட்ட நடவடிக்கை யுள்ளவர்களாகியும், தாய்தந்தைகளைக் கொல்பவர்களாயும், வேதமில்லாதவர்களாகியும், சூத்திராளை யடுத்தவர்களாகியும், குதர்க்கவாதிகளாகியும், தர்மத்தை விக்கிரயம்பண்ணுமவர்களாகியும், தர்மமில்லாதவர்களாயும், வேதவிக்கிரயம் பண்ணுமவர்களாகியும், அல்பபுத்தியுள்ளவர்களாயும், எண்ணெய்முதலான ரசங்களை விற்பனை செய்பவர்களாகியும் மாம்ஸத்தை விற்பனை பண்ணுகிறவர்களாகியும், கொடூரமான நடக்கையுள்ளவர்களாயும், சிச்சினோதரத்தை பாராட்டுவோராயும், அயல்மாதரையே விரும்பி, மதத்தினால் ஜாதிபேதமில்லையென்று சொல்பவராயும் குறைவான அங்கமுடையவராயும், மூடர்களாகியும், டம்பத்திற்காக மடாதிபதியென்றும் பெயரை வகித்துக் கொண்டும் பதினாறுவயதுக்குள் பிள்ளைமுதலானதுகளை யுண்டுபண்ணு

மவர்களாகியும், தன்பாரியாள் வழியை அடைந்தவர்களாகியும் பிதா வின்குலத்தில் பிறந்தவர்களைத் தூஷித்துக்கொண்டும், கலகத்தில் விருப்பமுள்ளவர்களாயும், இருப்பார்கள்.

கேளுங்கள் தபோதனர்களே கலியுகத்தில் ஸ்திரீகள் வேசிகளைப் போலவும் வேசிகளெல்லோரும் குலஸ்திரீகளைப்போலுமாவார் சூத்திரரெல்லாரும் தானம்வாங்குவர் வானத்தில் ஆச்சரிய கரங்களானஉற்பாதங்களும் பூமிகள் அற்பபலனு முண்டாகும் ராஜாக்களால் ஜனங்கள் பீடிக்கப்படுவார்கள். பிராமணர்கள் அன்னம்விற்பவராயும்,மந்திரசூனியர்களாயும், மாதர்கள் பதியின் தர்மங்களை இழந்தவர்களாயும், தன் குலபாஷைகளை இழந்து ஹீனபாஷையில் விருப்பமுள்ளவர்களாயும் ஹீனஸாவகாசியாயு மாவார்கள். கலியின்இரண்டாம்பாதத்தில் விஷ்ணுவின்களை குறைந்தும் அல்பதேவதைகள் அதிக சக்தியுள்ளதுகளாயும் விளங்கப் போகின்றன. மூன்றும்பாதத்தில் விஷ்ணுவென்கிறபேர் மறைந்து ஜாதி பேதமில்லையென்கிற விஷயத்தைப்பற்றி போர்புரிந்தும் ப்ரஹ்மைவாஹமஸ்மி என்கிற விஷயத்தை மாத்திரம் பாராட்டிக்கொண்டும் இருப்பார்கள் நான்காம்பாதத்தில் எல்லாம் ஒரேமாதிரியாயும், யெகமேவாத்விதீயம் என்கிறபடியே ஓரடி அளவுள்ளவர்களாயு மிருப்பார்கள். தர்மமென்கிறபெயர் மறைந்து எங்கு மதர்மம் மேலிட்டு இப் பூமண்டலமானது விளங்கப்போகிறது. பூமியெல்லாம் கொடியர்கள் நிறைந்தொருவருக்கொருவர் பக்ஷித்துக்கொண்டு விளங்குவார்கள்.

## பூமாதேவி தேவதைகளோடு பிரமனிடத்தில் முறையிடல்.

சுவதாகாரமான பிதுர்வின் ஆகாரமும் சுவாஹாகாரமானதேவதைகளின்ஆகாரமும் ஔஷட்டயென்கிற மந்திரமும் ஓங்காரமென்கிற வேத சாரமுமில்லாமல் உலகமெல்லாம் நாஸ்திகம் மேலிட்டு வடவா அனல் போல் எரியப்போகிறபடியால் தேவதைகள் பெரும்பசியால் பீடிக்கப் பட்டும் பெருந்துயரத்தையும் அடைகிறபடியால் பூதேவியை முன்னிட்டுக்கொண்டு லோககர்த்தாவான பிரமனை சரணமடைகிறார்கள்.

## பிரும லோகவர்ணனம்.

ருக் யஜுஸ் ஸாம அதர்வணம் உபநிடதம் முதலான வேத ஒலியினால் நிறைந்தும் ஹோமப்புகைகளாலும் நாரதர்முதலான ரிஷிகளா

ளும் சுவர்ணமயமான மேடைகளாலும் யாககுண்டங்களாலும் யூபஸ்தம்பங்களாலும் புஷ்பங்கள் பழங்கள் தாமரையோடைகள் ராஜ ஹம்சங்கள் ஸாரஸபக்ஷிகள் நிறைந்தும் மந்தமாருதங்களா லலேக்கப்பட்ட கோடிகளில் நிறைந்தவண்டுகளாலும் பறவைகளின்னெலியைக்கண்டால் அத்திகளை அழைப்பது போலவு மிருக்கிற பிரமனுலகத்தைக்கண்டு தேவதைகளால் சரணமடையப்பட்ட பொற்றாமரைபோன்ற திருவடிகளை வணங்கினார்கள்.

## கல்கிபுராணம் முதலத்தியாயம்

## முடிந்தது.

## விஷ்ணுவிடத்தில் பிரும்மா கலியின் தோஷங்களைச் சொல்லுகிறார்.

### இரண்டாம் அத்தியாயம்.

### சூதபுராணிகர் சொல்லுகிறார்.

பிறகு, பிரமனைவணங்கி தங்கள் குறையைச் சொன்னார்கள் அவ்வாக்கியத்தைக்கேட்ட பிரமன் துபரத்தை அடைந்து அத்தேவர்களோடு பார்க்கடலையடைந்து சொல்லுகிறார்கள். ஓய் தேவாதிதேவனே வேதங்களாலும் உபநிடதங்களாலும் அறியக்கூடாத மகிமையுள்ள பரப்பிரும்மே முக்குணங்களை யுண்டுபண்ணி அதினுடைய பிரபாவத்தால் உலகங்களில் சராசரங்களை யுண்டுபண்ணியும் அதைரக்ஷித்தும் அதை பக்ஷித்தும் பார்கடலில் அனந்தன்மேல் பள்ளிகொண்டு யோக நித்திரையை அடைந்த அனந்தனே வணங்குகிறேன். ஆதியும் அந்தமும் இல்லாமல் நித்தியமாய்வாழும் நித்தியனே வணங்குகிறேன். உலகங்களுக்கு பிதாவாய் விளங்கும் பரமாத்துமாவே வணங்குகிறேனென்று வணங்கி தேவர்களுடைய கஷ்டத்தை விண்ணப்பஞ்செய்ய அவ்வாக்கியத்தைக்கேட்ட புண்டரீகாக்ஷன் சொல்லுகிறார்.

ஓய் கமலாஸனே நான் சம்பளமென்கிற சிம்மளத்திவில் பரமபாகவத சிரோன்மணியான விஷ்ணுயசஸ்ஸின் பாரியையான ஸுமதியின் இஷ்டத்தைப் பூரணம்செய்ய பிராதாக்கள் நால்வருடன் ஆவிர்பாவம் பண்ணி கலியை நாசம்செய்கிறேன், ஓய்சதாநந்தரே என் பாரியான

லக்ஷிமியானவள் யென்னை யொருக்காலும் பிரியாதவளாதலால் அந்த சிம்மளத்தீவில் பிருஹத்திரதன் பாரியையான் கௌமுதியி னுதரத்தில் பத்துமாவதி யென்றும் பெயரை அடைந்து பிறக்கப் போகின்றுன் நீங்களும் தங்கள்தங்கள் அம்சத்தால் எனக்கு கிங்கராளாய் இஷ்டப்படி உற்பத்தியாகக் கடவீர்கள் நான் கலியை நாசஞ்செய்து மறுபடியும் கிருதயுகத்தை உண்டாக்கி தர்மத்தை நாலுபாதத்தால் நடக்கச்செய்து யாககர்மத்தினுல் உங்களுக்கும் ஆகாரத்தைக்கொடுத்து புனர்ஜனன மில்லாத (நசபுனராவர்த்தே) ஸ்ரீவைகுண்டத்தை யடைகிறேன். என்று தேவர்களுக் கபயப்பிரதானம்பண்ணி யருளினுர். கேளுங்கள் சௌன காதிரிஷிகளே என்று சூதபுராணிகர் சொன்னுர். இவ்வாக்கியத்தைக் கேட்ட தேவர்கள் பரமசந்தோஷத்தை அடைந்து சுவர்க்கலோகத்தை யடைந்தார்கள். பிரமனும் சத்தியலோகத்தையடைந்தான்.

பிறகு, ஸ்ரீமந்நாராயணனுனவன் பக்தஸம்ரக்ஷணம் பண்ணக் கருதி சுமதியின் கர்ப்பத்தை யடையும்போதன்றிராத்திரி சுமதியான வள் தான்கண்ட சொர்ப்பனத்தை தன்பர்த்தாவினிடத்தில் சொல்லு கிறுள் சுவாமி பிராணநாதா இன்றிராத்திரி என்கர்ப்பத்தில் யாரோ ஒருமகாபுருஷன் பிரவேசித்ததுபோல் சொர்ப்பனம் கண்டேனெனச் சொல்லக்கேட்ட விஷ்ணுயசஸ்ஸாநவர் சொல்லுகிறுர். கேளும் ஓ ஸ்ரீ ரத்தினமே நான் தனியாய் ஒருதபோவனத்தை நாடிச் செல்லுங்காலத் தில் அவ்விடத்தில் அனேகமான பிராமணுத்தமர்கள் ஒரு பிரும்மரிஷி யிடத்தில் தாங்கள் தங்கள் குறையைச் சொல்லிக்கொள்ள அவர் அவர் களுக்கு அபயப்பிரதானம்பண்ணி உங்கள்கோரிக்கையும் விஷ்ணுயசஸ் ஸின் அபீஷ்டத்தையும் நிறைவேத்தி விடுகிறேனென்று சொன்னதாய் ஒருசொர்ப்பனம் கண்டேன் என்றுசொன்ன பர்தாவின்வாக்கியத்தைக் கேட்ட சுமதியானவள் ஆனந்தம்கொண்டு சொர்ப்பனத்தின்பலன் தெரி யாமலிருக்கிறபோது அசரீரிசொன்னவாக்கியமாவது ஓய் புண்ணியதம் பதிகளே நீங்கள்பண்ணின தவப்பலத்தினுலே யுங்கள்கர்ப்பத்தில் சர்வ சரண்ணியனுன சர்வேஸ்வரன் கலியின்கொடுமையையடக்க ஆவிர்பவி த்திருக்கிறுரென்றது இப்படி இருக்குங்காலத்தில் பனிரெண்டுமாதங் கழிந்தபிற்பாடு ஸ்ரீமந்நாராயணன் உத்தமதினத்தில் ஆவிர்பாவம் செய் யும்போது நக்ஷத்திரதேவதைகள் ராசிதேவதைகள் யக்ஷர்கள்முதலான முப்பத்துமுக்கோடி தேவர்களும் பிர்ம்மருத்திராதிகளு மொன்றுய்ச் சேர்ந்து நிர்த்தனம்பாட்டுமுதலிய காரியங்களைச் செய்துக்கொண்டு ப்ரமானந்த மடையுங்காலத்தில் வைசாக சுக்கில துவாதசியில் அவ

தரித்த ஸ்ரீ ஹரியை சதுர்புஜ பஞ்சாயுதங்களோடு பிரகாசிக்கிற பரமாத்துமாவைக்கண்ட புண்ணியதம்பதிகள் துதிசெய்ய அம்பிகையானவள் நாளச்சேதம் செய்யவும் ஸாவித்திரியானவள் புண்ணியதீர்த்தங்களா லபிஷேகம் பண்ணவும் பூதேவியானவள் அமிருதபிராசனம் பண்ணிவைக்கவும் தாயான சுமதியானவள் மங்களங்கள் பாடக்கேட்ட தாதாவானவன் தன் சேவகர்களையனுப்பி தேவதைகளாலறியக்கூடாத சதுர்புஜத்தை மறைத்து மனுஷியரூபத்தை யடையும்படி பிரார்த்திக்க அவ்வாக்கியத்தைக்கேட்ட மாதவன் இரண்டு புஜங்களோடு விளங்கி பிராகிருத சிசுவைப்போல் விளங்க அந்த ரூபத்தையுங்கண்ட மாதாபிதாக்கள் ஆனந்தமடைந்து பகவான் மாயையினுல் பூர்வத்தில்கண்ட உருவத்தை மறந்து அக்குழந்தைக்கு ஜாதகர்மாதிகளைப் பண்ணுவித்து பிராமணர்க்கு அநேகங்கோடி பசுக்களைத் தானம்பண்ணினுர் பிறகு, அக்குழந்தைக்கு, ருக்கு, யஜுஸ், ஸாமம் முதலானதுகளை யறிந்த பிராமணுளைக்கொண்டு நாமகரணஞ்செய்வித்தார்.

அப்பா லந்தபகவானை தரிசிக்க இராமன், கிருபாசாரியர், வியாசர், மூவரும் அசுவத்தாமாவுடன் சன்னியாசி வேடம்பூண்டு சம்பல கிராமத்தை யடைந்து விஷ்ணுயசஸ்ஸான மனையை நாடிவந்தார்கள். அப்போதந்த விஷ்ணு யசஸ்ஸானவர் சூரியகாந்திக்கி திருசமான திருமேனிகளைக்கண்டு பரமானந்தங்கொண்டு அர்கியபாத்தியா சமனீயங்கள் முதலான ஷோடச உபசாரங்களைப்பண்ணி உபசரித்தார். பிறகு குழந்தையுருவத்தை யடைந்த நாராயணனைக்கண்டு வணங்கி கலியின் கொடும்மையை அடக்கவந்த மஹாபுருஷனென்று நினைத்து அந்நால்வரும் கல்கியென்றும் நாமமிட்டுக் கொஞ்சகாலம் அவ்விடத்தில் வசிக்கும்போது சுக்கிலபக்ஷ சந்திரன்போல் தன் பிராதாக்களான கவி பிராக்கிய சுமந்திரர்களென்ற மூவருடன் வளர்த்துவந்தார்கள். கார்கிய பர்கிய விசாலனென்ற கியாதிகளுடனும் விளங்கும்போது விசாகயூபனென்கிற இராஜாவினுல் பரிபாலிக்கப்பட்ட பிராமணர்கள் யெல்லோரும் விஷ்ணுயசஸும் அக்குழந்தையின் தைரியத்தையும் குணங்களையும் பராக்கிரமத்தையுங்கண்டு குழந்தாய் இருபிறப்பாளருக்கு முக்கியகருமமான உபநயன கர்மத்தைச்செய்யநினைக்கிறேனென்று கூறி பூசுரானை முன்னிட்டுக்கொண்டு உபநயனத்தை செய்துவைக்க வாரம்பிக்கும் காலத்தில் கல்கியானவர் பிதாவைப்பார்த்துக் கேட்கிருர்.

ஓய்பிதாவே வேதமாவதுயென்ன சாவித்திரியாவதென்ன யக்கிய சூத்திரமாவது யென்ன எனக்கறிவிக்க வேண்டுமென்ன இந்தவாக்கியத்

தைக்கேட்ட பிதாசொல்லுகிறார். குழந்தாய் வேதமாவது ஹரியின்வாக்கும் அந்த வேதத்துக்குசாவித்திரியானவள் மாதாவாயும் யக்கிய சூத்திரமாவது திரிகுணாத்துமகமாகியும் பிரும்ம தேஜஸ்ஸானது அந்த யக்கிய சூத்திரத்தா லுண்டாகிறது. அந்த சூத்திரத்தால் பிராமணத்தன்மையை அடைகிறார்கள். பத்து வாக்கியங்களால் எவன் சம்ஸ்காரத்தையடைகிறானோ அவன்தான்பிராமணன் மூன்றுலோகங்களையும் ரக்ஷிக்கிறதுவேதம். (வெமெஷூஂ வொஷ ்ரிதெமொசொ வெமெஷூஂஹூாவ்ரு தெஜமசு.) வேதமறிந்த பிராமணர்கள் ஹரியைபூசைபண்ணுகிறார்கள் ஆதலால் யக்கியம், தானம், தபஸ் இதுகளையறிந்த பிராமணனோடும் பந்து மித்திரர்களோடும் உனக்கு உபநயனகர்மம்செய்யவிரும்புகிறேன் என்ற பிதாவின் வாக்கியத்தைக்கேட்ட பிள்ளை சொல்லுகிறான். ஓய் ஜனகரே பிராமணனுக்கு பத்து யக்கியமாவதுயென்ன பத்துகர்மமாவதுயென்ன, ஹரியை எதினால் பூஜிக்கிறார்கள். பிதாசொல்லுகிறார் பிரும்மதேஜஸானது பிராமணனிடத்தினின்று வருகிறது.

முக்காலசந்தியாவந்தனத்தாலும் ஸாவித்திரிஜபத்தாலும் தபஸ்,தானம், ஸத்தியவாக் முதலான உத்தமகர்மத்தாலும் ஸத்பிராமணனாகிறான். (ஜூநஙஜாயதெஸஹ்ஃ கூொஜாயதெஷிஜஃ। வெஷவாசெந விப்ர ஹுவ ஹூஜூாநெநவ ாஹூணஃ) புத்திரன்சொல்லுகிறான் உத்தம பிராமணன் எவ்விடத்தில் வஸிக்கிறான் எதனால் யெல்லா உலகத்தையும் உத்தரிப்பித்து இஷ்டத்தைகொடுக்க வல்லவர்களாகிறார்கள். பிதாசொல்லுகிறார் குழந்தாய் முதல் மூன்றுயுகத்திலும் மேற்சொன்ன உத்தம கர்மத்தாலும் பக்திமுதலானயோகத்தாலும் பரம்புருஷனை பஜிக்கிறார்கள் நான்காவதுயுகமான கலியில் இருபிறப்பாளர் தந்தர்மத்தைவிட்டும் அதர்மத்தி லாசையுள்ளவர்களாயும் ஆசாரத்தைக் கடந்தவர்களாயும் இந்த கலியுகத்திலாகிறார்கள் தங்கள்வயர் நிறைய சூத்திரஸேவை பண்ணி ஜீவிப்பார்கள் இவ்வாக்கியங்களைக்கேட்ட கல்கியானவன் கலியை நாசம்பண்ணும் பொருட்டும் வேதசாஸ்திரங்களை யதிகரிக்கும் பொருட்டும் குருகுலவாசம்பண்ண இச்சைகொண்டான்.

## இரண்டாவது அத்தியாயம் முடிந்தது.

ஸ்ரீ சூதபுராணிகர் சொல்லுகிறார் ஓ சௌனகாதிரிஷிகளே! அப்பால் அந்த கல்க்கியானவர் தான்வேதாத்தியயனம் பண்ணும்பொருட்டு மஹேந்திரபர்வதத்தை யடைந்திருக்கிற பரசுராமரை நாடிவரும்போது அப்பரசுராமர்கண்டு பரமானந்த பரிதராய், கண்மணியனையீர் உமக்கு வேதசாஸ்திரங்களை யுபதேசிக்க நானிவ்விடத்திலிருக்கின்றேன் உமக்கு நான் குருவென்று அறிவீராக. நான் வேதங்களையும் சாஸ்திரங்களையும் தனுர்வேதங்களையும் கற்று இப்பூமண்டலத்தில் அரசர்களில்லாமற் செய்து இருபத்தொரு தலைமுறைக்கிப்பிற்பாடு இப்பூமியெல்லாம் காசிபரிஷிக்குத் தானம்பண்ணிவிட்டு இம்மலையில் வசிக்கின்றேன் என்று கூறினார். இதனைக்கேட்ட கல்க்கியானவர் சாஷ்டாங்க நமஸ்காரம்பண்ணி இருகரங்குவித்து நின்றார். அப்பாலந்தபரசுராமன் அக்குழந்தைக்கு நான்கு வேதங்களையும் வேதாங்கங்களையும் அறுபத்துநான்கு கலைகளையும் உபதேசித்தார்.

கல்கியானவர் அவ்வகளையெல்லாம் சந்தேகமறக் கற்றுணர்ந்து இருகரங்குவித்து ஸ்வாமி பரமகுருவே எனக்கு க்ஷேமத்தைக் கொடுக்கத்தக்கின குருதக்ஷிணை என்னிடத்திலிருந்து ஏதாவது ஸ்வீகரிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனர். இதனைக்கேட்டபரசுராமர் சொல்லுகிறார் கேளாய் குழந்தாய் பூர்வத்தில் க்ஷீராப்திநாதனான ஸர்வேசுவரன் பிரமனால் கலியின்கொடுமையைத் தீர்க்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறபோது அப்படியே அபயப்பிரதானம்பண்ணி தான் ஸிம்மள க்ஷேத்திரத்தி லவதாரம்பண்ணினார். அவர் நீராகின்றீர் என்னிடத்தில் வேதமுதலிய கலைகளைக்கற்றதே எனக்கு குருதக்ஷிணையாகும் எல்லா ஆயுதங்களையும் அடைந்தும் ஸிம்மளத்தீவில் பத்துமாவென்றும் பெயரையுடைய பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொண்டும் வீற்றிருந்து திக்குவிஜயஞ்செய்து கொடிய அரசர்களைக்கொன்று தர்மத்தை நிலைநாட்டுவதே எனக்குக் குருதக்ஷிணையென்று சொன்னார். இவ்வாக்கியத்தைக் கேட்ட கல்க்கியானவர் ஸாஷ்டாங்க பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்து ஆசாரியனிடத்தில் அனுக்கிரகம் பெற்றுக்கொண்டு பில்வோதக க்ஷேத்திரத்தில் பரமசிவனைத் தியானித்தார். பார்வதிநாதனையும், உலகங்களுக்கு நாயகனையும், சராசரங்களை ரக்ஷிப்பவனையும், வாசுகியைப் பணியாய்ப் பூண்டவனையும், மயானவாஸியாயும், யோகேசுவரனையும், சந்திரகலையை சிரசிற் கொண்டவனையும், பிரம்மவிஷ்ணு சிவ சுவரூபனையும், பிருதிவியாதி பஞ்சபூதங்களை யுண்டுபண்ணினவனையும், தன் சக்தி

யினால் சூரியன் சந்திரன் அக்னி முதலான தேவர்கள் ஒளியைப்பெற்று விளங்கச்செய்கிறவனாயும் உள்ள அத்தேவனைத் துதித்து வணங்கினார். இவர் துதியைக்கேட்ட பார்வதீசன் சந்தோஷப்பட்டு பார்வதி சமேதராய் பிரஸன்னமாய் கல்க்கியின் சரீரங்கள் யாவையும் ஸ்பர்சித்து குழந்தாய் உன்மனதிலிருக்கும் இஷ்டங்களை யடையக்கடவாய் உன்னால் செய்யப்பட்ட ஸ்துதியை யாவனொருவன் சொல்கிறானோ அவன் பூமியில் வேண்டுவதான சுகங்களையும் மோக்ஷத்தையு மடையக்கடவன். என்னால் கொடுக்கப்பட்ட கருடசம்பந்தமான குதிரையையும் ஸ்வர்க்கியனான கிளியையும் இம்மூவுலகங்களையும் ஜயிக்கவல்ல இந்த மணிமயமான உறையுடன் கூடினகத்தியையும் வாங்கிக்கொள்ளெனக் கொடுத்து மறைந்தார். கல்க்கியானவர் பரமசிவனால் கொடுக்கப்பட்டவைகளை வாங்கிக்கொண்டு அப்பரமசிவனை நமஸ்கரித்து மனோவேகமாய்ப்போகிற குதிரையின்பேரிலேறி ஸிம்மள க்ஷேத்திரத்திற்குவந்து மாதாவையும் பிதாவையும் பிராதாக்களையும் வணங்கி பரசுராமனால் சொல்லப்பட்ட யாவையும் பரமசிவனால் தானடைந்த புரவி படைமுதலானதுகளையுங் காண்பித்தார் கேளும் சௌனகாதிரிஷிகளே என்று சூதபுராணிகர் சொல்லுகிறார்.

அப்பால் கல்க்கியின் பெருமையைக்கேட்ட ஜனங்கள் ஆவலுடன் வந்து கல்க்கியின் தேஜஸ்ஸையும் ரூபத்தையும் குணங்களையும்செய்தியையும்கண்டு இது ஓர் அவதார விசேஷமெனக்கூறினர். இவ்வசனங்களை விசாகதத்தன் என்ற அரசன்கேட்டு பரமானந்தங்கொண்டு கல்க்கியைக் காணவேணுமெனக் கருதினான் அப்பாலந்த கல்கியானவர் தன் கத்தியுடன் எல்லாயுத்தங்களிலும் ஜயங்கொள்ளத்தக்கின குதிரையின் பேரிலேறிக்கொண்டு பரிஜனங்களோடு துஷ்டராஜர்களை யொழிக்க எத்தனித்தார். அப்போது விசாகதத்தன் தன் மந்திரிமார்களுடன் புறப்பட்டுவர இருவரும் வழிநடுவில் சந்தித்து வொருவரையொருவர்கண்டு சந்தோஷமடைந்தார்கள். அப்பால், அந்தவிசாகதத்தனானவர் கல்க்கியைக்கண்டு நமஸ்கரித்து தன் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போய் வருணாசிரமதர்மங்களைத் தனக்கு உபதேசிக்கப்பிரார்த்தித்தான். அப்படியே கல்க்கி வர்ணாசிரம தர்மங்களை அவ்வரசனுக்கு உபதேசித்துக்கொண்டிருந்தார். கேளும் ரிஷிகளே பிறகு கல்க்கியானவர் அவ்வரசனைநோக்கி ராஜஸூயங்களாலும், அசுவமேதங்களாலும், என்னை பஜிக்கவேண்டியது. நான் காமரூபியாய் ஸர்வ கர்மசமாராத்தியனாய் இருந்துக்கொண்டு சூரியசந்திரகுலத்தில் பிறந்த மருவென்கிற தேவர்களை

நிலை நிறுத்தி மறுபடியும் கிரேதாயுகத்தை யுன்னி நான் வைகுண்ட லோகம்போய் சேரப்போகிறேன் என்று சொன்ன கல்க்கியின்வாக்கியத் தைக்கேட்ட விசாகதத்தனுனவன் எழுந்து வணங்கிநமஸ்க்கரித்தான். அந்த கலியின்குலத்தை வேர்பிடுங்கவந்த கல்க்கியானவர் ஜனங்கள் சந் தோஷிக்கத்தக்கின உத்தமமான தர்மங்களையுரைத்தார்.

கல்கிபுராணத்தில் மூன்ருமத்தியாயம் முடிந்தது.

## நான்காவதத்தியாயம்.

### கல்கியினுல் சொல்லப்பட்ட தர்மகதை.

சூதபுராணிகர் சொல்லுகிருர். பிறகு, ஆயிரங் கதிரோன்போல் சபாமத்தியில் விளங்குகிற கல்க்கியானவர் அவ்வந்தணர்களைக்குறித்தும் அரசர்களைக்குறித்தும்,ஒருவாக்கியம் சொல்லுகிருர், கேளுங்கள் பிராம ணுேத்தமர்களே பிரளயங்கள் மூன்றுண்டு. அதாவது யுகப்பிரளயம், தேவப்பிரளயம், பிரும்மப்பிரளயமாம். எங்கு மிருளால் மூடப்பட்டு நானொருவன்மாத்திரம் யோகநித்திரையையடைந்து உலகதந்திரமில்லா தவனுய் விராட்டென்னும் பெயரையடைந்து ஆயிரம் தலை இரண்டாயி யிரம்கால்கள் இரண்டாயிரம்கைகள் உடையவனுயிருப்பேன். அப்பால் என்னுடைய "ஸஹஸ்ரஶீஷா புருஷ: - ஸஹஸ்ராக்ஷஸ்ஸஹ ஸ்ரபாத்" என்கிறபடி ரூபத்தோடு விளங்குவேன். ஓய்பூசுரர்களேஅந் தவிராட்டின்சரீரத்தினின்று பிரம்மாவும்அந்தவிராட்டினின்றுசங்கரனும் பிறந்தான். "நாராயணாத் ப்ரஹ்மாஜாயதே॥நாராயணாத்ருத்ரோ ஜாயதே" இன்னுமநேகதேவர்களுமுண்டு பண்ணப்பட்டார்கள். அப்பே ர்ப்பட்டவிராட்டானதுகாரணவசத்தால்மனிதனுய்ப்பிறந்துசாதுக்களை ரக்ஷித்து அசாதுக்களைசிக்ஷிக்கும், "பரித்ராணாய ஸாதூநாம் விநா ஶாய ச துஷ்க்ருதாம் தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்றபடிசொல்லுகிருப்போல்நான்சாதுக்களைரக்ஷிக்கஇப்பூமியின் கண்அவதாரம்பண்ணினேன் எந்தபிராம்மணர்கள் யக்கியம் நித்தியகர்மம்

முதலியஸத்காரியங்களைச் செய்கிறார்களோ அவர்கள் என்னுடையசரீரமாம். வர்ணாஶ்ரமாசாரேஷு நிஷ்டாஸ்ஸர்வே ஸனாதநா: பிரும்மருத்திரேந்திராதிகளும் என்னுடையசரீரமாம் (ஸம்மாநேந ப்ராஹ்மணாநாம்)யக்கியமுதலான கர்மங்களாலே என்னை சந்தோஷப்படுத்துகிறார்கள். வேதங்கள் நான்கும் எனக்குச் சரீரமாம். விஷ்ணுபுராணம் "வேதாத்மகோ ஹ்யஹம் விப்ரா:" எனக்கு பிராமணர்களே தேவதைக ளாவர் ப்ராஹ்மணா: மம தேவதா: ஆகையால் எல்லாபுவனங்களும்,என்னை வணங்குகின்றது நான் பிராமணரை வணங்குகின்றேன் என்று கல்கிசொல்ல விசாகதத்தனவன் வினவுகிறான். ஸ்வாமின் அந்தபிராமணருடைய மகிமையை அருளிச்செய்யவேண்டும். எப்படியிருந்தால் பிராமணனென்று சொல்லவேண்டும் எப்படி அவ்வந்தணர்கள் வேதவாக்கையே பிரமாணமாயுடையவர்கள் என்றனர். கல்க்கியருளிச்செய்கிறார். கேளும் விசாகதத்தனே என்னைசகலவேதங்களும் ஈஸ்வரனென்று சொல்லுகின்றது. அப்படிப்பட்ட வேதங்கள் அந்தணர்களால் அநேகவிதமாய் வெளியிடப்பட்டிருக்கின்றது. பிராமணருக்கு எது முக்கியமான தர்மமோ அதுவேஎனக்கு முக்கியமானதர்மம். எவர்கள் அந்தப்பிராமணர்களிடத்தில் பக்தியுள்ளவர்களோ அவர்களே எனக்கு பக்தர்கள் மேல்பாகமாய் மூன்றுதரம் சுத்தின சூத்திரத்திற்கு யக்கியசூத்திரமென்று சொல்லுவார்கள். க்ரந்தியோடுசேர்ந்த சூத்திரமானது உத்தமமாயாகிறது. க்ரந்தியானது பிரணவத்துக்கு சமானமாயாகிறது. கழுத்துமுதல் நாபிவரைக்கும் நீண்டிருந்தால் உத்தமம்.

இடக்கழுத்தில் பூணூலைக்கதித்து,வெள்ளைமண், பஸ்மம்,சந்தனம், முதலியவைகளால்பிராமணன் நெற்றியையலங்கரிக்கவேண்டும். ருக்வேதிகளும்,சாமவேதிகளும், யஜுர்வேதிகளும் நாபிவரைக்கும்,யக்கியசூத்திரத்தைத் தரிக்கவேண்டும். அதற்குக்கீழ்ப்பட்டால் ஆயுள்க்ஷயமாகும் நெற்றியில் கேசம்வரைக்கும் ஊர்த்துவபுண்டரத்தை மோக்ஷத்தை விரும்பினவர்கள் தரிக்கவேண்டும். பராசரஸம்ஹிதைமோக்ஷார்த்தீ யா
ஙவேணிக்ஷும் ஊர்த்வபுண்ட்ரம் ஸுசோபனம் ஆயுஷ்யம் ஶ்ரேயஸ்கரம் விஷ்ணோ:
ஸ்தாநம் ஸ்ருஷ்டம் ஸுநாஸிகம் என்றபடி ஊர்த்துவபுண்டரமானதுமூன்றங்குலப்பிரமாண முள்ளதாயும் திரிமூர்த்திகளுக்கு வாஸஸ்தானமாயும் மோக்ஷத்திற்கு இருப்பிடமாயுமுள்ளது. பிராமணர்களுடைய கைகளில் சுவாமும் வாக்குகளில் வேதங்களும் சரீரங்களில் எல்லாப்புண்ணியநதிகளும் நாபிகளில் இளைமுதலியநாடிகளும் கழுத்தில் சாவித்திரியும் மார்

புகளில் தர்மங்களும் பின்புறத்தில் அதர்மங்களும் வஸிக்கின்றன. அவர்கள் பூதேவர்களெனவும் வேதங்களால் கொண்டாடப் படுகிறார்கள். அவர்கள் உத்தம தர்மங்களை வெளியிடுகிறார்கள். பாலர்களானாலும் கியானத்திலும் தபசிலும் பக்தியிலும் சிறந்தவர்கள் என்னுடைய பக்தர்கள் அவர்களே அவர்களை ஸ்மரணை பண்ணினாலும் பாவங்களணுகாது அவர்களைக் காக்கும்பொருட்டு யுகங்கள்தோறும் பிறவியை அடைகிறேன். அவர்கள் யெல்லாவேதங்களைக் காட்டிலும் சிறந்தவர்கள் என்றுசொன்னார். கல்க்கியின்வசனத்தைக்கேட்ட விசாகதத்தனானவன் பரமானந்தங்கொண்டு அந்தமஹாபுருஷனை பிரதக்ஷிணம்பண்ணி வணங்கினின்றான் கேளுங்கள் சானகாதிகளே என்று அருளிச்செய்கிறார். அப்பாலந்தகல்க்கியானவர் அவனதசிரத்தையுடைய கிளியைப்பார்த்துச் சொல்லுகிறார்.

ஓகிளிராஜரே க்ஷேமமாய் வந்தீரா எந்த தேசத்தினின்றும் எதைப் புசித்துக்கொண்டும் வந்தீர். உம்மைக்கண்டால் தேவாம்சம் பெற்றவர் போல் தோணுகிறது என்றார். இவ்வாக்கியத்தைக்கேட்ட அஞ்சுகமானது நான் சமுத்திரமத்தியிலிருக்கிற சிம்மளத்தீவிலிருந்து வருகிறேன் அந்தத்தீவின் விசித்திரத்தைச்சொல்லுகிறேன் அன்புடன்கேட்கவேண்டும் அந்தத் தீவானது பொன்னுலகம் போன்றது அவ்விடத்திலுண்டாகும் யாகப்புகைகளால் தேவலோகம் மூடப்பட்டு ஒருவரையொருவர் அறியாமல் இதென்னமோ வென்று ஆச்சரியப்படும்படிக்கு நடந்துக் கொண்டுவருகிறது. யாகங்களால் பூசுரர்களெல்லாம் தங்கள்தங்கள் கருமங்களைச்செய்து வருகிறார்கள். அவ்விடத்தில் இருக்கும் ராஜபுவனங்கள் தேவலோகங்களெல்லாம் அழகில்சிறந்த வைகளாவென்று பார்ப்பதுபோல் ஆகாயத்தையளாவி இருக்கின்றன. மாதர்களெல்லாம் தங்க வண்ணம்போன்ற சரீரமுடையவர்களாய் முகிலை நிகர்க்கும் கூந்தலையுடையவர்களாய் குயில்போன்ற சொற்களை யுடையவர்களாய் உலகமெல்லாம் கொண்டாடும் உத்தமகுண முள்ளவர்களாய் விளங்குகிறார்கள். வாவிகூபங்களெல்லாம் ஜலசர பக்ஷிகளாலும் தாமரைமுதலிய புஷ்பங்களாலும் நிறைந்திருக்கின்றன. அப்புஷ்பங்களைக் கொய்ய பத்மினி ஸ்த்ரீகள் போகும்போது வண்டுகள் ஜலசரமென்று மதித்து முகங்களில் வசிக்க அம்மாதர்கள் விரல்களாகிற வலைகளால் வண்டுகளைப்பிடிப்பதுபோல் தெருத்துவார்கள் வேதகோஷ்டிகளால் விண்ணுலகங்களெல்லாம் செவிடுபட்டு விண்ணவர் தங்கள் பத்தினிகளோடு

இப்பட்டணத்தில் வசிக்கவருவதுபோல் ஆகாயத்திலிருந்து அன்னங்கள் வருகின்றன.

இப்படி விளங்கும் தேசத்தில் பிருகத்திரதனென்ற ராஜாவின் புத்திரியான பத்துமாவதியானவள் சகல கல்யாணகுணங்களோடு விளங்குகிறாள். அவளது செய்கைகளைச்சொல்லுகிறேன் அக்கன்யாரத்னமானவள் தனக்கு அனுரூபமான பர்த்தாவை யடையவேணுமென்று காமக்குரோதாதிகளை யடக்கி பரமயோகிபோல் தவம்புரிகிறநாளில் உமையோடுகூடியசங்கரன் அத்தவத்திற்கிணங்கி பிரசன்னராய் ஓ-பெண்களுள் நாயகமே உன் மனக்கோரிக்கையின்படி தேவர்களால் வந்திக்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணன் உன்னைமணம்புரிவார் அவருடன்கூடி எல்லாபோகங்களையும் அனுபவிக்கப்போகிறாய். கோபிகாஸ்திரீகளெல்லோரும் கிருஷ்ணனையே தெய்வமென்றுநம்பி தங்கள் ஆயுள்களெல்லாம் எப்படிக்கழித்தார்களோ அதுபோலவேகோபிகளெல்லாரும் உன் பர்த்தாவையடைய விருப்பங்கொண்டு நித்திய யௌவனத்தையடைந்து இவ்விடத்தில் வசிக்கப்போகிறார்கள். தேவதா ஸ்திரீகள், கந்தர்வ ஸ்திரீகள், முதலானவர்களும் உன்னோடுகூட விளையாடி உன்கிருபைக்கு பாத்ராளாக வேணுமென்று விரும்பப்போகிறார்கள் அந்தப் புருஷோத்தமனைத் தவிர உனக்கு மற்றொருவரும் பர்த்தாவாக மாட்டார். உன் ரூபலாவண்யங்களைக் கண்டு மோகித்து எல்லா அரசர்களும் உன்னை மணம்புரிய விருப்பங்கொண்டு இங்கே வசிக்கப்போகிறார்கள் நீ-இவ்வுலகின் கண்ணுள்ள சராசரங்களுக்கு மோக்ஷத்தைக்கொடுக்க வல்லவளாகிறாய் என்று வரங்கொடுத்து மறைந்தனர். அந்த பத்மாவதியானவள் இவ்வரத்தைப் பெற்று தன்னிருப்பிடம்போய்ச்சேர்ந்தாள். கேளும் சௌனகாதிகளே என்று சூதமுனிவர் அருளினார்.

கல்க்கிபுராணத்தில் நான்காவது அத்தியாயம்
முடிந்தது.

## ஐந்தாவது அத்தியாயம்

## பத்மாவதியின் சுயம்வரம்.

அப்பால் நடந்த சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள் சௌனகாதிகளே என்று சூதமுனிவர் அருளிச்செய்கிறார். யௌவன

பிராதுர்பாவமான பத்மாவதியின்தக்தையாகிய பிருஹத்திரன் வியாகூல முள்ளவனாய்த் தன்பாரியைப்பார்த்து ஓ-கௌமுதியே நம்முடைய பத்மாவதிக்கு தக்ககுணமும் ரூபமும் குலமும் உள்ளபுருஷனை எவ்விடத்தில் பார்ப்போம் என்றுசொல்லி உள்ளமுருகி நிற்கிற பர்த்தாவைப் பார்த்து கௌமுதிசொல்லுகிறாள். ஓ பிராணநாதா மேற்சொன்னவிஷயத்துக்கு நாம் விசாரப்படவேண்டியதில்லை நம்முடைய பத்மாவதிக்கு நாயகன் புருஷோத்தமனே தவிர மற்றொருவருமில்லை என்று கங்காதரன் வரமளித்திருக்கின்றார் நாம் பூர்வஜன்மத்தில் பண்ணின புண்ணியத்தால் நமக்கு க்ஷீரசமுத்திரக் கன்னிகையான மஹாலக்ஷ்மியானவள் புத்திரியாயவதரித்தாள் ஆனதால் மற்றெவரையும் அந்தப் புருஷோத்தமன் மணம்புரியார் இதற்கு திருஷ்டாந்தம் (ராவஞகெ ஸவெ தீ தா ரா-ஷூணீ க ரு ஷ ஜ ந தி ।) அகலகில்லேல நிரையுமென்னலர்மேல் மங்கையுறைமார்பா என்கிறதுபோல் அவரையொருநாளும் பிரியாச்சத்தியாயிருப்பவளாதலால் அவளுடைய கல்யாண குணத்துக்குத்தக்கபுருஷன்நாராயணனே ஆகையால் உலகிலுள்ளஇராஜாக்களை வரும்படிகட்டளையிட்டு சுயம்வரம் ஏர்ப்படுத்திவிடும் என்றுகூறினாள். இதைக்கேட்டபிரகதத்தன் பரமசந்தோஷங்கொண்டு தன்னுடையபெண் பத்மாவதியின் படத்தையும் அவளுடைய குணங்களையுமெழுதி அவளுடைய சுயம்வர மண்டபத்தில் கட்டி சகல அரசர்களும் வரும்படி கட்டளையிட்டான். அதனால் சகலதேசத்து அரசர்களும் அந்தப் படத்தைப் பார்த்து பெண்ணின் ரூபத்தி லாசையுள்ளவர்களாய் தங்கள் சதுரங்க தளத்தோடும் மகரகுண்டல ஹாரகேயூரங்களா லலங்கரித்துக்கொண்டு வெள்ளைக்குடை பிடித்து வெண்சாமரைவீச சகல போகங்களுடன் கட்டியங்கூற தாசிகள்பாடியாட தேவராஜன்போலும் நான் முன்னே நான் முன்னேயென்று சொல்லிக்கொண்டு சிம்மளத்தீவிற்குவந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில்வந்த அரசர்களின் நாமங்களோவெனின் ருசிராசுவன், சுகர்மா, மதராக்ஷன், திருடவிருதன், கிருஷ்ணசாரன், பாரதன், ஜீமூதன், குரூரமந்தனன், குசன்,குசாம்பு, வசுமான், கிரதன், ஸஞ்சயன், குருமித்திரன், அக்ஷயன், முதலான ராஜாக்கள் அந்தசுயம்வர மண்டபத்தில் தங்கள் தங்களுக்கு ஏற்படுத்திய இடங்களில் உட்கார்ந்திருந்தார்கள் அஷ்டாதச வாத்தியங்கள் முழங்க தேவதாஸ்திரீகள் ஆடவும் பாடவும் பூமலர் பொழியவும் ஸகலாடம்பரத்துடனிருக்குஞ் சமயத்தில் ரதிதேவிபோலவும் செண்பகபுஷ்பத்தை நிகர்க்குஞ்சரீரமுடையவும் மேகமண்டலம் சந்திரபிம்பத்தைமறைக்க வருவதுபோல்

கேசபாரங்கள் திருமுகத்தை மறைக்கவும் ஸ்தனமண்டலத்தை யளவெடுப்பதுபோல் முத்துமாலை தொங்கவும் சபத்தினியான பூதேவிக்குத் தன் நாயகியின் கல்யாண சம்பாசாரத்தைச் சொல்வதுபோல் கால் தண்டைகள் சப்திக்கவும் கண்களாகிற கரிநெய்தல்கள் கால் நகங்களாகிற சந்திரனைக்கண்டு மலரும்படி தலையை வணக்கிக்கொண்டும் துவாரபாலகாள், சகீஜனங்கள், கஞ்சுகிகள், தாசிவர்க்கங்களால், சூழப்பட்டும் நிற்கும் பத்மாவதியைக்கண்டு சகல அரசர்களும் தங்கள் தங்கள் மகர குண்டல ஹாரகேயூரங்களைப்பார்த்து நமக்கு நிகரான இராசாக்கள் ஒருவரையுங்காணேம் இவள் நம்மைத்தவிர மற்றொருவரையும் மணம் புரியாள் என்று தனித்தனியாய் நினைத்துக்கொண்டும் முகங்களை மறைத்துக்கொண்டும் இன்னும் அநேகவித சேஷ்டைகளைச் செய்துக் கொண்டும் காலத்தைக் கழித்தார்கள்.

இப்படி இருக்குங்காலத்தில் கையில் பூந்தாமத்தோடு சகிகளால் சூழப்பட்ட பத்துமாவதியானவள் எல்லா ராஜாக்களையும்கண்ணுற்றுப் பார்த்து தனக்கிஷ்டமான புருஷனைக் காணுமல் ஸர்வேசுவரனை மனதினால் நினைத்தாள் இப்படி சதுரங்கதளத்தோடு கூடிய அரசர்கள் தங்களுக்குப் பத்மாவதி மாலையிடாமல் போய்விட்டபடியால் மனோ வியாகூலத்தோடு தங்கள் தங்கள் இருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள் அப்பால் தனக்கு இஷ்டநாயகனைக் காணுததினால் சங்கரன் மொழியை நினைத்தும் பரம்புருஷனைத் தியாகித்தும் கால் விரல்களால் பூமியைக் கீறிக்கொண்டும் விசனப்படத் தொடங்கினாள்.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## ஆறாவது அத்தியாயம்.

அப்பாலந்த பத்மாவதியானவள் ஹரியே தனக்கு பதியாகவேணுமென்று நினைத்திருந்த என்தலையில் பிரம்மதேவன் என்ன எழுதினான் ஓய் தேவனே நிர்பாக்கிய சாலியான் என்னால் நல்ல பூமியில் விரையை விதைக்காமல் ஊஷரபூமியில் விரையைவிரைத்தேன் ஸர்வலோக சரண்ணியனுன பகவானை நான் எப்படி அடையப்போகிறேன். சம்புவின் வாக்கியம் பொய்யாய்விடுமோ அப்படிக்காணுல் என்னுடைய சரீரத்தை

னுடைய சரீரத்தை நெருப்பிற் கொளுத்துகிறேன். பிரகிருதிசரீத்தை யுடைய நானெங்கே அப்பிராகிருத திவ்வியமங்கள விக்கிரஹமெங்கே சம்புவினால் நான் வஞ்சிக்கப்பட்டேன் விஷ்ணுவினால் தியஜிக்கப்பட்டேன் நான் எப்படிப்பிழைக்கப்போகிறேன் என்று பரிதபிக்கிற பத்மாவதியான கன்னியா ரத்தினத்தின் வாக்கியத்தைக்கேட்ட பூர்வக்ஞானமுள்ள அஞ்சுகமானது பகவானிடத்திற்போய் பத்மாவதியின் பிரலாபத்தையறிவிக்க ஸ்ரீஹரியானவர் அஞ்சுகத்தைப் பார்த்து ஓ ஆப்தபந்துவே நீர் இக்கணமே சென்று அவளுக்குப் பர்த்தா நானேயென்றும் அவளே எனக்குப் பாரியை யென்றும் சொல்லி அவளுடைய மனோதுக்கத்தைப்போக்கிச் சந்தோஷத்தை யுண்டுபண்ண மத்தியஸ்தராய் ஆகக்கடவீர் நீர் எல்லாக்கலைகளையும் எல்லாசாஸ்திரங்களையும் அறிவீர் இக்கணமேசென்று பத்மாவதியைச் சந்தோஷிப்பிக்கக்கடவீர் என்றனர் பகவான் வாக்கியத்தைக்கேட்ட கிளியானது பகவானை வலம்வந்து முடிசாய்த்து நமஸ்கரித்துக் கிளம்பி மாதளமுத்தையும் அமிர்தம்போன்ற ஜலத்தையு முட்கொண்டு பரமசந்தோஷத்தோடு சமுத்திரத்தீவிலிருக்கிறபிருஹத்ரானுடைய ராஜதானியை அடைந்து பத்மாவதியின் சமீபம் போய்ச்சேர்ந்தது. அப்போது பத்மாவதியானவள் ஸ்ரீஹரியேதனக்குப் பதியாய் ஆகவேணுமென்று ஸ்ரீபரந்தாமனை நினைந்து நினைந்து ஓய் ஆப்தபந்துவேஸ்ரீயஃபதியே பாஞ்சாலியைக்காத்தயாதவோத்தமாவென்று துதிசெய்து மும்மூர்த்தி சுவரூபத்தையுடைய அரசமரத்தடியில் தவம் புரிந்து நிற்கின்றாள். இந்த அஞ்சுகமானது பத்மாவதியின் சமீபத்தையடைந்து மனிதனைப்போல் வார்த்தை சொல்லத்தொடங்கிற்று. அதாவது தேவதாஸ்திரீகளுடைய அழகெல்லாவற்றையுமெடுத்து பிரமனால் உண்டுபண்ணப்பட்ட ஓ-பெண்கள்ரத்தினமே! ரதிதேவியானவள் இப்பூமியின்கண் வந்ததுபோல் சகிஜனங்களெல்லாரும் வந்திருக்கிறார்களே ஓபத்மாவதியே தாமரையின் பரிமளமுள்ள சரீரமுடையவரே சேல்மீனைப்பழித்த கண்களையுடையவரே நீர் ஸ்ரீகிருஷ்ணவதாரமெடுத்த பரமபுருஷனை மணந்த ருக்குமணியோ அல்லது ஸ்ரீராமமூர்த்தியை மணந்த சீதாபிராட்டியோ உம்மை மானுஷஸ்திரீ யென்று ஒருவரும் நினைக்கார்கள் சர்வசீவன்களும் கண்டு அதிசயிக்கும்படியான உருவத்தை யுடையவரே என்று வர்ணித்துநிற்கும் கிளியைப்பார்த்துப் பத்மாவதியானவள் சொல்லுகிறாள்.

ஓ! பஞ்சவர்ணக்கிளியே; நீ தேவதையா, அல்லது மனிதனா, அல்லது கந்தர்வனா, உன்னைக்கண்டால் சாமான்னியமான ஜந்துவென்று

நினைக்கக்கூடவில்லை; தேவோத்தமன்போல் விளங்குகிருய்; என்ற பத்மாவதியின்வாக்கியத்தைக்கேட்ட கிளியானது சொல்லத்தொடங்கிற்று. கேளும் ஸ்திரிரத்தினமே! நான் இஷ்டப்படி சஞ்சரிக்குந் திறமையை யுடையவன்' நான் எல்லாசாஸ்திரங்களேயும் தர்மங்களேயுமறிந்தவன், என்னை எல்லாத் தேவர்களும் வந்திக்கின்றனர். இதுநிற்க, நீர் ஆபரண மணியாமலும், அலங்காரத்தை யடையாமலும், சகீஜனங்களோடு விளையாடாமலும், ராஜபோஜனத்தை விரும்பாமலும், ஏன் உமது திருமேனியை வாட்டுகிறீர். ஓ! இராஜபுத்திரியே உம்மைப்பார்த்தால் ரோகமில்லாமல் மனோரோகத்திஞல் பீடிக்கப்பட்டவள்போல் காணப்படுகிருய், வார்த்தை சொல்லும்போது தழதழத்துப்போகிறது, முகமெல்லாம் வெளுத்துப்போயிருக்கிறது, குயில்போன்ற யினியகுரல் மாறியிருக்கின்றது. அளகங்களும் திலகமும் நழுவியிருக்கின்றது, கண்கள் சுழலமிடுகின்றது, உன்னுடையவிரல்கள் ஆடுகின்றது, தேகமெல்லாம் இளைத்துப்பனியிஞல் பீடிக்கப்பட்ட தாமரைபோல் கருகிவிட்டது, இப்படி எதற்காக அரசமரத்தடியில் தவம்புரிகிறீர் சொல்வீராகவென்றுரைத்த அஞ்சுகத்தின் மொழியைக்கேட்ட பத்மாவதி சொல்லுகிருள்.

## ஆருவது அத்தியாயம் முற்றிற்று.

### முதலாவது அம்சம் ஏழாவது அத்தியாயம்.

கேளும் கியானமயமான அஞ்சுகமே! ரூபத்திஞலும் குணத்திஞலும் குலத்திஞலும் அலங்காரத்திஞலும் என்னபலனை அடையக்கூடும். பால்யம் - பௌகண்டகம் - எவ்வனம் முதல் நான் சங்கரனைப் பூஜித்து வருகிறகாலத்தில் சங்கரன் சந்தோஷத்தையடைந்து, பத்மாவதியே! உனக்குப் பதியானவன் நாராயணனே, இதரதேவர்கள் மனதிஞல் நினைக்கப்படவுமாட்டாய் ஸ்ரீஹரியை பஜனைபண்ணக்கடவாயென்றுரைத்தார் அப்பால் எல்லாஅரசர்களும் வந்து சுயம்வரமண்டபத்தில் கூடிஎன்னை மணம்புரிய வெத்தனித்தபோது நாராயணனைக்காணுமல் மற்றொருவரை மணம்புரியமாட்டேன், இல்லாவிட்டால் நெருப்பில் பிரவேசித்து பிராணனைப்போக்கிவிடுகிறேனென்றும் அந்தஅரசர்களைப்பார்த்து இதராஜஸ்திரிகளைப்போல நினைத்து மணம்புரியவந்தீர்களா, நீங்களென்க்குத் தக்கபுருஷர்களாகமாட்டீர்கள். நீங்கள் தங்களிருப்பிடம் போய்ச் சேரக்கடவீர்கள். எனக்குத்தகுந்த புருஷன்வரவில்லையென்று

நானுரைத்த வாக்கியத்தை அவ்வரசர்கள் கேட்டு ஒன்றும் சொல்லாமல் வெட்கப்பட்டு வந்தது தெரியாமல் போய்விட்டார்கள். என்று தன்வரலாற்றைச்சொல்லி முடித்தாள். அப்பொழுது கிளிசொல்லுகிறது ஒ பத்மாவதியே! ஆனால் சிவபரஞ்சுடரால் அருளிச்செய்த வாக்கியம் போய்யாகமாட்டாது பரமயோகிகளும் தபஸிகளும்சொல்லுகிறதாவது எப்படிப்பட்ட பாபியாயிருந்தாலும் விஷ்ணுவைப்பூஜைபண்ணினல் இவ்விரண்டுலோகத்தின் இஷ்டபூர்த்தியும் மோக்ஷமும் அடைவார்கள் சந்தேகமில்லை. (ஶ்லோ॥ விஷ்ணும் ஸம்பூஜ்ய ஸர்வேஷாம் ஸித்திர்ப்பவதி ஶாஶ்வதீ । ஏஷ ஏவ பரோ தர்ம்மோ ஹ்யேஷ ஏவ பரம் தப: ॥) என்று சொன்ன கிளியின்வார்த்தையைக்கேட்ட பத்மாவதி சொல்லுகிறாள். அந்தப்பகவானுடைய அநந்த கல்யாணகுணங்களும், திவ்ய மங்கள சொரூப லட்சணமும் நான் நன்றாயறிவேன். மேற்கூறிய எல்லாவற்றையும் நான் நன்கு அறிந்தவளாகையால் அப்பகவானையே பதியாகப்பெற இத்தவமியற்றுகின்றேன் என்றாள். இதைக்கேட்ட அஞ்சுகமானது அந்த பகவானுடையசொரூபலட்சணங்களைச் சொல்லியருளவேண்டுமென்று கேட்க பத்மாவதிசொல்லுகிறாள். கேளும் ஓ அஞ்சுகமே! புருஷோத்தமனைப் பஜிப்பது கஷ்டமில்லை, அப்படியாக பஜனை பண்ணினவர்கள் அடையாதது ஒன்றுமில்லை, அவனது அன்பர்கள்தான் உலகத்தை க்ஷேமப்படுத்தி வருகிறார்கள். அவருக்குச் செய்யும் அர்ச்சனையானது பரமானந்தத்தைக்கொடுக்கும். பரமசவுபாக்கியத்தைக்கொடுக்கும். அது பரமபதத்தைக் கொடுக்க வல்லது, யோகீஸ்வரராலும் அறியக்கூடாத திருத்துழாய்மாலையணிந்த பரமபுருஷனுடைய திவ்விய மங்கள சொரூப லட்சணத்தைச் சொல்லுகிறேன்; குஞ்சிமணி சதங்கை முதலான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு பஞ்சம சுவரம்போல் சப்திக்கும் பாதகடகங்கள் பூண்ட திருவடியையும், பிரமருத்திரேந்திராதி தேவர்களால் அடைந்த சுவர்னம்போல் பளபளவென்று பிரகாசிக்கும் சுபாவமான வெண்பட்டையுடைய இடையும், செந்தாமரைபோன்ற திருவடிகளையும், தாமரையிதழ்போன்ற திருக்கண்களையும் நினைக்கின்றேன், முக்குணங்களால் சூழப்பட்ட பிரகிருதிகளாலே அலங்கரிக்கப்பட்டும் கருத்மானுடைய பிருஷ்டபாகத்தை யடைந்திருக்கும் பகவானுடைய சரீரமாகிய பிரவாகத்தில் திருவளிகளாகிற தரங்கங்களோடும் (அலைகளோடும்) நாபியாகிற நீர்க்குமிழிகளில் பிரம்மாவாகிற தாமரைப்புஷ்பத்தையுடைய அந்த பகவானுடைய உந்தியை வணங்குகிறேன். சமுத்திர கன்னிகையின் குசபாரங்களில் குங்குமத்தினல் பூசப்பட்டும்

கௌஸ்துபமணியின் சோபையினால் பிரகாசித்துக்கொண்டும், ஸ்ரீவத்ஸ மென்கிற அடையாளத்தோடு கூடிய அந்த பகவானுடைய திருமார்பை வணங்குகிறேன். மதுகைடபாதிராக்ஷதர்களை சிக்ஷிக்கவும், ஹஸ்த வளையங்களால் பிரகாசிக்கப்பட்டும் பவபீதாளாகிய சேதனர்களுக்கு அபயத்தையளிக்கும்பகவானுடைய திருக்கைகளைஸ்மரிக்கின்றேன். தாமரை முதலாகிய உத்தம ரேகைகளோடு கூடியவும், யானைத்துதிக்கை போல் நீண்டு உருண்டு பெருத்திருக்கும் கமலையின் குசங்களுக்கு டங்கம்போன்ற சங்குசக்கரத்துக்கிருப்பிடமாகிய பகவானுடைய திருக்கைகளை ஸ்மரிக்கின்றேன். திருத்துழாய் மாலையினாலும் வனமாலையினாலும் முத்துமாலையினாலும் அலங்கரிக்கப்பட்ட வலம்புரிச்சங்கை நிகர்த்த திருக்கண்டத்தைஸ்மரிக்கின்றேன். நீலமேகவர்ண சரீரமாகிற சமுத்திரத்தில் கண்களாகிற மத்ஸியங்கள் வஸிக்கவும், முகமாகிற தாமரைமலரவும், கேசமாகிற பாசிகள் மிதக்கவும், குண்டலங்களாகிற குமுதங்கள் விகஸிக்கவும், அதரங்களாகிற பவளக்கொடிகள் படரவும், பவளங்களோடு முத்துசேர்ந்ததுபோலே பல்வரிசைகள் பிரகாசிக்கின்ற பகவானுடைய திருமுகத்தை ஸ்மரிக்கின்றேன். மல்லிகை முல்லை முதலாகிய புஷ்ப கெந்தத்தையுடைய வக்ரமாகிற நீண்ட கோசபாரத்தையுடையவும், சூரிய சந்திராள்போல பிரகாசம்போன்ற திருமேனியுடையவும், வில்லைப்போன்ற புருவங்களையுடையவும், மூவுலகங்களுக்கும் மேலான பரமபதத்தில் அப்ராகிருத திவ்யமங்கள விக்கிரகங்களையுடைய அனந்த கருடாதிகளால் உபாசனைபண்ணப்படும் அந்தரமாபதியைவணங்குகிறேன், அழகாயும் முப்பத்திரண்டு இலக்ஷணங்களோடும் கூடிய பகவானுடைய வ்யக்தியை வாக்கினால் துதித்தும் மனஸினால் நினைத்தும் சரீரத்தினால் வணங்கியும் எவர்கள் பஜனைபண்ணுகிறார்களோ அவர்கள் நித்தியானந்த சுகமாகிய பரமபதத்தை யடைவார்கள். பத்மாவதியின் வாக்கினால் சொல்லப்பட்டபடியே இகலோகத்தில் வாழ்வையும், பரலோகத்தில் பிரமானந்தசுகத்தையும் கொடுக்கத்தக்கின இந்த ஸ்தோத்திரத்தை எவர்கள் பக்திஸ்ரத்தையோடு அனுதினமும்படனம்பண்ணுகிறார்களோ அவர்கள் பஞ்சமாபாதகத்தினின்றும் நீங்கி இகலோகத்தில் திரிவர்க்க பலத்தையடைந்து பரலோகத்தில் மோக்ஷத்தையடைவார்கள்.

**கல்கிபுராண முதலாவது அம்சம் ஏழாவது அத்தியாயம் முடிந்தது.**

இரண்டாவது அம்சம்

## முதலாவது அத்தியாயம்.

## பகவானுடைய் திவ்யாவதாரங்கள்.

---

இப்படி பத்மாவதியினுல் சொல்லப்பட்டபொழுது ஸத்புருஷர்களால் கொண்டாடப்பட்ட கிளிசொல்லுகிறது. ஓ பத்மாவதியே ! ஆச்சரியகரமான திருவிளையாட்டையுடைய அந்த ஹரியை எப்படிப் பூஜிக்கிறது மூவுலகங்களும் யாருடைய அநுக்கிரகத்தினுல் நிலைத்திருக்கின்றது என்று கேட்ட அஞ்சுகத்திற்குப் பத்மாவதி சொல்லுகிறுள். முக்காலத்திலும் அழிவில்லாமல் அவ்யயனென்றும் பெயரையடைந்த ஜகதீஸ்வரனை திருவடிமுதல் திருமுடிபரியந்தம் தியானம்செய்து பூர்ணகாமனுய் மூலமந்திரத்தை ஜபித்துக்கொண்டு அந்த பரமபுருஷனை அடிபணிந்து அவருக்கு நைவேத்தியம் பண்ணினபிறகு விஷ்வக்ஸேநாதிகளான பகவத் பரிவாரங்களுக்கு நிவேதனம்பண்ணவேண்டும். நைவேத்தியம் பண்ணும்பொருளானது எந்தஜீவனுக்கு எந்தப்பதார்த்தம்பிரீதிகரமோ அதுவே முதலில் நிவேதனம் பண்ணவேண்டும் என்று ஸ்ரீராமாயணத்தில் சொல்லுகிறது. (ஶ்லோ || யத³ந்ந: புருஷோ ப⁴வதி தத³ந்நாஸ் தஸ்ய தே³வதா:||) என்பதுபோல் நிவேதனமானபிறகு பகவானுடைய நாமங்களைச்சொல்லி நிர்த்தனம் பண்ணிக்கொண்டும், பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் துதிக்கவேண்டும் (ஶ்லோ || [illegible] ப⁴ஜநம் | [illegible]||) என்று வாமனபுராணம் கூறுகின்றது. இப்படிச்சொன்னதுபோல் பஜனைபண்ணினபிறகு பகவானுக்கு ஸ்ரவணைகந்தமாய்ப் பாடினவர்கள் மனோரதத்தை யடைவார்கள் என்று பத்மாவதி சொன்னுள். இவ்வாக்கியத்தைக்கேட்டு கிளிசொல்லுகிறது. ஓ பதிவ்ரதாசிரோன்மணியே உமது உருவத்தைக்கண்டால் ஸ்வர்னமயமான பிரதிமைக்கு ஜீவனை உண்டுபண்ணினதுபோல காணப்படுகிறது. உமது குணங்களுக்கும் ரூபத்திற்கும் அந்த ஸர்வேஸ்வரன்தவிர மற்ருெருவன் பதியாகமாட்டான்.

இதற்கு விரோதமாய்ப் பிரமதேவனுல் ஏற்பட்டிருக்கமாட்டாது சூரியப்பிரகாசம்போன்ற திருமேனியையுடைய எந்தப் பகவானுடைய

திருமேனியை தியானம்பண்ணுகிறுயோ அந்தப்பகவானே உனக்கு நாயகன் அதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில் ஸாதுக்கள் மனதில் எது உதிக்கிறதோ அதுவே வேதவாக்கியம், அதுவே சத்தியம். இதற்குத் திருஷ்டாந்தம் ([illegible]) என்பதுபோல் உன்மனதில் அவனைத்தவிர மற்றொருவனை அடைவதில்லைஎன்பதே திருஷ்டாந்தம்என்றுகிளிசொல்லிற்று. பிறகு பத்மாவதி சொல்லுகிறுள். ஓ கிளியே! அந்த பகவான் எவ்விடத்திலவதாரம்பண்ணினுர் நீ பராபர தத்துவங்களை யுணர்ந்தனையாதலால் உனக்குத்தெரியாதது ஒன்றுமில்லை. என்னுடைய மனோரதத்தை பூரணம் பண்ணிவைக்கக்கடவீர். ஓ அஞ்சுகமே! என் சமீபத்திற்கு வந்து என்னால் கொடுக்கப்பட்ட மாதளம்பழங்களையும் அமிர்தம்போன்ற ஜலத்தையும் உட்கொள்ளக்கடவாய். உன்னுடைய பத்மராகம்போன்ற சஞ்சுபுடங்களை இரத்நங்களால் அலங்கரிக்கின்றேன். உன்னுடைய கழுத்திற்கு சூரியகாந்தமணியினுல் ஹாரம்போடுகின்றேன். உன்னுடைய இறகுகளுக்கு வெண்பட்டினுல் கவசம்போடுகின்றேன். உன்னுடைய சரீரங்களை குங்குமத்தினுல் பரிமளிக்கச்செய்கின்றேன். உன் கால்களுக்கு இந்திரநீலப்பச்சையினுல் பாதகடகம் போடுகின்றேன். அந்த பகவானுடைய விரதத்தினுல் பிராணனைப் போக்கவேணுமென்று நினைத்திருக்கின்ற சாதகம்போன்ற எனக்கு உன் வாக்கினின்று முண்டாகும் பகவானுடைய கதாமிர்தத்தைப் பொழியும் நீலமுகில்போலாகிறீர். என்று கூறினுள்.

பிறகு கிளியானது மரத்தைவிட்டுக் கீழேயிறங்கி புன்சிரிப்போடு பத்மாவதியின் முகத்தைநோக்கிச் சொல்லத்தொடங்கிற்று. கேளும் பதிவிரதாசிரோன்மணியே! பிரமாவினுல் லோகரக்ஷணார்த்தமாய் பிரார்த்திக்கப்பட்ட பரமகாருணிகனுன ஸ்ரீயஃபதி பிராதாக்கள் மூவருடன்சம்பலத்தீவில் அவதரித்து பரசுராமனுல் தனுர்வேதங்களை அத்யயனம் பண்ணப்பெற்று விசாகரூபமகாராஜாவுக்குத் தர்மங்களை உபதேசித்து எழுந்தருளியிருக்கின்றுர்என்று பகவானுடைய அவதார குணங்களையுரைத்த கிளியின் வாக்கியத்தைக்கேட்டு பத்மாவதி சொல்லலுற்றுள்.

ஓ பிராணசகாவே! நான் ஸ்திரீஜாதியாகையால் அடிக்கடி அந்த பகவானை விரும்பினேனென்றால் எனக்கு இலஜ்ஜையாயிருக்கின்றது. எவ்வித உபாயத்தினுலாவது நான் படும் துயரத்தை பகவானுக்கு அறிவித்து என்னை மணம்புரியும்படி செய்விப்பது உன்கடமை. எல்லாமறி

ந்த உனக்கு நான் என்னசொல்லப்போகிறேன் என்று கூறினாள். இதனைக்கேட்ட கிளியானது பத்மாவதியை வலம்வந்து நமஸ்கரித்து உயரக்கிளம்பி ஆகாயமார்க்கமாய்ச்சென்று சம்பலத்தீவை யடைந்து கல்கியின்சமீபத்தில் சென்றது. வஜ்ஜிர வைடூரியங்களாலலங்கரிக்கப்பட்ட கிளியைப் பகவான் அன்னபானாதிக ளுண்ணச்செய்து தன் கைகளால் தடவி தன்முகத்தோடு அதன்முகத்தைச்சேர்த்து நானாவிதமான கதைகளைச்சொல்லி எந்த தேசத்தில் வசித்து எவ்விடத்திலிருந்து இங்கே வந்தாய்? இந்த மணிமயமான ஆபரணங்கள் ஏது? உம்மைக்காணாமல் இராப்பகல் போசன நித்திராதிகளையிழந்தேன். உம்மைவிட்டுப் பிரிந்தது முதல் ஒருவினாடியை ஒரு யுகம்போல் கழித்தேன் என்றுரைத்த கல்கியின் வாக்கியத்தைக்கேட்டு கிளியானது எழுந்து பிரதக்ஷிண நமஸ்காரங்களைப்பண்ணி பத்மாவதியினால்கொடுக்கப்பட்ட சர்வாலங்கார சர்வபூஷணங்களையும் பகவானுக்குக்காட்டி பத்மாவதி வசிக்கும் திக்கைக்குறித்து அஞ்சலிபண்ணி பத்மாவதியென்னும் பெண்கொடிக்குத் தேவரீரது திருவுளக்குறிப்பையுணர்த்தி அவ்வம்மையாரது துயரத்தையாற்றிப் பகவான் விரைவில் வந்து உம்மை மணம்புரிவாரென்று உறுதி கூறி வந்தேன் என்று கூறிற்று.

(சீதாபிராட்டியாரை அசோகவனத்தில் கண்டு வந்த ஆஞ்சனேயருடைய சரித்திரத்தைப்போல இங்குரைக்கலாம்.) பிறகு கிளியோடு பரம சந்தோஷத்துடன் சிவபெருமானால் கொடுக்கப்பட்ட அஸ்வத்திலேறி சமுத்திர கல்லோலத்தினால் சூழப்பட்டும் மணிமயகோபுரப் பிராகார விமானப்பிராசாத பதாகங்களா லலங்கரிக்கப்பட்ட சிம்மளத்தீவை யடைந்து அங்குள்ள விநோதங்களைக்கண்டு பகவானனவர் கிளியைப்பார்த்துச் சொல்லுகிறார். ஓபரம்சகாவே இதோ பத்மங்களா லலங்கரிக்கப்பட்ட வாபீகூபங்களைப்பார் அதில் ஜலக்கோழிகளும் அன்னப்பறவைகளும் சக்கரவாகப்பறவைகளும் ஆணும் பெண்ணும் யோகிகளுடைய உபதேசம்போல் ரகஸ்யம் சொல்லிக்கொள்வதைப்பார் அதன்பக்கத்தில் விளா, ஆல், அரசு, மாதளை, எலுமிச்சை, பலா, மா, கமுகம் பாதிரி, புன்னை, கதலி, முதலிய விருக்ஷசாதிகளாலலங்கரிக்கப்பட்ட வனத்தைப்பாரும் அவ்வனத்தில் புட்பங்களின் மகரந்தங்களையுண்டு, மனோல்லாசமாய்ப் பாடும் வண்டுகளைப்பாரும். மாந்துளிர்களைப்புசித்து ஆணும்பெண்ணும் விளையாடும் பஞ்சமஸ்வரம் போன்ற குயிலின்னொலியைக் கேளும். அதோ சக்ரவாகப்பறவைகள் பகலெல்லாம் விளையாடி இராக்காலத்தில் பதியையிழந்து தீனஸ்வரம்போ

ன்றகுறரிப்பறவையின் ஒலியைக்கேளும் மந்தமாருதங்கள் வீச அக்காற்றினால் அலேயும் மாந்துளிர்களேப்பாரும். அவை மயில்போன்ற நடையினையுடைய ஸ்திரீகள் சோரபுருஷனே விரல்களேக்காட்டி யழைப்பது போலிருக்கின்றன. ஓ!பிராணசகாவே முக்குணங்களோடுகூடிய காற்று வீசுகிறது. இவ்விடத்தில் நாம் வசிப்பது உசிதமென்றுரைத்தார்.

## இரண்டாவது அம்சத்தில் முதலாவது அத்தியாயம் முற்றிற்று,

---

## இரண்டாவது அத்தியாயம்

சூதபுராணிகர் சொல்லுகிறார்.—கேளும் சௌனகாதிகளே அப்பாலந்த ஹரியானவர் வஜ்ரவைடூரியங்களா விழைத்தும் நிர்ம்மலமான ஸ்படிகத்தினால் படிவரிசைகளேக்கட்டி நாஞவிருக்ஷங்களால் சுபகரமான நிழலே யுடைத்தானதாய் சித்திரவேதிகைகளே யடைந்திருக்கும் அக்குளக்கரையில் உட்கார்ந்துபரமசந்தோஷத்தோடு கிளியைங் பத்மாவதியின் சமீபத்திற்கு அனுப்பினர். கிளியானது சிம்மளத்தீவில் விரகவேதனையினால் பரிதபித்துக்கொண்டு துளிர்களால் பரப்பப்பட்ட படுக்கையில் படுத்துக்கொண்டு சைத்யோபசாரமாய் தாமரைக்கொடிகளே சுத்திக்கொண்டும் பெருமூச்சுவிட்டுக்கொண்டும் சகிகளால் பூசப்பட்ட சந்தனத்தை வெறுத்தும் ஆகாராதிகளே மறந்தும், சர்வகாலத்திலும் ஹரிஹரி என்கிற பிதற்றலோடுங்கூடிய பத்மாவதியைக் கண்டது. அப்பால் கிளியின் மதுரவாக்யங்களால் சந்தோஷத்தையடைந்த பத்மாவதியானவள் ஓபரமசுகிருதபஞ்சவர்ணக்கிளியே! நல்வரவுபெற்று வந்தோரே? நீர் என்னேவிட்டுப்பிரிந்ததுமுதல் என் தேகத்திலுண்டான பிரபலமான வியாதிக்கு மணிமந்திராதி ஔஷதங்களாலும் அனுகூலப்படாமல் வருந்துகின்றேன், உன்வசனத்தினலே பகவானது நல்வரவு செய்தியாகிய அமிர்தத்தைக்கொண்டு என் மனோவியாதியைப் போக்கும், என்று கிளியின் முகத்தோடு தன்முகத்தைச்சேர்த்து காடாலிங்கனம் பண்ணிக்கொண்டாள்.

அப்பால் அந்த பத்மாவதியானவள், குளக்கரையில் சூரியோதயம் போல ஹரியானவர் பிரகாசித்துக்கொண்டிருக்கிறரென்று கிளி சொல்லக்கேட்டு, தான் அந்த ஹரியை பிரத்தியக்ஷமாய்ப் பார்த்து சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணவேண்டுமென்று நினைத்து விமலே என்றும்

மாலினி என்றும், லோலாவென்றும், கமலை என்றும், காமகந்தலை என்றும், விலாசனி என்றும், சாருமதி என்றும், குமுதி என்றும் பெயரையுடைய எட்டு சகிகளால் தாங்கப்பட்ட வைடூரியமயமான சிவிகையில் ஏறிக்கொண்டும் மற்றுமநேக சகிகளால் சூழப்பட்டும் அந்தப்புறத்தை விட்டு வெளியே புறப்பட்டாள். அப்பட்டணத்திலிருக்கிற ஸ்திரீகள் பாலவிருத்தர்களெல்லோரும் பத்மாவதியைத் தரிசிக்கச் சிவிகையைச் சுற்றிவந்தார்கள். இதென்ன ஆச்சரியமென்று வர்த்தகர்களும், நாற்சந்தியிலிருக்கிற ஜனங்களும், பார்த்துக்கொண்டிருக்க, மெள்ளமெள்ள சிவிகையைத் தாமரைகளாலும், கல்லாரங்களாலும், குமுதங்களாலும், நீலோர்ப்பலங்களாலும், வாசனையானது பரிமளித்துக்கொண்டிருக்கிற குளக்கரைக்குக் கொண்டுபோனார்கள். அக்குளத்தில் புட்பங்களில் வசிக்கிற பிரமரங்களெல்லாம் இது நிஸ்ஸாரமென்று விட்டுவிட்டு பத்மினி ஸ்திரீகளுடைய முகஸரோகத்தையடைந்தன. அதெப்படியிருக்கிறதென்றால், இந்த ஸ்திரீகளெல்லோரும் பத்மாவதியைப் பிராணன்போல் நினைத்து வருகிறார்களாதலால் பத்மாவதியின் சர்வாவயவங்களையும் இரண்டு கண்களினால் நோக்கித் திருப்தி யடையமாட்டார்கள். இன்னும் வெகுநயனத்தை உண்டுபண்ணித் திருப்தி யடைவிக்க வேண்டுமென்று பிரமதேவன் தயைபண்ணி அநேகம் கண்களை உண்டு பண்ணினதுபோல் விளங்கிற்று. அப்பால் அந்தப் பத்மாவதியானவள் சிவிகையைவிட்டு இறங்கித் தன்சகிகளோடு திவ்யதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி பீதாம்பரங்களை யடைந்து சர்வாலங்கார பூஷணிகளாகி வாஸனாதிரவியங்களை யடைந்து, நிருத்திய கீதவாத்தியங்கள் சூழ்ந்துவர கிளியை முன்னிட்டுக்கொண்டு சூரியன்போல் பிரகாசிக்கும் ஸ்ரீபகவானைச்சமீபித்தாள். அப்போது தாமரை இதழ்போல் தேகநிறமும், பீதாம்பரம் அணியப்பட்ட இடையும், கேயூரங்களால் பூஷிக்கப்பட்ட கைகளும், முத்தாரங்களால்விளங்கும் கழுத்தும், நூபுரங்களால் சப்திக்கும் திருவடிகளையும் கண்டு பத்மாவதியானவள் மெய்மறந்து ஆநந்தபாஷ்பம் பெருக மயிர்க்கூச்சலறைந்து சித்திரப்பதுமைபோல் தலைவணங்கி மௌனமாய்நின்றாள். பிறகு பத்மாவதியின் ரூபலாவண்யங்களைக்கண்டு சராசரங்களைத் தன்வசத்தில் சுவாதீனப்படுத்தும் ஸ்தாவர ஜங்கமங்களுக்குள் அனுப்பிரவேசித்தும் யோகிகளது இருதயகமலத்தில் குடிகொண்டிருக்கும் ஸ்ரீபகவானானவர், அச்சமயத்தில் அசுவாதீனராய் நின்றார். பிறகு சராசரங்களுக்குப் பிரபுவான கல்கியானவர் ஜகன்மோகனவதாரம்போன்ற பத்மாவதியின்ரூபத்தைக்கண்டு சகிகளைப்பார்த்து

ஒரு வார்த்தை சொல்லுகிறார். ஓ! சகிகளே எனக்கெதிரில் நிற்கிறது என்ன ? மின்னற்கொடியா, அப்படிக்காணுல் முகிலில்லாமல் மின்னல் பிரகாசிக்கா ஆகையால் மின்னற்கொடியன்று. இது அன்னப்பறவையோ அப்படிக்காயின் தாமரைத் தடாகமின்றி அது வசிக்காது அதுவுமன்றி இவளுடைய முகமாகிய சந்திரன் கேசங்களாகிற மேகக்கூட்டங்களால் மறைக்கப்பட்டு இருக்கின்றனவே உண்மைச்சந்திரனாயின் ஆகாயத்தி லிருக்கவேண்டும். இவள்கண்கள் கெண்டைபோன்றதாய் விளங்குகின்றது. தனுசுபோல் பிரகாசிக்கின்ற புருவங்களைப் பார்க்கில் மன்மதன் வில்லைவளைத்து எனக்கெதிரில் நிற்கின்றதைப்போ லிருக்கின்றது. வேணுதண்டம்போல் கரங்கள் பிரகாசிக்கின்றன. ஓ சகிகளே! இவளுடைய குஜபாரங்கள் மன்மதனுடைய பீரங்கிக்குண்டுகள்போல் பிரகாசிக்கின்றன. இவளுடைய திருவளிகள் மன்மதசோபானம்போல் பிரகாசிக்கின்றன. இவளுடைய நிதம்பமானது மன்மதனுடைய கிரீடா பர்வதங்கள்போல விளங்குகின்றன. இவளுடைய துடைகள் மன்மத கதாயுதங்கள்போல் பிரகாசிக்கின்றன. இவளுடைய பாதங்களில் பிரகாசிக்கின்ற பாதகடகங்கள் மன்மதனுடைய தனுசைப்போல் சப்திக்கின்றன அது என்மனதை உருகப்பண்ணுகின்றது. என்று எல்லா அவயவங்களையும் வர்ணித்தனர். பத்மாவதியானவள் பகவானை வலம் வந்து ஆநந்தக்கண்ணீர்பெருக அஞ்சலி செய்துக்கொண்டு நின்றாள்.

## இரண்டாவது அத்தியாயம்

### முற்றிற்று.

---

## பத்மாவதி திருமண அத்தியாயம்.

அப்பாலந்தப் பத்மாவதியானவள் கருணா சமுத்திரமாகிய ஹரியைப்பார்த்து ஆனந்தமேலிட்டு நாத்தழுதழுப்ப ! வெட்கத்தினுல் தலை வணங்கிக்கொண்டு பகவானைத் துதிக்கின்றாள். ஓ ஜகன்னாதா தர்மமார்க்கத்தைவெளியிடுகிற தாதாவே நீர் என்மனதை அறிந்திருந்தும் ஏனென்னைச் சோதிக்கின்றீர் என்னைக் காக்கவேண்டும் நான் அரியதவம் முதலிய சத்காரியங்களைச்செய்து யோகிகளாலும் அடையக்கூடாத உன்திருவடியை யடைந்தேன் எனக்குக் கட்டளை தரவேண்டும் ஏனெ

னில் என்பிதாவுக்குத் தங்கள் வரவையறிவித்து என் மனோரதத்தைப் பூர்த்திசெய்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லி விடைபெற்று முன்போல் சிவிகையி லேறிச்சென்று தன் பிதாவின் மனைக்குப்போய் பிதாவைவணங்கி மௌனமாய் நின்றாள். பிறகு தோழிகள் இவளது அபிப்ராயத்தை அறிந்தவர்களாதலால் அவர்கள் அரசனுக்குச் சொல்லுகிறார்கள். ஓ மஹாராஜனே நம்மிட பத்மாவதிக்கு இப்பொழுது பாணிக்கிரஹணம் பண்ணும்படி பகவானுடைய சங்கல்பம் வந்திருக்கிறன்து. ஜகத்காரணவஸ்துவான ஸ்ரீவிஷ்ணுபகவான் உம்முடைய கன்னிகையை மணம்புரிவதாய் உம்முடைய உத்தியானவனத்தில் எழுந்தருளியிருக்கிறாரென்று சொன்னார்கள், சகிகளின் வாக்கியத்தைக்கேட்ட அரசன் ஆனந்தங்கொண்டு அந்தஹரியை அழைத்துவரக்கருதி புரோகிதர் இஷ்டர் மித்திராள் பிராமணாள்முதலானவர்களோடும்அநேகமான வாத்தியங்களோடும் சகலாடம்பரத்தோடும் புறப்பட்டு அந்தத்தோட்டத்திற்குப்போய் நீலமலையின்பேரில் முகிலிருப்பதுபோல் மணிமயமான வேதிகையின்பேரில் எழுந்தருளியிருக்கும் அந்த கல்கியைக்கண்டான் மின்னற்கொடியானது மேகமண்டலத்தி லிருப்பதுபோல் விளங்குகின்ற கல்கியைக்கண்டு ஓ பரமகாருண்யனே ஆப்தபந்துவே அனுதைரக்ஷகனே, எப்படி காட்டில் மாந்தாதாவின் பிள்ளையானவன் கிருஷ்ணனால் கார்க்கப்பட்டானோ அப்படியே அடியேனைத் தங்கள் காரிக்குப்பொருட்டு எழுந்தருளி என் மனையைப் பரிசுத்தம் பண்ணவேண்டும் கண்ணா! மணிவண்ணாவென்று துதிக்கும் பத்மாவதியின் பிதாவின் வாக்கியத்துக்கிணங்கி, வந்த பரிவாரங்களோடு அந்த ஹரியானவர் புறப்பட்டு ரத்தின கசிதமான மாடமாளிகை நிறைந்த ஸிம்மளத்தில் எழுந்தருளினார். அந்தணர்கள் வேதமோத தேவர்கள் பூமலர்பொழிய தாசிகள் பாட சகல வைபவத்துடன் சாச்சு வலியாமாய் விளங்கும் அக்கினியை வலம்வந்து சுபமுகூர்த்தத்தில் பத்மாவதியைப் பாணிக்கிரஹணம்செய்தார் கேளும் சௌனகாதி மஹாரிஷிகளே என்றுகூறினார்.

அப்பால் அந்த சௌனகாதிகள் சூதமுனிவரைப்பார்த்து ஓமுனிசிரேஷ்டரே அந்தபகவான் சரித்திரத்தைக்கேட்க எங்கள் மனதானது ஆவலுள்ளதாய் இருக்கின்றன. ஆதலால் மேல்நடந்த விருத்தாந்தத்தைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமெனக் கேட்க சூதமுனிவர் அருளிச்செய்கிறார். பிறகு அப்பட்டணத்தில் இருக்கின்ற எல்லா மாதர்களும் பத்மாவதியின் கல்யாண மகோத்ஸவத்தைக் கண்டு பரமானந்தங்கொண்டு பகவான் திருவடிகளை ஆலிங்கனம் பண்ணிக்கொண்

டார்கள். முன்னால் பத்மாவதியின் சுயம்வரகாலத்தில் ஸ்திரீபாவத்தை அடைந்தீ அரசர்களெல்லோரும் பகவானிடத்தில் முறையிட நீங்கள் ரேவாநதியில் ஸ்நானம் பண்ணுவீர்களாகில் உங்கள் தோஷம் நிவர்த்தியாய்விடும் என்றனர். பகவான் வாக்கியத்தைக்கேட்டு அரசர்கள் ரேவாநதியில் ஸ்நானம்பண்ணி எதாரூபத்தை அடைந்து பகவானுடைய சக்தியை மெச்சி துதிசெய்கிறார்கள்.

ஓ தேவாதிதேவனே ! உம்முடைய மாயையினாலே உண்டாக்கப்பட்ட ஜலத்தில் மூழ்கிக்கிடந்த மூன்று லோகங்களையும் மத்சியமாய் உருவெடுத்து மனுமுதலான பிரம்மாக்களை உண்டுபண்ணி அவர்களால் மறுபடி உலகங்களைச்சிருஷ்டிபண்ணிவைத்தமகாமீனமே நீர்பல்லாண்டு வாழக்கடவீர். மறுபடியும் திதியின் பிள்ளையாகிய இரண்ணியாக்ஷனானவன் இந்திரன்முதலான தேவர்களைத்துரத்தி பூமியெல்லாம் பந்துபோல் சுருட்டித் தனக்கு ஒருவராலும் மரணமில்லையென்கிற அகங்காரத்தினால் ஜலத்துக்குள் வசிக்க, அவ்வசுரனைக்கொன்று தேவர் கூட்டங்களையும் மனிதர்களையும் இரக்ஷிக்க முயன்று, வராகவதாரமெடுத்து இப்பூமியை ஜலத்திற்குமேலே கொண்டுவந்து, பூவுலகங்களைக்காத்து அவ்வரக்கனுடைய உயிரை மாய்த்த பரம்புருஷா எங்களைக்காக்கவேண்டும். மறுபடியும் பிரமன் வரத்தினால் மஹாபலத்தையடைந்து பூவுலகத்தை நாசம்பண்ணின இரண்ய கசிபுவினுடைய மரணத்தை விரும்பின மூப்பத்து முக்கோடி தேவர்களும் கொண்டாட நரஹரிரூபத்தை யடைந்து அவன் பிராணனை மாய்த்த நரஹரியே உம்மை வணங்குகிறேன். இந்திரனுக்குத் தம்பியாகிய பலிச்சக்கிரவர்த்தியாகத்தை அலங்கரிக்க அவ்வரசனிடத்திற்குச்சென்று மூவடிமண் யாசித்து அவ்வரசனால் கொடுக்கப்படுங்காலத்தில் சுக்கிரன் கர்வத்தை யடக்கி உலகரூபியாய் அவதரித்து சுவர்க்க மத்தியமென்கிற ஈருலகத்தையும் இரண்டடியாயளந்து மூன்றாவது அடிக்கு பலிச்சக்கிரவர்த்தியின் சிரசிற்கு மகுடம்போல் தன்திருவடியைப் பதிப்பித்து பாலபர்வத்தையடைந்த வாமனனே உம்மைவணங்குகிறேன். தாலதங்காள்ஜகயாள் முதலான துர்விநீத அரசர்களை ஜமதக்கினியின்யாகப்பசுவைத் திருடினதால் உண்டானகோபத்தினால் இருபத்தொரு தலைமுறைவரையில் இப்பூமியின் கண்ணுள்ள கொடிய அரசர்களைக்கொன்று அவர்கள் ரத்தத்தினால் பிதுர்த்தர்ப்பணம் பண்ணின பரசுராமா உம்மைத் துதிசெய்கிறேன். பௌலஸ்தியனான ராவணனானவன் பதினாலுலோகங்களிலேயும் தனக்கு நிகர் ஒருவருமில்லையென்று கர்வமடைந்து இலங்கைக்கிறைவனாயிருக்கும்போது, பிரம்மாதி தேவர்

களால் பிரார்த்திக்கப்பட்டு ரவிகுலதிலகனாயவதரித்து விஸ்வாமித்திர ராலனேக அஸ்திரங்களை யுபதேசிக்கப்பெற்று கல்லுருவாயிருந்த கௌதமர் தாரத்தை பாததூளியினால் பெண்ணாக்கி சிவதனுசை யொடித்து சீதையைமணந்து வசிஷ்டர்முதலான ரிஷிகளோடு தன் கிரகமடைந்து, முடிசூட்ட விரும்பின சக்கிரவர்த்தியின் உள்ளத்தைக்கலைத்த கைகேசியின் திருவடியைத்தொழுது வனமேகி, பரதனுக்குப் பாதுகாமுடிசூட்டி தண்டகாரணிய மடைந்து இராவணனால் சீதையைப்பிரிவுற்று, வானர சைனியங்களைக் கூட்டிக்கொண்டு சமுத்திரத்திற்கு அணைகட்டிச்சென்று இராக்கதர்களைப் பஞ்சுபோல்கொட்டி சீதையைக்கிட்டி விபீஷணனுக்கு முடிசூட்டி, அயோத்தியை யடைந்து தம்பிகளோடு முடிதரித்த ஸ்ரீ முகுந்தனே உன்னை வணங்குகிறேன். யதிகுலத்தை உத்தரிப்பிக்க வேண்டுமென்று திருவுள்ளம்பெற்று வாசுதேவனா யவதரித்து, கம்சன் முதலான ராக்ஷதர்களைவதைத்து பலபத்திரனென்றும் மற்றோருருவை யடைந்த பாலகிருஷ்ணனே யுன்னை வணங்குகிறேன். கர்ம்மானுஷ்டானத்தைத்தவறி காபுருஷர்களென்னும் பெயரையடைந்து காக்கைபோல் உருவெடுத்து ஜீவித்துவந்த மானிடர்களை சாமர்த்தியத்தினால் வசப்படுத்தி புத்தியை யுண்டுபண்ணிபுத்தனென்னும் பெயரை யடைந்த பூபதியே உம்மைவணங்குகிறேன். இப்பொழுது வேதபாஹ்யாளான பௌத்த பாஷண்ட மிலேச்சர்களைக்கொன்று தர்மத்தைப் பரிபாலனம்பண்ணத் திருவுள்ளம்பற்றி கல்கியாயவதரித்து எங்களை ஸ்திரீத்துவமாகிய நரகத்தினின்றும் கரையேற்றி எங்களைக் காக்கவந்த கருணாநிதியாகிய கல்கியே உன்திருவடியை யடைகின்றேன். பிரம்மருத்திரேந்திராதிகளாலே துதிக்கப்பட்டு பரமானந்தத்தை யடைந்த அந்தப் பரமபுருஷனானவன் கருணாரசம்பெருகி காக்கக்கடவதான கடாக்ஷத்தினாலே தன்னைத் துதித்துநின்ற அவ்வரசர்களையும் பிரமன்முதலானவர்களையும் கண்ணுற்றார்.

கல்கிபுராணத்தில் இரண்டாவது அம்சம்
மூன்றாவது அத்தியாயம் முடிந்தது.

---

## கல்கியின் ஸ்மரணத்தினால் அநந்தன்வருதலாகிய நான்காவது அத்தியாயம்.

இப்படிப் பிராமண க்ஷத்திரிய சூத்திராள் முதலானவர்களால் துதிக்கப்பட்ட கல்கியானவர், பிறப்புவளப்பு முதலியதர்மங்களை யுபதே

சிக்க, அதுகளைக்கேட்ட அரசர்கள் நின்மலமானசித்தத்தை யுடைய வர்களாய் பகவானை வணங்கித் தங்களுடைய பூர்வஜன்மத்தின் குணங் களையும், தங்களுக்கு ஸ்திரீத்வம் வந்த காரணத்தையும், கிழத்தன சுவ ரூபத்தையும், யௌவனம் பால்யம் முதலானதுகள் வருவதற்குக் கார ணங்களையும், நாங்களறியாதகர்மங்களையும் சொல்லவேண்டியது என்று வேண்டிக்கொண்டனர். அனந்தமுனிவரை ஸ்மரணம் பண்ணினவுடன் தீர்த்தயாத்திரை பண்ணிக்கொண்டிருந்த அனந்தமுனியானவர் கல்கி யின் திருமேனியைக்கண்டு தரிசித்து மோக்ஷம் அடையவேணுமென் கிற ஆசையினால் வேகமாய் வந்து, கல்கியை வணங்கி எவ்விடத்தில் என்னகாரியஞ் செய்யும்படி அடியேனுக்கு ஆக்ஞாபிக்கின்றீர் என்று அஞ்சலிபஸ்தராய் சேவித்து நின்றார்.

அப்பால் அந்தக் கல்கியானவர் அநந்தரிஷியைப்பார்த்து ஓ! மஹா ரிஷியே? எனக்கு விடையளிக்க வேண்டும் உம்முடைய அனுக் கிரகத்தினால் பார்க்கப்பட்ட காரியம் முடிக்கப்பட்டது. எது பார்க்கப் படவில்லையோ அது முடியவில்லை என்று சொல்லி பிரயாணபிமுக மாய் இருக்கும் கல்கியைப்பார்த்து சமஸ்த அரசர்களும் சொல்லத்துட ங்கினார்கள். ஓ! மதுசூதனா! அனந்தரிஷியால் என்னசொல்லப் பட் டது. உங்களால் என்னசொல்லப் பட்டது அவைகளைச் சொல்ல வேண்டும் என்றனர். அரசர்களின் வாக்கியங்களைக்கேட்ட கல்கியான வர் அரசர்களே அவ்விஷயங்களை அந்த அனந்தரிஷியின் வாக்கினாலறிந் துகொள்ளுங்கள் என்று கட்டளையிட்டனர். அரசர்கள் அனந்தரிஷி யைவணங்கி ஓ ரிஷிபுங்கவரே ! கல்கியினால் என்னசொல்லப்பட்டது. எந்த தர்மமார்கம் பிரகாசிக்கச்செய்தார். அது எந்த உலகத்தை யளிக் கத்தக்கது என்பதை அருளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார் இவவாக்கியத்தைக்கேட்டு இருஷியானவரருளிச்செய்கிறார். கேளும் அரசர்களே புரிகாபுரியில் எல்லா வேதங்களையு மறிந்து எல்லாபிராணி களிடத்திலும் அன்புள்ளவராய் வித்துருமனென்னும் பெயரையுடைய என் பிதாவஸித்தார். என் மாதாவானவள் பதி பணிவிடை செய்துக் கொண்டுகாலத்தைக்கழித்து வருங்கால் இருவர்களுடைய யௌவனகா லத்தில் நபும்சக உருவான நான் பிறந்தேன். பிதாவுக்குத் துக்ககரமாய் உலகத்தார் நிந்திக்கும்படியான உருவத்தை யுடையவனாய் வசித்தேன். என்னுருவத்தைக்கண்டு அடங்காத்துயரத்தையடைந்து வீட்டைக்கட ந்து காட்டையடைந்து என் தந்தை தூபதீப நைவேத்தியங்களாலுப சரித்து சாந்தமூர்த்தியே ஓவாசுகியைக்கண்டத்தில் தரித்தவனே ஜடா

பாரத்தில் கங்கையைத்தரித்தவனே உன்னை வணங்குகிறேன் என்று தின ந்தினஞ் சங்கரனைத் துதிசெய்து இருந்தார், அக்காலத்தில் சங்கரன் விருஷபாரூடராய் என் பிதாவின்முன் பிரசன்னமாய் ஒபிரம்மரிஷியே! என்னவரம் வேணுமெனக்கேட்க என்பிதா வணங்கி என்பிள்ளை க்கு பும்ஸத்துவம் அளிக்கவேண்டுமென்றுகேட்டார். சங்கரன் அப்படி யேகொடுத்தோம் என்றுசொல்லி மறைந்தருளினர். என்தந்தை பும்ஸத் துவம் என்கிறவரத்தை வாங்கிக்கொண்டு கிரஹம்வந்து சேர்ந்தவுடன் நான் புருஷலக்ஷணமுள்ளவனு யிருந்தேன். இதைக்கண்டு என்தந்தை பரமானந்தங்கொண்டார். நான் யௌவனமுள்ளவனுயிருக்கக்கண்டு யக் ஞியராதன் பெண்ணுகிய குணவதியை எனக்கு கல்யாண முடிப்பித்தார். நான் அப்பெண்ணைப் பாரியையாகப்பெற்று கிரஹஸ்தாசிரமத்தையடை ந்து சந்தோஷமுள்ளவனுப் இருக்குங்கால் என் மாதாபிதாக்கள் கால தர்மத்தை அடைந்தார்கள் அப்போது பந்துமித்திரர்களோடு என் மாதாபிதாக்களுக்கு உத்தர கிருத்தியத்தை யதாவிதியாய் நடத்திப் பிராமணுளுக்கு அன்னபாஞதிகளைப்பண்ணி சுத்தமடைந்தேன். பிறகு மாதாபிதாக்களின் பிரிவினுல் துயரத்தை அடைந்தவனுய் இல்லறத்தில் விருப்பமுள்ளவனு யிருந்தேன் ஸ்ரீமந் நாராயணனைக் குறித்து நான்செ ய்த ஜபஹோமபாராயணம் முதலான கிருத்தியங்களால் அந்த பகவான் என்னுடைய ஸ்வப்பனத்தில் பிரசன்னராய் ஓ அனந்தனே இவ்வுல கங்களெல்லாம் மாயை என்று ஏனறியவில்லை இந்த சுகதுக்க ஜனன மரண மோகங்களெல்லாம் மிருத்யு தேவதைக்கு சுவாதீனம் என்று அறியக்கடவாய் என்று சொல்லி அந்தர்தானமாயினுர். அக்கணமே நான் மஹாநித்திரையை யடைந்தேன். அப்பால் மறுநாளுதயத்தில் அந்தபக வானுடைய வாக்கியத்தை நிர்ணயித்து பாரியையோடு புரிகாபுரியை விட்டு புருஷோத்தமத்தை யடைந்து பக்கத்திலிருக்கிற நிர்மாயாசிர மத்தை நானும் என்பாரியையு மடைந்தோம். அதற்குத் தென்பக்கத்தி லிருக்கிற ஸ்ரீமந்நாராயணனைப் பஜனைபண்ணிக்கொண்டு மாயையைப் பார் க்கவேண்டுமென்று அந்த பகவத் சந்நிதியிலிருந்து பாடிஆடி கூத்தாடிக் கொண்டு பரமானந்தத்தை யடைந்திருந்தேன். அந்நாளில் பனிரண்டாம் வருஷம் துவாதசி தினத்தில் பந்துக்களோடு சமுத்திரஸ்நானம் பண் ணப்போனேன். அந்த ஜலநிதியில் முழுகிக்கிடந்து எழுந்திருக்க சக்தி யில்லாமலிருந்தேன், அப்பொழுது என்னை ஜலசரங்கள் செய்த உபத் திரவத்தினுல் முழுகியெழுந்தெழுந்து வருத்தப்பட்டுக்கொண்டு பிரக் ஞையில்லாதவனுப் சமுத்திரத்தின் தென்பக்கத்தில் முழுகிக்கிடந்

தேன், என்னை விருத்தசர்மாவென்கிற பிராம்மணன் தன் நித்திய கருமங்களை முடித்துவிட்டு தயையோடு என்னை எடுத்து உபசரித்து தன்பட்டணத்துக்குக்கொண்டுபோய் பிள்ளையைப்போல பரிபாலித்தார்.

ஓ ராஜர்களே! அப்படிக் காப்பாற்றிக்கொண்டு வருகிற நாளில், அந்த திவ்விய தம்பதிகளே எனக்கு தாய்தந்தைகளென்று நினைத்திருந்தேன் எனக்கு வேண்டிய ஷோடசோபசாரங்களைச்செய்து நாலுவேதங்கள் ஆறுசாஸ்திரங்கள் முதலான கல்விகளில் அதிக சாமார்த்தியமுள்ளவனென்றென்னை நினைத்து அவருடைய பெண்ணை எனக்கு விவாகம்பண்ணிவைத்தார். இரதிதேவியைப்போன்ற ரூபலாவண்யத்தினாலும் பதிசுசுரூஷை பிராமண விசுவாசம் தெய்வபக்தி முதலான உத்தம குணங்களாலும் சிறந்த அசாருமதி என்கிற ஸ்ரீரத்தினத்தைக் கண்ட நான் பரமசந்தோஷத்தை யடைந்து அவளுடன் மன்மதனும் ரதியும்போல கிரீடித்துவருகிற நாளில், ஜயனென்றும் விஜயனென்றும் கமலனென்றும் விமலனென்றும் புதனென்றும் ஐந்துபிள்ளைகள்பிறந்தார்கள். நான் புத்திரமித்திர களத்திராதிகளோடும், தனதானியங்களோடும் கூடி தேவர்களால் சூழப்பட்ட இந்திரன்போல் என்னை எல்லோரும் நினைக்கும்படி வாழ்ந்துவந்தேன், அப்பொழுது ஜேஷ்டபுத்திரனாகிய புதனுக்கு விவாகம்செய்ய எத்தனித்தேன், தர்மசாரனென்ற இருபிறப்பாளன் எல்லா வாத்தியகீத நிருத்தியங்களோடு வேதவிதிப்படிதன்பெண்ணை கந்நிகாதானம் செய்தார். அப்பொழுது நான் என் பிள்ளைக்குண்டான மகோத்ஸவத்தில் தேவரிஷி பிதுர்களுக்கு திருப்தி பண்ணி வைத்தேன், பிறகு மகோததிஸ்நானத்திற்குப்போய் சமுத்திர கல்லோலங்களா லலைக்கப்பட்டு மூழ்கி எழுந்தபிறகு கரையில் துவாதசி பாரணையிலாசையுள்ள, விஷ்ணுஸேவபராளான என் சினேகிதர்களைக்கண்டு சந்தோஷித்தேன், அந்த சமுத்திரக்கரையில் பரமானந்த பரிதனுன என்னை எல்லாஜனங்களுங்கண்டு, ஓ அனந்தனே! விஷ்ணுபக்தர்களுக்குள் சிறந்தவரான நீர் ஜலத்துக்குள்ளும் கரையின்மேலும் மெய்மறந்து நிற்கின்றீர், எதைக்கண்டு இப்படி நிற்கின்றீர் பாரணைவேளை தப்பிவிடுகிறது எழுந்து பாரணைபண்ணும் என்று சொல்ல, ஓ ஜனங்களே! நான் ஒன்றுங் காணவுமில்லை கேட்கவுமில்லை, நான் பாரணைபண்ணமாட்டேன் நான் காமபரவசனுய் பகவன் மாயையினல் மூடப்பட்டவனுய் தடுமாறுகிறேன். சினேகத்தி

னுலும் மோகத்தினுலும் எவ்விடத்திலேயும் க்ஷேமத்தை அடையவி ல்லை என்னுடைய அஞ்ஞானத்தை யாரறிவார்கள் பாரியை யிடத்தி லும்தனத்தினிடத்திலும் புத்திரனிடத்திலும் பேராசைகொண்டு அவை களைமெய்சத்தியமென்று நினைத்து பிர்மித்து நிற்கிற வென்னைக்கண்டு ஹோவென்றுரோதனம் பண்ணிக்கொண்டு நின்ருள். அவளைக்கண்டு நான் அடிபெண்ணே ஏன் என்பக்கலில் நின்றுகொண்டழுகிருய் என்று கேட்டேன் இப்படி யிருக்கையில் தெய்வவசமாய் ஒரு அன்னப்பக்ஷி யானது நல்லவாக்கியங்களால் என்னை சுவஸ்தசித்தனைகப் பண்ணும் பொருட்டு அவ்விடத்திற்கு வந்தது, அப்பறவையானது அதிக தைரி யமுள்ளதாயும் எல்லாவற்றையு மறிந்ததாயும் தர்மமான குணமுள்ளதா யும், சூரியனைப்போல் ஒளியும் காந்தியும் உடையதாயும் ஜிதேந்திரியா யும் சாந்தமாயும் சோகமோகங்களை நீக்கினதாயுமிருந்தது. அப்பாலந்த ஹம்ஸமானது அங்கே உட்கார்ந்தது. அங்குள்ளஜனங்கள் ஓஹம்ஸமே! அனந்தன் என்பவர் என்னகாரணமாய் இப்படிப்பட்ட ஸ்திதியில் இருக் கிருரென்றுகேட்டார்கள். ஜனங்களையும்அனந்தனையும்நோக்கி அன்னம் சொல்லத்தொடங்கிற்று.

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

---

## ஐந்தாவது அத்தியாயம்.

ஓ அனந்தனே! புதன்முதலான பிள்ளைகளையும் நவரத்தினங்கள் நிறைந்த வீட்டையும் தாஸிதாஸவர்க்கங்களா லுண்டான சுகத்தையும் விட்டு இவ்விடத்திற்கு எப்பொழுது வந்தீர், சமுத்திரக்கரை சஞ்சாரத் திற்கு வந்து சோகத்தினுல் பீடிக்கப்பட்டிருக்கிறீர். நீர் எழுபதுவயது ள்ளவராயிருக்கிறீர். நான் முப்பது வயதுள்ளவனு யிருக்கிறேன், உமக் கும் எனக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது, உம்முடைய பாரி யாள் ஒருவர் கண்களிலும் படாத மஹா பதிவிரதையா யிருக்கின்ருள். நீரெங்கே நான் எங்கே, நீர் கிரஹஸ்தர் நான்சன்னியாசி, உமக்கும் என க்கும் எவ்வளவு வித்தியாசம். இது இந்திரஜால வித்தைபோ லிருக்கின் றது. இன்னும் சொல்லுகிறேன், நீர்சுவதர்மத்தை யனுஷ்டிக்கவல்லவர். நான் சர்வசங்கபரித்தியாகம் பண்ணினவன், உம்க்கும்நமக்குமுள்ள சி நேகமானது பாலனுக்கும் பயித்தனுக்கும்போலாகும். பார்த்தீரா ஒரு வருக்கொருவர் சம்பந்தமாவதும் சிநேகமாயிருப்பதும் சர்வேஸ்வரன் மாயாவிசேஷமே அப்பேர்ப்பட்ட மாயாஸ்வரூபத்தை அறிவதுதுர்ல

பம். எப்பொழுது அத்வைத பாவத்தை அடைகிருேே அப்பொழுது தான் மாயாஸ்வரூபம் வெளியாகும் என்றுரைத்து சமீபத்திலிருக்கும் மார்க்கண்டேய மகாரிஷியைப்பார்த்து சொல்லுகிறது ஓ மார்க்கண்டேயரே! நீர் பிரளயகாலத்தில் எதையெதை எப்படிக் கண்டீர் என்று வினவின அன்னத்தைப்பார்த்து மார்க்கண்டேயர் சொல்லுகிருர். ஓ! மகாபுருஷனே ! மஹாந்தகாரமானது உலகமெல்லாம்வியாபித்து ஒன்றுந்தெரியாமல்போய்விடும். அப்பால் மூன்றுலகங்களும் நீரில் அமிழ்ந்து பிர்ம்மமானதுதன்மாத்திரையை யடைந்து எங்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் அப்பால் அந்தப் பிரம்மமானது இரண்டுவிதமாய்ப் பிரிந்து பிரகிருதி யென்றும் புருஷனென்றும் நாமரூபத்தை யடைந்து சுயம்பிரகாசமாய்காலமென்றும், கர்மமென்றும் அகங்காரமென்றும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரசம், கந்தம், என்று பத்துநாமங்களை யுடையதாயும் அப்பால் பிரம்ம ருத்திரேந்திராதிகளும், தேவர்களும், உண்டாவார்கள். மாயாபலத்தினுல் ஜீவராசிகள் யாவும் மூடப்பட் டிருப்பார்கள். அப்படிப்பட்ட மாயையைத் தடுப்பதற்கு யோகிகளாலும் முடியாது. எந்த பகவானுக்கு எந்த மாயையானது சுவாதீனமோ அந்தபகவானலே மாயாபலத்தை யறியவேண்டும் அந்த மாயையில் பிரம்மாதிதேவர்கள் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிருர்கள்.

அந்த மாயையைத் தடுப்பதற்கு ஒரு வழியுண்டு அதென்னவென்ருல், பகவானுடைய திருவடியில் பூரண பக்தியுடன் இடைவிடாமல் தைலதாராவச் சின்னமாய் பஜனை பண்ணுகிறவர்களை மாயை யணுகாது (ஶ்லோ ॥ [illegible] ॥) ஆதலால் எல்லோரும் மாயையினுல், வலைக்குள்ளகப்பட்ட பக்ஷிகள்போல் தடுமாறுகிருர்கள். தவத்தினுல் அக்கியானத்தைநீக்கி ஐம்புலன்களை யடக்குவதும் செய்யலாம் என்று கூறினர் இவ்வாக்கியத்தைக் கேட்ட அனந்தனைவர் நான் இந்த க்ஷணத்தில் நாட்டையகன்று காட்டையடைந்து இந்திரியங்களை யடக்கிக்கொண்டிருக்கிறேனென்று புறப்பட்டு ஆரண்யத்தை யடைந்து இந்திரியங்களை யடக்க எத்தனித்தபோது சொல்லுகிருர். நான் தவஞ்செய்தாலும் என்னுடைய மனதானது தனகனக வஸ்துமுதலான வைகளைவிட்டுப் பிரியாமல் சஞ்சலப்படுத்திக்கொண் டிருக்கிறது என்று வருத்தப்பட்டு யோசிக்குங்காலத்தில் அந்த பத்து இந்திரியங்களுடைய அதிஷ்டான தேவதைகளான காற்று, திக்குகள் சூரியன், வருணன், அசுவனி தேவர்களிருவர்கள், அக்கினி, இந்திரன்,

மைத்திராவருணி உபேந்திரன், ஆகிய பத்துதேவர்களும் எனக்கெதிரில் வந்து நாங்கள் பத்துபேரும் உம்முடைய தேகத்தில் நகங்கள்போல் பிரியாமலிருந்தோம் எங்களைப் பிரிய அடிப்பது உமக்குத் தர்மமன்று நீர் விருதாவாய் எங்களைத் தெருத்த எத்தனம்பண்ணுகிறீர் எங்களை வெட்டினாலும், கொன்றாலும், மரணத்தை யடைவார்கள். குருடர்களுடையவும், செவிடர்களுடையவும், சிதலமான இந்திரியங்களையுடையவர்களுடைய மனதையும் பார்க்கிறோம். ஜீவாத்மாவுக்குச் சரீரம் ஒரு வீடுபோலவும் அந்த வீட்டிற்கு மனதானது ஆதாரமாயும், அந்தமனதுக்கு புத்தி ஆதாரமாயும், அந்த புத்திக்கு நாங்களாதாரமாயும், விளங்குகிறோம். கர்மானுகுணமான சரீரத்துக்கு மனதானது பந்தத்தைப் போக்கடிக்கின்றது. அந்த பரமாத்துமாவின் மாயையால் ஸம்ஹரிக்கிறார்கள். ஆதலால் எல்லாவற்றிற்கு மனதேகாரணம் ஆதலால் மனதை யடக்கக்கடவீர் (ஶ்லோ ‖ மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ: ‖ ) ஆதலால் மனதை யடக்குவதற்காக நாராயணனைப் பஜனை செய்யக்கடவீர். அந்த ஹரிபக்தியானது சுகத்தையும், மோக்ஷத்தையும், பிரம்மானந்தத்தையும் கொடுக்கவல்லது. ஹரிபக்தியில்லாமல் ஜீவனுக்கு ஜன்மமோக்ஷ மடங்காது என்று சொல்லி மறைந்துவிட்டார்கள். ஓ! அனந்தனே! கல்கிபகவானைத் தரிசித்து சுகவீட்டை யடையலாம் என்று கிளியால் போதிக்கப்பட்ட நான், பாபகுலத்தை நாசம்பண்ண வல்லவரான கல்கிபகவானைக் காணவந்தேன். அரூபியான கல்கியின் ரூபத்தைக்கண்டு தேடுவதற்கரிதான அவன் திருவடிகளைத் தொட்டேன் பதமில்லாத வாக்கியத்தின் அர்த்தமானது கேட்கப்பட்டேன். இப்படி அனந்தனால் போதிக்கப்பட்ட முனியானவர் தாமரைக்கண்ணனை வணங்கித் தன்னிருப்பிடம்போய்ச் சேர்ந்தார். அந்த ராஜாக்களும் முனி வாக்கியத்துக்கிசைய நிர்வாணகதியை அடைந்தார்கள். இந்த அனந்தனுடைய விருத்தாந்தத்தையும், சகலபாபத்தைப்போக்கும் கல்கிபகவான் சரித்திரத்தையும் கேட்டும் பட்னம் பண்ணியும் நடக்கும் பொழுதும், தூங்கும்பொழுதும், போஜனம்பண்ணும்போதும் எவன் துதிக்கிறானோ அவனுக்கு அபமிருத்யு தோஷமும் தாரித்திரதோஷமும் நரகவேதனையும் சம்ஸாரதுக்கமு முண்டாக மாட்டாது என்று சொன்னார்.

கல்கிபுராணம் இரண்டாவது அம்சத்தில்
ஐந்தாவதத்தியாயம் முற்றிற்று.

## ஆறவதுஅத்தியாயம்.

## கல்கிபகவான் சிம்மளகிராமத்திற்கு வருதல்.

இப்படி அனந்தன் வாக்கியத்தைக்கேட்ட ராஜக்கூட்டங்கள் போன பிறகு கல்கி சிம்மளக்கிராமத்திற்கு பிரயாணப்பட எண்ணங்கொள்ள இதையறிந்த இந்திரனனவன் விசுவகர்மாவை யழைத்து ஓ! விசுவகர்மாவே! சாக்ஷாத் நாராயணன் கல்கியாயவதரித்த சிம்மளக்கிராமத்தில் அநேகமான கோபுரப்பிரகாரங்களும், மகரதோரணங்களும், சூரிய மண்டலத்தை யளாவும் கோபுரங்களும் சந்திரனைத் திரஸ்கரிக்கும் ஸ்படிகக்கற்களால் கட்டப்பட்ட சுவர்களும் மாணிக்கங்களால் செய்யப்பட்ட மாளிகைகளும் கோமேதகங்க ளிழைத்த கொடுங்கைகளும் வைரங்களிழைத்த வாவிகளும் பச்சைகளிழைத்த பதுங்குகளும் புஷ்பராகங்களிழைத்த செய்யாகிருஹங்களும் வழிப்போக்கர்களையழைக்கும் வாதாயனங்களும் மேகமண்டலத்தை யளாவும் மேல்க்கட்டுகளும் நாகரீகமான நாடகச்சாலைகளும் ரம்மியமான ரங்கஸ்தலங்களும் இன்னும் அலங்காரமான தோட்டங்களும் மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, முதலியவைகளும் பாடலி, புன்னாகம், அசோகம், அல்லி, குடஜம், குடஜகம் முதலான விருக்ஷங்கள்நிறைந்த தோட்டங்களும் அத்தோட்டத்தில் கோகிலங்கள் வண்டுகள் முதலான பக்ஷிவர்க்கங்களும் சாதகம் சக்கிரவாகம் சகோரம் அன்னம்முதலான நீர்ப்பறவைகளும், யானைசாலை குதிரைச்சாலைகளும் அநேகவிதமான பௌமங்களும் நிறைந்த இந்திரலோகம்போன்ற உலகத்தைச் சிருஷ்டிபண்ணக் கடவீரென்றுரைத்தான். வாஸவன் வாக்கியத்தைக்கேட்ட விசுவகர்மாவானவன் அப்படியே தேவர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், முதலானவர்கள், பிரம்மிக்கும்படி நகரத்தையுண்டுபண்ணினன் பிற்பாடந்த கல்கிபகவான் ஸமஸ்த சேனைகளோடு காடு மலையைக்கடந்து சமுத்திர தீரத்தையடைந்தார். பிருகத்திரதனவர் கௌமுதியோடு முதிதராய் பத்மாவதியையழைத்து ஸ்திரீரத்தினமே எவ்வளவுகாலம் வாஸம்பண்ணினலும் புறந்தகத்தைவிட்டு நீங்கஸ்திரீகளுக்கு மனம்வரமாட்டாது. அப்படிக்காயினும் ஸ்திரிகள் எல்லாரும் புருஷனிடத்திலிருந்து காலத்தைக் கழிக்கவேணுமென்று மனுயாக்கியவல்கியர் மரீசிமுதலான ரிஷிகள்சொல்லியிருக்கிறார்கள். எப்படியென்றால், (॥ ஶ்லோ॥ பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவனே । ரக்ஷந்தி ஸ்தாவிரே புத்ரா ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யமர்ஹதி ॥ பதிரேகோ குரு ஸ்த்ரீணாம் பதிரேவ பராயணம் । பதிரேவ பராராத்யஃ பதிர்தைவம் ந ஸம்ஶயஃ ॥ ) என்று

உபதேசித்து பெண்ணுக்குப்பதினுயிரம் யானைகளையும், இருபதாயி ரங் குதிரைகளையும், தாசிதாஸவர்க்கங்கள் யாவும் கொடுத்து பத்ம நாபன் பின் தொடரச்செய்தான். உடனே கல்கிபகவான் அஞ்சுகத்தை ப்பார்த்து, பிராணபதமான கிள்ளையே நீமுன்னுதாய்ச் சமுத்திரத்தைக் கடந்து சிம்மளத்தில் விசுவகர்மாவினுல் சிருஷ்டிக்கப்பட்ட வீடுகளைக் கண்டு என்னுடைய க்ஞாதிவர்க்கங்களுக்கு என்னுடைய க்ஷேமத்தைச் சொல்லக்கடவாய். நான் கல்யாணம் செய்த விபரமும் என்னுடைய பரிஜனங்களுடைய க்ஷேமத்தையும் சொல்லக்கடவீர். நான் சர்வசைன் னியங்களோடு பிர்ப்பாடு வருகிறேன் என்றுரைத்த கல்கியின் வாக்கியத் தைக்கேட்ட அஞ்சுகமானது ஆகாயமார்க்கமாய்க்கிளம்பி சமுத்திரத் தைக்கடந்து எழுயோஜனையுள்ள சிம்மளகிராமத்தை யடைந்து பிரா மண க்ஷத்திரியவைசிய ஜாதிகளால் சூழப்பட்ட ராஜவீதிகளையும் முத ல்வருணத்தார் ஒழியாமற்சொல்லும், வேதங்களையும் இரண்டாவது வ ருணத்தார்செய்யும் கருமங்களையும் மூன்ருவதுவருணத்தார் செய்யும் வர்த்தகவிருத்தியையும் நான்காவதுவருணத்தார் செய்யும் தர்மங்களை யும் யோகங்களையும் கண்டு இது பிரம்மலோகமோவென்று தியங்கித் தெளிந்து மனிதர்கள் பூமியில் நடக்கிருர்கள் ஆதலால் பிரம்மலோக மன்றென்று நிதானித்து அப்பால் போகும்போது, வைணிகாள் பாடும் பாட்டுகளையும், ஸ்திரீகள்நடனம்பண்ணும் நாட்டியத்தையும்கண்டு மய ங்கி இதுஇந்திரலோகமோவென்றுநினைத்து, எல்லாவேசிகளும் இமைக ளைக்கொட்டிப் பிடிக்கும்அபினயங்களால் இது இந்திரலோகமாகாதெ ன்று நிதானித்து அதைக்கடந்து அப்பால்சென்று தங்கவண்ணமான ரூபங்களுள்ள சிலர் வாயினுல் பாடிக்கொண்டிருக்க கந்தர்வலோகத்தி லிருக்கிற கந்தர்வர்களோ என்று பிரமித்து நின்று இவர்களுடைய கால் களைக்கண்டு கந்தர்வர்களுக்குப் பாதமில்லாமையால் இவர்கள்கந்தர்வர் கள்ஆகமாட்டார்கள் என்று நினைத்து அப்பால் வெகுதூரம்போய் அவ் விடத்தில் யாசகர்கள் அலமலமென்று சொல்வதைக்கண்டு, இது குபேர லோகமோவென்று தியங்கிநின்று குபேர லோகத்தில் யாசகர்கள்கிடை யாது, இவ்விடத்தில் யாசகர்களிருக்கிறபடியால் இது குபேரலோகமாக மாட்டாதென்று நிதானித்து, மனதிலடங்காத ஆனந்தங்கொண்டு விஷ் ணுயசஸ்ஸின் கிருகத்தை யடைந்து அவரை வணங்கிப் பகவானு டைய சரித்திரங்களையும் பத்மாவதியின் விவாகத்தின் வைபவத்தையும் சொல்லிற்று. எல்லாப் பிரஜைகளும் பகவானுடைய வரவைக்கேட்டு பரமானந்த பரிதராய் சுவர்ணமயமான கும்பங்களை எடுத்துக்கொண்டு

புறப்பட்டு வந்தார்கள், தவிர சிம்மளகிராமத்தில் தெருக்கள்தோறும் மகரதோரணங்களும் மணிமய தீபங்களும் சந்தனகருதூபங்களும், சாந்தமான தூளிகளும், மங்களவாத்தியங்களும், மாணிக்கமாலைகளும், தூண்டாவிளக்குகளும், விளங்கஅலங்கரித்து, விண்பரவும்சத்தங்களும், வீணாகானங்களும், பரதநாட்டியங்களும், பிர்ம்மகோஷங்களும், தும்புருவாத்தியங்களும், கரதாளங்களும், காம்பிரிய டங்காக்களும் முழங்க, புஷ்பித்த பலவித விருக்ஷங்களும், பாடலீமரங்களும், மல்லிகைமலர்களும், மழைபோல் பொழியும் மகரந்தங்களும்நிறைந்திருக்க, பரிஜனங்களோடு பகவானைக்காண எதிர்சென்றார்கள். இப்படி யிருக்குங்காலத்தில் கல்கியானவர் சமுத்திரத்தைக் கடக்க யோசித்துக்கொண் டிருக்கும் போது பகவானுடைய கிருபையால் ஜலமானது கல்லைப்போலிருக்கக் கண்டு களிப்புகொண்டு சைந்நியங்களோடு புறப்பட்டு மஹோததியைக் கடந்து சிம்மள கிராமத்தை நாடிவந்தார். அப்போது சிம்மளக்கிராமவாசிகள் பத்மாவதியோடு கூடிய பகவானைக்கண்டு ஆனந்தக்கூத்தாடினார்கள். அப்பால் விஷ்ணுயஜஸ்ஸைக்கண்டு சாஷ்டாங்க பிரதட்சணம்பண்ணி நமஸ்கரித்தார்கள். கல்கியின் தாய்தந்தைகள் தன்புத்திரனைக் கண்டு காடாலிங்கனம்பண்ணிபத்மாவதியின் முகசந்திரனைக்கண்டு சந்தோஷ மடைந்தார்கள் இப்படி யொருவருக்கொருவர் க்ஷேமவிசாரணைச் செய்துக்கொண்டு நல்ல சுபமுகூர்த்தத்தில் சிம்மள கிராமத்தை யடைந்து பத்மாவதியோடு வாழ்ந்து வந்தார். கல்கியானவர் பத்மாவதியின் வயிற்றில் ஜயனென்றும் விஜயனென்றும் இரண்டுபிள்ளைகளைப் பிறப்பித்தார். இந்த மஹோத்ஸவத்தைப்பார்க்க அநேகங்கோடி அரசர்கள் வந்து காக்ஷியைக்கண்டு ஆனந்தித்துத் தங்கள் தங்களிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள்.

அப்பால் கவியின் பாரியான காமகலையானவள் பிருஹத் கீர்த்தியென்றும், பிருஹத்பாகுவென்றும் இரண்டு புத்திரனை யுண்டுபண்ணினள். பிராக்ஞனவன் சன்னிதியின் வயிற்றில் யக்ஞயனென்றும் விக்ஞயனென்றும் இரண்டு புத்திரனை யுண்டுபண்ணினன். சுமந்திரனவன் மாலினி வயிற்றில் சாஸன் என்ற புத்திரனை யுண்டு பண்ணினன்.

## திக்குவிஜயம்.

உடனே கல்கியானவர் அசுவமேதயாகம் செய்யக்கருதி பிதாவைக்கண்டுவணங்கி நான் எல்லாத் திசைகளுக்கும்போய் துஷ்ட ராசர்களை ஜெயித்துவந்து தனகனகம் முதலான திரவியங்கள் கொடுக்கிறேன் அசுவமேதயாகம் செய்யலாமென்றுசொல்லி சேனைகணங்க

ளோடு புறப்பட்டு முதல்முதல் கீடபுரத்தை யடைந்தார். அவ்விடத்தில் வேத சாஸ்திரங்களின் முறைமைதெரியாதவர்களாயும், தேவயக்கியம் பிதுர்யக்கியம் முதலான கர்மங்கள் இல்லாதவர்களாயும் மாயாவாதிகளாகியும், தேகத்தையே தெய்வமென்றும் ஆகாரம் ஸ்திரீபோகம் முதலான காரியங்களே பிரதானமாயுடையதென்று கூறும் பௌத்தகணங்களையும் கண்டு இவர்களை அடியோடு நாசஞ்செய்ய வேண்டுமென்று யோசனைசெய்து முற்றிக்கை போட்டுக்கொண்டிருந்தார். பௌத்தகணங்களுக்கு அரசனாகிய ஜிஸ்ரீதேவன் கல்கியின் வரவைக் கேட்டு அடங்காக்கோபங்கொண்டு அநேகஅக்ரோணி சேனைகளோடு புறப்பட்டு பட்டணத்துக்கு வெளியில் வந்தான்.

ஆறுவது அத்தியாயம் முற்றிற்று.

---

## ஏழாவதத்தியாயம் பௌத்தயுத்தம்.

சூதபுராணிகர் சொல்லுகிறார் எல்லாப் பாவங்களையும் போக்கவல்லவரான கல்கியானவர் எல்லாச்சேனைகளுடனே புறப்பட்டு நானாவிதமான யுத்தஞ்செய்து எதிரிகளின் சேனைகளைப் புறங்காட்டி யோடச்செய்து அட்டகாசங்கள் பண்ணிக்கொண் டிருக்குங்காலத்தில் தலைவிரிகோலமாய் ரத்தவஸ்திரங்களை யுடுத்திக்கொண்டு ஓடும் மாயாவாதிகளையும் புத்தகணங்களையும் கண்டு கல்கிபகவான் சொல்லுகிறார். ஓ! பௌத்தகணங்களே! ஓடாதேயுங்கள். பராக்கிரமத்தை யடைந்து யுத்தஞ்செய்யுங்கள் உங்களாண்மையைக் காண்பிக்கக்கடவீர். ஓ ஜினதேவரே! உம்மை குருவென்று கொண்டாடும் பௌத்தக் கூட்டங்களுடைய புத்தியை என்னசொல்வேன். ஓ பித்தம்பிடித்த புத்தாதிபனே! என்று சொல்லும் கல்கியின் வாக்கியத்தைக்கேட்டு ஜினதேவன் கோபங்கொண்டுசூலாயுதத்தை யெடுத்துக்கொண்டு கல்கிக்கெதிரில்வந்தான். அனந்தரம் கல்கியானவர் பரிஜனங்களோடு ஜினதேவருக்கு எதிரில் வந்து தன் வில்லைவளைத்து குணத்தொனிசெய்து ஜினன் சூலாயுதத்தை துண்டம்பண்ணினார்.

உடனே கல்கிபகவான் பூமியைப் பாய்போல்சுருட்டி ஒரு பாணமாக்கி ஜினனன்மேல் பிரயோகம்பண்ணினார். ஜினதேவன் கோபங்கொண்டு கல்கியின் அஸ்திரத்தையும், கவசத்தையும், சேதித்தான் அதனால், மூர்ச்சையாய் தரையில் விழுந்தார். விசாகயூபன் ஜினதேவ

னால் மூர்ச்சையாய்க்கிடக்கும் கல்கிபகவானை ரதத்திலேற்றி உபாரித்தான். உடனே கல்கிபகவான் களைதெளிந்து தன் சேனாஜனங்களைச் சமாதானப்படுத்தி தான் ஒரு சூலத்தை எடுத்துக்கொண்டு உன்னதமான குதிரையின்பேரிலேறி ஜினதேவனுக்கெதிரில் வந்து அவனையும் அவன் சேனைகளையும் பாணங்களாலும், அஸ்திரங்களாலும், கதையினாலும், கால்களாலும், தடிகளாலும், அடித்து தும்ஸம்பண்ணினார் அப்போது பவுத்தகணங்கள் மூச்சு விடுவதற்கு ஸ்வாதீனமற்று உயரக்கிளம்பி தீவாந்தரங்களில் ஒடியொளித்துக்கொண்டார்கள். சிலர் ரணக்களத்தில் மடிந்தார்கள், விசாகயூபனானவன் அன்பதினாயிரவரைக் கொன்றான், பிராக்கியனானவன் பத்துலக்ஷம் சேனைகளைக்கொன்றான், சுமந்திரனானவன் ஐந்துலக்ஷம் சேனைகளைக் கொன்றான். இப்படியாக எதிரி சேனைகளையெல்லாம் கொன்று மிச்சமாயிருக்கிற ஜினதேவனைக்கண்டு சிரித்து ஓ ஜினதேவனே ! குருவென்று பேர்வஹித்து பௌத்தக்கூட்டங்களை மோசம்பண்ணி பலிஷ்டனென்று பெயர்வஹித்துக் காலத்தைக் கழிக்குங் கபடசந்நியாசியே என்னுடைய பெலம் தெரியாமல் என்னிடத்தில் யுத்தத்துக்குவந்தீர். நான் பிரயோகம்பண்ணும் பாணங்களால் நாசத்தை யடையப்போகிறீர் என்றுரைத்த கல்கியின் வாக்கியத்தைக்கேட்டு ஜினதேவன் சிரித்துச் சொல்லுகிறான். ஓ கல்கியே ! பௌத்தர்களெல்லாம் பிரத்தியக்ஷவாதிகள் நீங்கள் அப்பிரத்தியக்ஷவாதிகள் நீர் தெய்வமாயிருப்பது வாஸ்தவமாயிருந்தால் என்னோடு எதிர்நின்று சண்டைசெய்யக் கடவீர் என்றான். இப்படி நிந்தையான வாக்கியங்களைச் சொன்னதால் கல்கிபகவான் கோபத்தோடு வில்லை வளைத்து நாணேறிட்டு பாணவருஷங்களைப் பொழிந்தார். உடனே ஜினதேவன் ஆக்கினேயம் வாயவ்வியம் ஐந்திரம் கௌபேரம் முதலான அஸ்திரங்களைப் பிரயோகம்பண்ணியும் கல்கியின் மகிமையால் விருதாவாய் விட்டது. இதெப்படி இருந்தது என்றால் ஊஷரபூமியில் விதைத்த விதையைப்போலும், வேதம்தெரியாத பிராமணனுக்குக்கொடுத்த தானம் போலும் இருந்தது. ([illegible]) இப்படித் தன்பாணங்களும், வில்லும், வீணாய்ப்போனதைக்கண்டு ஜின்தேவன் வருத்தப்பட்டுப்பின்னும்தயிரியத்துடன்விருஷபத்தின்மேலேறிக்கொண்டுசூலாயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு பகவான்எதிரில்வந்தான். அப்பொழுது பகவான் கோபத்தை யடைந்து கிளம்பி ஜினனது மயிரைப் பிடித்திழுத்துக் கீழேதள்ளி ஒருவரோடொருவர் சாணூர சௌரி போலவும் இராம ராவணன்போலவும், விருத்திர வாஸவன்போலவும்,

சண்டையிட்டு கால்களா லுதைத்துக் கைகளால்குத்தி இருகால்களை யும் பிடித்து யானையைக்கொல்லும் சிங்கம்போல் கிழித்துப் போட்டார். ஜினன்விழுந்து மரணத்தையடைந்ததைக் கண்ட பௌத்தர்களெல்லோரும் அய்யோ அய்யோவென்று அழுது பெருங்கோஷ்டம் பண்ணினார்கள்.

இப்படி ஜின்தேவன் மரணத்தை யடைந்ததைக்கண்ட அவன் தம்பியான சுத்தோதனன் கோபங்கொண்டு பாதசாரியாய்க் கதாயுதத்தை யெடுத்துக்கொண்டு கல்கியின் முன்வந்து நிற்க, கல்கியானவர் பாணமழையினால் சுத்தோதனன் தேகந் தெரியாமல்மூடிச் சிங்கம்போல் கர்ஜனை பண்ணினன். உடனே சுத்தோதனனும், கல்கியும், ஒருவரோடொருவர் மல்லயுத்தமும், பாகுயுத்தமும், முஷ்டியுத்தமும் பண்ணி சுத்தோதனன் கதாயுதத்தை முறித்து கைகளினால் அறைந்து சுத்தோதனனை மண்ணில்விழ்த்தினார். மறுபடியும் சுத்தோதனன் எழுந்திருந்து கல்கியை மற்றோர் கதையாலடித்தான். அதனால்கல்கி ஐம்புலன்களுங் கலங்கி மொட்டைமரம்போல் நின்றார். அதுகண்டு சுத்தோதனனானவன் மகா பலமுள்ள மாயாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்ய யோசிக்குங்காலத்தில் தேவர்கள் அசுரர்கள் முதலான முப்பத்துமுக்கோடி தேவர்களும் கண்டு நடுநடுங்கினார்கள். இதைக்கண்ட பௌத்தர்களின் சேனைகள் உத்ஸாஹத்தோடு சுத்தோதனன் செய்த உபாயத்தைக் கண்டு சந்தோஷங்கொண்டு அநேகங்கோடிமிலேச்ச கணங்களோடு யுத்தசன்னத்தமாய்ப் புறப்படுங் காலத்தில் அந்த மாயாசக்தியானவள் சிம்மத்துவஜங்கட்டிய ரதத்தில் டாகினி-சாகினி-மோகினி-என்று சொல்லப்பட்ட க்ஷுத்திர தேவதைகளால் சூழப்பட்டு பிரபலமான அஸ்திரங்களோடு புறப்பட்டு கல்கியின்முன் வந்தாள். இதைக்கண்ட கல்கியின் சேனைகள் பெருங்காற்றிலகப்பட்ட பஞ்சுபோல் மூலைக்குமூலையோடினார்கள். சிலபேர் கையிலிருக்கும் ஆயுதங்களை நழுவவிட்டு சித்திரப் பதுமைபோல் அசைவற்று நின்றார்கள். தன் பிராதாக்களும் பந்துக்களும் இந்தப்பிரகார மிருக்கக்கண்ட கல்கிபகவான் மாயாதேவியைக்கண்டு ஓ பிறியமுள்ளவளே என்னிடத்தில் வரக்கடவாய் என்றுரைத்தார் கல்கியின் வாக்கியத்தைக்கேட்ட மாயாதேவியானவள், அன்புமேலிட்ட நாயகியானவள் நெடுங்காலம் பிரிந்திருந்த தன் கணவனைக் கண்டதுபோல் அதிக ஆசையுடன் கல்கியின் சரீரத்தில் கலந்துவிட்டாள்.

உடனே பௌத்தகணங்கள் மாயாதேவியைக் காணுமல் ஹோவென்று அழுதுக்கொண்டு அம்மா தாயே நாங்கள் என்னசெய்வோம் எங்களை சத்துரு கையில் காண்பித்துக்கொடுத்தாயே எங்கள் பலமெல்லாம் போய்விட்டதே நாங்கள் இனி என்னசெய்வோம் என்றழுதுக் கொண்டோடத் தலைப்பட்டார்கள். அப்பொழுது கல்கியானவர் தன் சேனைகளைக்கண்டு ஓ! ஜனங்களே! நாம் ஜயம் அடைந்தோம். இந்த மிலேச்சகணங்களைக் கொல்லுவோம் வாருங்கள் என்றுரைத்து பெரிய கத்தியை யெடுத்துக்கொண்டு உயர்ந்த குதிரையின் மேலேறி வெற்றி பொருந்திய வில்லையும், சூரியனையொத்த கவசமும், பாம்புபோன்ற அங்குலித்திராணங்களும், ஆழமான கிணர்போன்ற அம்பராப்பெட்டியும், கோடிசூரியோதயம்போல் விளங்கும் கிரீடமும் யௌவனஸ்திரீகளெல்லாங்கண் டானந்தங்கொள்ளும் சரீரமும் ஸ்வஜனங்களைக் காக்கும் கடைக்கண்களும்முள்ள கல்கிபகவானைக்கண்ட பௌத்தகணங்கள் நடுநடுங்கினார்கள். ஸ்வஜனங்களைக்காக்க வல்லவராயும், பாபங்களைப்போக்க வல்லவராயும், சராசரங்களை குக்ஷிக்குள்வைத்து ரக்ஷிக்கும் கல்கி பகவான் நமக்கு அனுக்கிரகத்தைப் பண்ணக்கடவர்.

## இரண்டாவது அம்சத்தில் ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## மூன்றாவது அம்சம் முதல் அத்தியாயம்.

### மிலேச்சவதை.

அப்பாலந்த கல்கியானவர் தன் கைவாளால் அந்த மிலேச்சகணங்களையும், பௌத்தகணங்களையும், நாசஞ்செய்யத் துடங்குவதுடன் கவிபிராக்கியன், சுமந்திரகன், கார்கயன், பரகன், விசாலன் முதலான சேனைகளோடு, கபோதரோமா, காகாக்ஷன், காகன், கிருஷ்ணன் முதலானசுத்தோதனன் பிள்ளைகளோடு எதிர்த்து விருத்திரவாஸவன்போல் யுத்தஞ் செய்யுங்காலத்தில் பார்க்கும் ஜனங்கள் பிரமிக்கவும் நோக்கும் ஜனங்கள் நடுங்கவும், காணும்ஜனங்கள் கதறவும், யுத்தஞ்செய்தார்கள். அந்த யுத்தகளத்தி லிருந்து உண்டாகும் ரத்தவெள்ளத்தில் வாரணப்பிணமாகிற பாறைகளும், வெள்ளைக்குதிரைகளாகிற மணல்மேடுகளும், பாணங்களாகிற மீன்களும், யானையின் தந்தங்களாகிற சங்கங்களும், யுத்தவீரர்களுடைய தலைமயிர்களாகிற பாசிக்கொத்துகளும், ரதங்களாகிற தடா

களும், கழுகு பக்ஷிகளாகிற அன்னங்களும், சேனாசமுத்திரங்களாகிற நதியின் கோஷ்டங்களும், யுத்தசமூகமாகிற மலைச்சாரலினின்று முன்டான ரத்தவெள்ளத்திற் சேர்ந்து தென்திசைக் கிறைவனான யமனுடன் சொல்வதுபோல் தென்திசையை யடைந்து ஓடின இந்த கோரமான யுத்தத்தைக்கண்ட பௌத்தஸ்திரீகள் புழுதிகளைப் பூசிக்கொண்டும் ரத்தவஸ்திரங்களை யுடுத்திக்கொண்டும் தலைவிரிகோலமாய் சிலர்ஓடினார்கள் சிலர் பெருந்தாகமெடுத்து ஜலம் எங்கேயெங்கேயென் றழுதார்கள். சிலர் தங்கள் பர்த்தாக்கள் இறந்த துக்கத்தை நினைத்துக்கொண்டு யிதோ இந்த கல்கியை நாசம்பண்ணுகிறோம். நாங்கள் கல்கியின் சேனைகளை நாசமடைவிக்கா விட்டால் மிலேச்ச ஸ்திரீக ளாகமாட்டோமென்று ஆர்பரித்தார்கள்.

## மிலேச்சஸ்திரீகள் யுத்தம்.

உடனே அந்த ஸ்திரீகளெல்லாம் ஒன்று சேர்ந்து சிலர் ரதங்களிலும், சிலர் யானைகளிலும், சிலர் குதிரைகளிலும், சிலர் எருதுகளிலுமேறிச் சென்று வில்லை யெடுத்து பாணங்களை வில்லிற்பூட்டி ஜகமெங்கும் கீர்த்தியை நாட்டி சத்துருவின் சேனைகளை யுத்தத்தில் வாட்டி புறங்காட்டி யோடும்படி யுத்தஞ் செய்யும்போது கல்கியின் சைன்னியங்கள் ஓடி கல்கியின் திருவடிகளில்வீழ்ந்து ஓ பிரபுவே எங்களைக் கார்க்கவேண்டும் அந்த ஸ்திரீகள் யுத்தத்தில் எங்களை நாசஞ்செய்து விடுகிறார்கள் வாரும் எங்களைக்காருமென்று கதறிக்கதறி யழத்துடங்கினார் பகவான் பிரமைகொண்டு யுத்தகளத்திற்கு வந்து அந்த ஸ்திரீகளைப் பார்த்துச் சொல்லுகிறார்.

ஓ! ஸ்திரீரத்தினங்களே! புருஷர்கள் ஸ்திரீகளோடு யுத்தஞ்செய்வது யுக்தமன்று அல்லாமலும் கண்களுக்கு இன்பத்தைக்கொடுக்கிற பூர்ண சந்திரன்போலிருக்குமுங்கள் முகங்களில் நான்எப்படிபாணங்களைப்பிரயோகஞ்செய்வேன் கரிவிழிகளோடு விளங்குமுங்கள் நேத்திரஸரோருங்களில் எப்படி சஸ்திரங்களைப் போடுவேன் முத்தாரங்களைத் தாங்கப்பெற்ற உங்கள் சக்கிரவாகம்போன்ற ஸ்தனங்களில் எவ்விதமாய் அம்பைப்போடுவேன் உங்கள் பிம்பம்போன்ற அதரங்களில் எப்படி அம்பைப்போடுவேன் சங்கம்போன்ற உங்கள் கண்டங்களில் எப்படி ஆயுதங்களைப்போடுவேன் பர்வதம்போன்ற உங்கள்ஸ்தனபாரங்களால் மெலிந்த இடுப்பில் எப்படிநாராசப்பிரயோகஞ்செய்வேன் வடபத்திரம்போல்

விளங்குமுங்கள் வயிறுகளில் எப்படி நாணிகளைப் பிரயோகம்பண்ணு வேன்இரும்லேகள் போன்ற ஜகனங்களில் யெவ்விதமாய் நான்சூலாயுதத் தைப்போடுவேன் உங்களோடயுத்தஞ்செய்தால் எனக்குப்பழிப்பு உண் டாகும் என்று சொன்னார் இப்படிபிரம்மையோடு சொன்ன வாக்கியங்க ளைக்கேட்டு ஸ்திரீகள் யாவரும் கல்கியின் சௌந்தரியத்தி வீடுபட்டு சொல்கிறார்கள். ஓய் கல்கியே! நீர் எங்கள் விஷயத்தில் தயைபண்ண வேண்டாம் நீர் ஆண்பிள்ளையாகில் எங்களோடு யுத்தஞ்செய்யும் என்று சொல்லி தங்கள் தங்கள் வில்லையெடுத்து பாணங்களைத் தொடுத்து ஆக் கினேயாஸ்திரம், மானவாஸ்திரம், ஐஷிகாஸ்திரம், மோஹனாஸ்திரம், காந்தர்வாஸ்திரம் பிரும்மாஸ்திரம்முதலான அஸ்திரங்களைப்போட்டார் கள் அந்த அஸ்திரங்கள் யாவும் தங்கள் தங்கள் ரூபத்தை யடைந்து பகவானுக்கு நாற்புறமும் சுற்றிக்கொண்டு பகவானைக்கண்டு ஓ கோபா லா உம்முடைய சௌரிய வீரியங்களை நாங்களறிவோம் நீர் இராமாவ தாரம்செய்தகாலத்தில் விஸ்வாமித்திர மஹாரிஷியா லுபதேசிக்கப்பட்டு உங்களைச் சரணமடைந்தோம் இராவணஸம்மாரம் பண்ணினபிறகு கல் கியாய் யவதாரஞ்செய்யப்போகிறதாயும் எங்களை இந்த கீடபுரத்தில் இருக்கும்படிக்கும் ஆக்கியாபித்தீர் இப்போது நாங்கள் இதோ வந்திரு க்கின்றோம். பிருதிவியாதி பூதங்களும் தன்மாத்திரைகளும் முக்கால ரூபமாயும் அரிஷட்வர்களாயுமுள்ள பிரகிருதியை உண்டுபண்ணி அதி னால் உலகமுழுதும் ஜீவான்மாக்கள் பரவும்படியாயும் ஸமஸ்தமான பிரும்மாண்டம் முதலான அண்டங்களை யுண்டுபண்ணி அந்த பிரும்மா ண்டங்களில் மாயையையுண்டுபண்ணி உலகத்தைநடத்தும் நாமமாயிர முடையவரே நீர்ஆதியாயும் அந்த மாயும் அழிவில்லாத பரம்பொருளாயு மிருக்கிறீர் இந்த உலகமெல்லாம் பொய்யாயும் உள்ளபடி யறியாதமூடர் களுக்கு மெய்யாய் நினைத்து பிரம்மிக்கும்படி செய்கிறீர் தேவரீரைச் சரணமடைந்தவர்களுக்கு யமவாதனை யேது மிருத்துயு பயமேது கால மேது நாங்கள் விஸ்வாமித்திர ரிடத்திலிருந்து இராமனை யடைந்து இரா மனைவிட்டு கிருஷ்ணனையடைந்து கிருஷ்ணனைவிட்டு இந்த ஸ்திரீகளை யடைந்தோம். இப்போ எங்களை திருவுள்ளம் பற்றவேண்டும் என்று வேண்டின அஸ்திரங்களின் வாக்கியங்களைக்கேட்ட அந்த ஸ்திரீகள் எல்லாரும் பரமாச்சரியங்களை யடைந்து மோஹமுதலான மாயையை விட்டு கல்கிபகவானைச் சரணமடைந்தார்கள். ஓய் பரமபுருஷா பக்த வச்சலா எங்களைக் காக்கவேண்டும் அக்கியானத்தினால் உங்கள் பெரு மையை யறியாமல் யுத்தத்திற்கு வந்தோம் நாங்கள்செய்த பெரும்பிழை

களைப்பொறுத்தருளவேண்டும் பரமபுருஷாவென்று துதித்தார்கள். உடனே கல்கிபகவான் சொல்லுகிறார், என்னுடைய ஸங்கல்பத்தைச்சொல்லுகிறேன். கேளுங்கள் ஶ்லோ ॥ [illegible] ॥ ஆதலால் நீங்கள் என்னை ஆதரவோடு சரணமடைந்ததினால் உங்களை ரக்ஷிக்கக்கடவேன். ஓய் பக்திமதிகளே நீங்கள் காஷ்டபாஷாணவஸ்துக்களை யடைந்து பஜனைபண்ணும் பக்ஷத்தில் உங்களுக்கு நான் சுவாதீனனாய் விடுவேன் அப்படிக்கல்லாமல் நான் ஒருவருக்கும் சுவாதீனனாகமாட்டேன். ஆதலால் நீங்கள் பக்தியோகத்தைஅடைந்து மோக்ஷத்தை யடையக்கடவீர்கள் அந்த மோக்ஷமானது யோகிகளாலு மடைவது வருத்தம் என்ற கல்கியின் வாக்கியத்தைக்கேட்ட மிலேச்ச ஸ்திரீகளும் பௌத்த ஸ்திரீகளும் பகவானை வணங்கி சொல்லுகிறார்கள். ஓய் பரம்புருஷா, பக்தவத்ஸலா, ஆபத்வாந்தவா, அனாதரக்ஷகா எங்களுக்கு மோக்ஷத்தைக்கொடுப்பதுடன் எங்களுடைய பதிகள் புத்திரர்கள் முதலான ரணக்களத்தில் மரணத்தை யடைந்தவர்கள் எல்லோரும் நல்லகதியடைய திருவுள்ளம்பற்றி யருளவேண்டுமென்று வேண்டினார்கள். அப்பால் அந்த வைகுந்தநாதனானவன் சந்தோஷமடைந்து அவர்களுடைய கோரிக்கையின்படி வரமளித்த தருணத்தில் விஷ்ணுலோகத்தி லிருந்து திவ்யவிமானம்வர அவ்விமானத்தில் மரணமடைந்த சமஸ்தபிராணிகளும் விமானத்திலேற விமானம் ஆகாயத்திலெழும்ப அதைக்கண்ட எல்லா ஜனங்களு மானந்தத்தையடைந்தார்கள். அப்பா லந்த மிலேச்சஸ்திரீகளும் பௌத்தஸ்திரீகளும் நகரத்துக்குள் பிரவேசித்து வைடூரியம் முதலான நவரத்தினங்களைக் காணிக்கையாகக்கொண்டு அந்த பரமபுருஷனுடைய திருவடிகளைப் பணிந்தார்கள் இந்த பௌத்தயுத்தத்தையும் மிலேச்ச யுத்தத்தையும் யாவனொருவன் கேட்கிறானோ யாவனொருவன் படிக்கிறானோ அவன் வைகுண்டத்தை யடைவது திண்ணம் இந்த உபாக்கியானமானது சம்சாரதாபத்தையும் மாயா உபத்திரவத்தையும்நீக்கி இந்த உலகத்தில் சமஸ்த ஐசுவரியத்தையுமளித்து பரலோகமும் கொடுக்கவல்லது.

மூன்றாவது அம்சத்தில் முதல் அத்தியாயம்

முற்றிற்று.

## குதோதரிவதை.

அப்பாலந்த பகவானானவன் கீடபுரத்திற்குள் பிரவேசித்து அவ்விடத்திலும் தன்னுடைய தத்துவங்களையும் ஸ்தாபித்து அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு சக்கிரதீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணி நித்திய கர்மாநுஷ்டானத்தை முடித்து தன் பிராதாக்களோடு சில வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருக்குந்தருணத்தில் அங்குவிசனசாகரத்தில் மூழ்கிக் கிடக்கும் ரிஷிக்கூட்டங்களைக்கண்டு இதென்ன கஷ்டம் வந்தது என்று திகைத்து நிற்குந்தருணத்தில் ரிஷிகள் சொல்லுகிறார்கள். ஓய்பரமபுருஷா ஆபத்பந்து அநாதரக்ஷகா எங்களைக்காக்கவேண்டும். ஓய்பக்தவத்ஸலா எங்களை ரக்ஷிக்கக்கடவீர் என்று கூறினர். இவ்வாக்கியங்களைக் கேட்ட சரண்ணியனானவர் சொல்லுகிறார். ஓ! தபசிகளே! ஏன்பயப்படுகிறீர்கள் யாரால் உங்களுக்கு இப்படிப்பட்ட பயம் உண்டாச்சுது. அவன் மூவுலகங்களுக்கிறைவனான இந்திரனானாலும்சம்ஹரித்து விடுகிறேன் பயப்படவேண்டாமென்று அபயப்பிரதானம் பண்ணினார். பின்னும் புண்டரீகாக்ஷனைப்பார்த்து ஓய்கருடத்துவஜா விஷ்ணுயஸசுவின் அருந்தவப்புத்திரனே கும்பகர்ணனது புத்திரனாகிய நிகும்பன் என்பவனுடைய பெண்ணும் காலகஞ்சனுடைய பாரியாளும் விகஞ்சனது தாயுமாகிய குதோதரீ என்று ஒரு ஸ்திரீ யிருக்கிறாள் அவளுடைய உருவத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். இமயமலையில் சிரத்தை வைத்துக்கொண்டு நிஷதமலையில் கால்களை நீட்டிப் படுத்துக்கொண்டு காலகஞ்சனுக்கு ஸ்தன்னியப்பானம் பண்ணிவைத்தாள் நாங்கள் இமயமலைச்சாரலில் தவஞ் செய்துகொண் டிருக்கும்போது அவளுடைய மூச்சுக்காத்தினால் இவ்விடம்வந்து சேர்ந்தோம் எங்களை பெருங்காத் தடித்துக்கொண்டு போகும்போது தேவர்கள் எங்களிடத்தில் பிரீதியால் எங்களை இழுக்கும்போது எங்களோடு வந்ததேவர்களையும் பாரும் ஸ்வாமி நாங்கள் உங்களால் ரக்ஷிக்கக்கடவோம் என்கிற வாக்கியத்தைக்கேட்ட பீதாம்பரதாரியான கல்கிபகவான் தன் ஸேனாஸமூகங்களை ஸன்னகப்படுத்தி யிமயமலைச்சாரலை யடையக் கருதிப்புறப்பட்டார். ஒரு ராத்திரி அவ்விடத்திலிருந்து மறுநாள் உதயத்துக்கு ஸைன்னியங்களோடு க்ஷீரநதியையடைந்து சங்கைப்போலும் சந்திரனைப்போலும் வெண்மை நிறம் வாய்ந்து நுரைகளையுமடைந்து சுழல்களோடு ஓடும் நதியைக்கண்டு எல்லா சைங்கியங்களும் பயந்து நதியைக் கடக்கமுடியாமல் ரிஷிகணங்களைப் பார்த்து ஓ ரிஷிகளே இந்த நதியின் வரலாறென்ன எவ்விடத்திலிருந்து உண்டாகிறது என்று சொன்ன

கல்கியின் வாக்கியத்தைக்கேட்டு ரிஷிகள் சொல்லுகிறார்கள். ஓய் பரம புருஷா இந்த நதியானது குதோதரியின் ஸ்தனத்திலிருந்து உண்டான பால்களை விகஞ்சன் ஸ்தனபானம் பண்ணின மிகுதியான பால்களை வகித்து நதியாய் ஓடிவருகிறது. சுவாமி இது ஒரு ஆச்சரியமல்ல இவள் பால்கொடுக்கிற இடமெல்லாம் நதியாயோடுகிறது. நாலுபக்கங்களிலும் இப்படியே யோடுகின்றது மற்றொரு ஸ்தனத்தின்பால் நதிகளாகவே ஓடுகின்றன என்றனர். இப்படிச்சொன்ன ரிஷிகளின் வாக்கியங்களைக் கேட்டுகல்கிமுதலானோரும் அஞ்சி இதென்ன ஆச்சரியமா யிருக்கின்றது இவளுடைய ரூபம்எப்படிப்பட்டதோ எவ்வளவுபெரிதோஇவளுடைய பலம் எப்படிப்பட்டதோ நாங்களறியோமென் றுரைத்தனர். அப்பால் கல்கியானவர் சேனைசமூகத்தோடு புறப்பட்டு முனிகளால் காண்பிக்கப்பட்ட வழியாலே குதோதரியானவள் எங்கே படுத்திருக்கிறாளோ அவ்விடம்போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது அவளுடைய மூச்சுக்காத்தால் அவ்விடத்தில் மரமுதலானதுக ளொன்றுமில்லை. தன்குழந்தையாகிய விகஞ்சனும் பால்பரிகித் தூங்குகிறான்.

அவளுடைய காதின் பிலமென்றறியாமல் மலையின் குகையென்று நினைத்து சிங்கங்கள் அவ்விடத்தில் பிள்ளை பேரன் முதலானதுகளை யுண்டு பண்ணிக்கொண்டு சுகமாய் வசிக்கின்றன. அவளுடைய கேசங்களென்று அறியாமல் மான்கூட்டங்கள் புதரென்று நினைத்து வசிக்கின்றன. அவளுடைய தலையின் மேற்புறத்தில் நரிகள் பேன்போல் வசிக்கின்றன. இப்படி யிருக்கப்பட்ட உருவத்தை தக்கண்டு பகவான் தன் சைன்னியங்களால் அவ்விடத்தில் நெருப்புக்கோட்டை கட்டுவித்து சில சேனைகளை யவ்விடத்தில் நிறுத்தி கொஞ்ச சைந்நியத்தோடும் சர்வாயுதங்களோடும் புறப்பட்டு குதோதரியின் சமீபத்திற்குப்போய் சண்டப்பிரசண்ட உத்தண்ட வில்லை மண்டலீகிருதமாய் வளைத்து ஒரு பாணத்தைப்பூட்டி அவள் மார்பிலடித்தார் உடனே அந்த ராக்ஷஸஸ்திரீபோட்ட சத்தத்தினால் வனவாசிகளாகியரிஷிகளும் வனமிருகங்களும் ஊழிக்காலமென்று பயந்து ஓடிப்போயின. அவ்விடத்திலிருந்த சேனைகள்பயந்து பூமியின்மேல் விழுந்தன. அப்பால் குதோதரியானவள் தன்மூச்சை உள்ளே இழுத்தாள் அதனால் அவள் வாயென்றறியாமல் சேனைகளோடு கல்கியானவர் உள்ளே பிரவேசித்தார். அதைப்பார்த்து தேவர்கந்தர்வாள் எல்லாரும் ஹாஹாவென்று கூவிக்கொண்டு நடுங்கினார்கள். இந்தகோஷ்டத்தைப்பார்த்து ரிஷிகள்விசனப்

பட்டார்கள். உடனே கல்கியானவர் உதரத்திற்குள் பிரவேசித்தது அனுகூலமென்று நினைத்து வாளை எடுத்து உதரத்திலிருக்கிற கோசங்களையும் நாடி நரம்புகளையும் துண்டு துண்டாய் அறுத்து மலைபோல் குவித்து ஆக்கினேயாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்து மாம்மிச பர்வதத்தை கொளுத்தினார் அதனால் அவளுடைய நாசித்துவாரத்திலிருந்து புகைகிளம்பி ஆகாயமார்க்கமாய்ப் போகிறபோது தேவர்கள் இதென்ன அனீதி அய்யோ கல்கிபகவான் என்னமானாரோ என்று நடுங்கிக்கொண்டு நின்றார்கள். அப்பால் விருத்திராசுரனைக்கொன்று தேவேந்திரனனவன் எப்படி ஜயங்கொண்டாரோ அதுபோலவும் இராவணனை புத்திரமித்திராதிகளோடு எப்படி வென்று ஜயங்கொண்டாரோ அதுபோலவும் உடனெவெளியேவந்தார். சிலர்நாசித்துவாரத்தினாலும் கர்ணவிவரங்களாலும் வெளியேவந்தார்கள் உடனே அந்தகுதோதரியானவள் மரணத்தையடைந்தாள். சாகும்போது ஒருபெருஞ்சத்தம்போட்டாள். அந்த சத்தத்தினால் மலைகளெல்லாம் சிதறிப்போயிற்று பக்ஷிகளெல்லாம் பறந்து போயிற்று. உடனே அவளுடைய சிறிய பிள்ளையான கரஞ்சனனவன் பயந்தோடினான். விகஞ்சனனவன் நிராயுதனாய் சேனாசமுகத்தின் நடுவில் குதித்தான். அவன் யானைகளைமாலையாயும் குதிரைகளைஹாரங்களாயும், மலைப்பாம்புகளை தலைப்பாகையாயும், சிங்கங்களை மோதிரங்களாயும் தரித்துக்கொண்டு காலாந்தகன்போல் கோபங்கொண்டு மாதாவைக்கொன்ற கல்கியின் சேனைகளை கால்களாலும் கைகளாலும் கசக்கி நாசஞ்செய்தான்.

அப்போது கல்கிபகவான் பரசுராமனால் கொடுக்கப்பட்ட பிரும்மாஸ்திரத்தை எடுத்து விடுத்து ஐந்து வயதுள்ள விகஞ்சனைக் கீழே தள்ளி உயிரைப்போக்கினார். அவன்சரீரத்தில் னின்றுமுண்டானரத்தத்தினால் ஓடும் வெள்ளத்தில் இறந்தபிணங்கள் யாவும் மிதந்துக்கொண்டு போயிற்று முன் முலைப்பால் ஓடின ஆற்றில் இரத்தம் நிறைய ஓடிற்று இப்படி மாதாவோடு பிள்ளையும் மரணத்தை யடையக்கண்ட தேவர்களும், ரிஷிகளும், ஒன்றுகூடி பகவானுடைய சிரத்தில் புட்பங்களைப் பொழிந்தார்கள். தும்புருநாரதர்பாட, தேவஸ்திரீகள் ஆட, எல்லா சேனைகளும் ஒன்றாய்க்கூட, பகவானுடைய சௌரியத்தை பார்த்து அவருடைய திருவடிகளை நாட, இராக்கதக் கூட்டங்கள் நொந்து வாட, கல்கிபகவான் அங்கிருந்து சேனைகளோடு புறப்பட்டுவந்து அன்றிரவு ரிஷிகளின் வேண்டுகோளின்படி ஹரித்துவாரமென்கிற க்ஷேத்திரத்தில்

தங்கினார் இப்படி சகல சேனைகளோடு ஜயங்கொண்ட கல்கியை தண்டன் ஸமர்ப்பிக்க வசிஷ்டவாமதேவ ஜாபாலி காசிப கௌசிக ஹாரித ஹாரித மிருகண்டுமார்க்கண்டேயபராசரர்முதலான ரிஷிக்கூட்டங்கள் மந்திராக்ஷதைகளையும் காணிக்கைகளையும் கொண்டு புருஷஸூக்தங்களாலும் உபநிடதங்களாலும் துதிசெய்துக்கொண்டு ஹரித்துவாரத்தை யடைந்தார்கள்.

## மூன்ருவது அம்சத்தில் இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று

### நாரதர் வருகை.

அப்பால் சத்துருக்களின் உபத்திரவம் நீங்கி சுகமாக தங்கள் காரியங்களில் இருக்கும் தவசிகளைப் பார்த்து தர்மவித்துவான் கல்கிபகவான் ஓ ரிஷிகளே நீங்கள் யார் சூரியன்போல் பிரகாசிக்கின்றீர் நான் பண்ணின புண்ணிய வசத்தால் எனக்கு உங்கள் சேவைபிராப்த்தம் ஆயிற்று நீங்கள் மூன்றுலோகங்களிலுமுள்ள புண்ணியாத்துமாக்களுக்குள் சிறந்தவர்போல் காண்கிறது. தீர்த்தயாத்திரைபண்ணிக்கொண்டு வந்தீர்கள் போலும். உங்களைப்போலுள்ள பெரியவர்கள் இன்னமும் எங்கே வசிக்கிருர்கள் உங்களுடைய கிருபாகடாக்ஷத்தினுல் நான் தன்னியனானேன் என்றுசொன்னார். இவ்வாக்கியங்களைக்கேட்ட நாரதர் முதலான ரிஷிகள் ஜகன்னதரே முத்தொழிலுக்குக்காரணபூதரே காலத்தினுலும், கர்மத்தினுலும், குணத்தினுலும், உலகங்களை நடப்பிக்கிறவரே பிரம்மாதிதேவர்களால் துதிக்கப்பட்ட பாதபத்மத்தையுடையவரே யென்று துதித்தார்கள். அப்பாலந்த கல்கியானவர் தன்முன்னிற்கு மிருவர்களைக்கண்டு இவர்கள் யார் மஹா பலமுள்ளவர்கள்போல காண்கிறது. இவ்விடத்திற்கு ஏன்வந்தார்கள் கங்காதேவியை என்னகாரணமாய்த்துதிக்கிருர்கள் இவர்கள் பெயரென்னவென்று கேட்ட கல்கிபகவானைப் பார்த்து அந்த இருவர்களுக்குள் மருவென்பவன் சந்தோஷத்துடன் அஞ்சலியஸ்தனாய்ச் சொல்லுகிருன்.

சுவாமின் தேவரீர் ஸமஸ்த பிராணிகளுக்குள்ளும் அந்தராத்துமாவாயும் பரமாத்துமாவாயு மிருந்து எல்லாமறிந்திருந்தும் என்னைக் கேட்கிறீர் ஆதலால் சொல்லுகிறேன் ஜகத்காரணவஸ்துவே தேவரீருடைய நாபிக்கமலத்தி லிருந்து பிரம்மா உண்டானார் பிரம்மனிடத்திலிருந்து மரீசி யுண்டானார் மரீசியினிடத்தி லிருந்து மனு உதித்தார்

மனுவினிடத்திலிருந்து இக்ஷ்வாகுபிறந்தார் இக்ஷ்வாகுவினிடத்திலிருந்து யுவனாசுவன் பிறந்தான் யுவனாசுவனிடத்திலிருந்து மாந்தாதா உற்பவித்தார் மாந்தாதாவிடத்திலிருந்து புருகுத்ஸன் பிறந்தான் புருகுத்ஸனிடத்திலிருந்து புத்திமானாகிய அனரண்ணியன் பிறந்தான் அனரண்ணியனிடத்தினின்றும் திரஸதஸ்யு பிறந்தான் அவனிடத்திலிருந்து அரியசுவன்பிறந்தான் அவனிடத்திலிருந்து திரியருணன் பிறந்தான்அவனிடத்திலிருந்து திரிச்சங்குபிறந்தான் திரிச்சங்குவினிடத்திலிருந்து அரிச்சந்திரன் பிறந்தான் அவனிடத்திலிருந்து ஹரிதன்பிறந்தான் அவனிடத்திலிருந்து வ்ருகன் பிறந்தான் அவனிடத்திலிருந்து சகன் பிறந்தான் அவனிடத்திலிருந்து அஸமஞ்சன் பிறந்தான் அஸமஞ்சனிடத்திலிருந்து அம்சுமான் பிறந்தான் அவனிடத்திலிருந்து திலீபனும் அவனிடத்திலிருந்து பகீரதனும் உண்டானான் அந்த பகீரதனால் விஷ்ணுவின் திருவடியினின்றுமுண்டான கங்கையானவள் பாகிரதி என்று பெயரையடைந்து உலகத்திலுள்ள பாபிகளுடைய பாபங்களைப்போக்கியும் இஷ்டபலனையளித்தும் மஹாநதி என்று பெயரை வஹித்தும் வருகிறாள் ஶ்லோ॥ [illegible] ।ஸ்வாமி உம்முடைய திருவடியில் நின்றுமுண்டான கங்கையின்பெருமையை யாராலறியக்கூடும் அந்தபகீரதனிடத்திலிருந்து சுதனும் அவனிடத்திலிருந்து நாபனும்அவனிடத்திலிருந்து பலியும் அவனிடத்திலிருந்து ஸிந்துத்வீபனும் அவனிடத்திலிருந்து அயுதாயுவனும் அவனிடத்திலிருந்து ரிதுபர்னனும் அவனிடத்திலிருந்து சுதாஸனும் அவனிடத்திலிருந்து சௌதாஸனும் அவனிடத்திலிருந்து அசுமகனும் அவனிடத்திலிருந்து ஸமூலகனும் அவனிடத்திலிருந்து தசரதனும் அவனிடத்திலிருந்து ஏடவிடனும் அவனிடத்திலிருந்து விசுவஸஹனும் அவனிடத்திலிருந்து கட்வாங்கனும் அவனுடத்திலிருந்து திர்கபாகுகனும் அவனிடத்திலிருந்து ரகுவும் அவனிடத்திலிருந்து அஜனும் அவனிடத்திலிருந்து தசரதரும் அவரிடத்திலிருந்து ஸாக்ஷாத் நாராயணன் ராமனாய் அவதாரம் பண்ணினார். என்று சொன்னான். இவ்வாக்கியத்தைக் கேட்டு கல்கிபகவானானவர் பரமசந்தோஷசித்தராய் அந்த ராமபிரானுடைய சரித்திரம் பிரம்மானந்தத்தை யுண்டு பண்ணுமாதலால் அந்த ராமகதையை விஸ்தாரமாகச் சொல்லக்கடவீர் என்றனர்.

# மூன்றாவது அம்சத்தில் மூன்றாவது அத்தியாயம். ருக

## ஸ்ரீராமர் சரித்திரம்.

ஓ ப்பிரபுவே அந்த ராமசரித்திரத்தை ஆயிரம் நாவையுடைய ஆதிசேஷனாலும் சொல்லமுடியாது எனக்குத்தெரிந்தவரையில் சொல்லுகிறேன் அந்தராம சரித்திரத்தைச் சொல்வதினா லுண்டாகும்பலனை சொல்கிறேன் வெகு ஜன்மாந்திரங்களால் அடைந்த பாபஸமூகங்களை ஒரு நொடிப்பொழுதில் போக்கடிக்கும். அந்த ராமமந்திரத்துக்கு முன் எந்தமந்திரமும் நிற்காது வேதங்கள், சாஸ்திரங்கள், இதிஹாஸங்கள் உபநிடதங்கள், மந்திரங்கள், எல்லாம் ராமாவென்கிற மந்திரத்துக்குள் ளடங்கி யிருக்கின்றன. அதற்கு திருஷ்டாந்தம் பாத்மோத்தரகண்டத்தில் பார்வதிக்கு பரமசிவன் உபதேசிக்கின்றார், ஶ்லோ॥ ராமராமேதி ராமேதி ரமே ராமே மநோரமே। ஸஹஸ்ரநாம தத்துல்யம் ராமநாம வராநநே॥

தேவர்களால் பிரார்த்திக்கப்பட்ட பரமபுருஷன் சூரியகுலத்தில் நான்கு அம்சமாயவதரித்து விஸ்வாமித்திரர் யாகத்தைரக்ஷித்து ரிஷிக் கூட்டங்களோடு சென்று கல்லாயிருந்த கௌதமர் தர்மதாரத்தைப் பெண்ணாக்கி மிதிலையையடைந்து ஜனகனால் காண்பிக்கப்பட்ட வில்லை வளைத்து பேரின்பத்தை யுண்டுபண்ணினார். ஜனகனால் அழைக்கப்பட்ட தசரதன் மிதிலையையடைந்து தன்வம்சமாகிய சூரியவம்சப் பெருமையைச்சொல்லி ஜனகரை சந்தோஷிக்கச் செய்தார். அப்பால் விஸ்வாமித்திரர் அனுமதியால் ராமலட்சுமணாள் பரத சத்துருக்கனர்களுக்கு விருதகோதானம் முதலான கிருத்தங்களைச்செய்து சர்வாலங்காரபூதர்களாய் விளங்கினார்கள். பிறகு ஜனகசக்கிரவர்த்தியானவர் தன் பெண்களிரண்டையும் தம்பியின் பெண்களிரண்டையும் ராம லக்ஷ்மண பரதசத்துருக்கினன் ஆகிய நால்வருக்கும் உத்தம முகூர்த்தத்தில் பாணிக்கிரஹணம் செய்வித்துப் பெண்களுக்கு ஸ்ரீதனமாக தாஸதாஸீவர்க்கங்களும் ரதகஜதுரகமும் வச்சிரவைடூரிய முதலான ரத்தினங்களும் கொடுத்தார். உடனே ஸமஸ்த வஸ்துக்களையும் எடுத்துக்கொண்டு தசரதர் புத்திரர்களுடனும் சீதை முதலானமருமகளுடனும் அயோத்திக்குப் புறப்பட்டார் பின்பு பாதை நடுவில் ஸ்ரீராமர் பரசுராமனுடைய கர்வத்தையடக்கி அயோத்தியா பட்டணம்போய்ச் சேர்ந்து சுகமாய் வாஸம்பண்ணினார் பின் தசரதர் ராமனுக்கு மகுடம்சூட்ட விரும்ப கைகேசி தடுத்து ராமனை காடேசச்

செய்தாள் அப்படியே ராமபிரான் தன் தம்பி லட்சுமணரோடும் ஜானகியாரோடும் காட்டையடைந்து சித்திரகூட பர்வதத்தில் வாசம்பண்ணிக்கொண்டிருந்தார். ஸ்ரீராமபிரானைப் பிரிந்த துக்கத்தால் தசரதர் சுவர்க்கமடைந்தார் வசிஷ்டரால் கேகயநகரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட பரதன் பிதாவுக்கு உத்தரகிருத்திய முதலானதும் முடித்து பட்டணத்து ஜனங்களோடு புறப்பட்டு குகனால் கங்கையைக்கடந்து பரத்துவாஜரால் காண்பிக்கப்பட்ட மார்க்கமாய்ச் சென்று சித்திரகூடத்தையடைந்து ராமன் திருவடிகளிற் பணிந்தார். அனந்தரம் பரதனால் தன் பிதாவின் மரணத்தைக்கேட்ட ஸ்ரீராமர் துக்கமடைந்து பிதுர்க்கடன்களைமுடித்து பரதனுக்குப் பாதுகையையளித்து அத்தியாச்சிரமத்தைக் கடந்து விராதனைக்கொன்று சரபங்கருக்கு மோக்ஷமளித்து அகத்தியரைவணங்கி பஞ்சவடியில் வசித்துக்கொண்டிருந்தார். பிறகு சூர்ப்பனகையின் தூண்டுதலால் வந்த கரதூஷணாதிகளான பதினாலாயிரம் ரதக்காரர்களை சங்கரித்துச் சீதையுடன் வாசம்பண்ணினார் பிறகு அகம்பனன் சூர்ப்பனகை முதலானவர்களுடைய வாக்கியத்தைக்கேட்டு கோபங்கொண்ட இராவணனானவன் மாரீசராச்சிரமத்துக்குவந்து சீதாநிமித்தமாய் மாரீசனைவேண்ட மாரீசனால் தடுத்துச் சொல்லப்பட்ட வாக்கியங்களைக் கேளாமல் மேலுமேலும் தூண்டினான் மாரீசன் காலகதியை நினைத்து பொன்மானாய் உருவெடுத்துஸ்ரீராமபிரானது பர்ணசாலைக்குமுன் நிற்க சீதாபிராட்டியார் அம்மானைக்கண்டு மயங்கி இதைப் பிடித்துத் தரவேண்டுமென்று ராமபிரானை வேண்ட ராமர்தடுத்தும் கேளாததால் லக்ஷ்மணரைக் காவல்வைத்துவிட்டு ஸ்ரீராமர் மான்பின் தொடர்ந்தார் அந்தப் பொய்மான் வெகுதூரத்தை யடைந்து ராமன் பாணத்தினலடிபட்டு சீதாலட்சுமணாவென்று சத்தமிட்டு மாண்டது.

அந்தச் சத்தங்கேட்டு சீதை திடுக்கிட்டு இலட்சுமணரைக் கடூர வாக்கியங்கள் சொல்லிப் பிரியச்செய்தாள் அப்பொழுது சமயம் பார்த்திருந்த ராவணசந்நியாசி சீதையை தூக்கிக்கொண்டோடினான். அப்போது ஜடாயுதடுக்க ராவணன் தன்பாணத்தினால் ஜடாயுவை மரணவஸ்தையையடையச்செய்தான். அப்பொழுது சீதாபிராட்டியார் ககனமார்க்கமாய்ப் போகிறபோது ராவணனறியாமல் வஸ்திரத்தின் நுனியில் ஆபரணங்களைக்கட்டி பஞ்சவானரமத்தியில் போட்டாள். அதன் பிறகு இராவணன் சமுத்திரத்தைக்கடந்து இலங்கையை யடைந்து அசோகவனத்தில் சீதாபிராட்டியை இருக்கச்செய்தான். பின்பு இராவணன்தன் சுவாதீனமாகும்படி பலமுறை வேண்டியும் பிராட்டியார்

அதற்கிணங்கவில்லை, அனந்தரம் ராமபிரான் லட்சுமணருடன் பர்ண சாலையில் வந்துபார்க்க சீதையைக்காணாததால் துயரத்தையடைந்து காட்டு வழியாய்த் தேடிக்கொண்டு வருஞ் சமயத்தில் ஜடாயுவினால் சீதையின் விருத்தாந்தத்தைக்கேட்டு ஜடாயுவை தகனம்செய்து தர்ப்பணாதிகளை முடித்துவிட்டு பம்பாசரஸ்சையடைந்து சுக்கிரீவனோடு சிநேகம்பண்ணி தனது பலத்தைக்காட்டி வாலியோடு யுத்தம்செய்து அவனைக்கொன்று சுக்கிரீவனுக்கு மகுடம் சூட்டி மழைக்காலத்தைப் போக்கினார்கள். பின்பு சரத்காலம் வந்தவுடன் சுக்கிரீவன் கட்டளைப்படி சீதாபிராட்டியைத் தேடிப்போன சமஸ்த வானரங்களும் மூன்று திக்குகளிலுமிருந்து வந்துசேர்ந்தது, தென்திசையை யடைந்த அனுமான் ஜாம்பவன் முதலான வானரங்கள் வெகுதூரம் சென்று சுயம்பிரபாளது குகையைக்கடந்து விந்திய பர்வதத்தை யடைந்தார்கள். அப்பால் அனுமார் சம்பாதி வசனத்தினால் சமுத்திரத்தைக்கடந்து இலங்கிணியைமடித்து சீதையைக்கண்டு கணையாழியைக்கொடுத்து சூடாமணியை வாங்கிக்கொண்டு அசோகவனத்தைபழித்து அக்ஷயகுமாரனை வதைத்து இலங்கையைக்கொளுத்தி திரும்பி மகேந்திர பர்வதம்வந்து வானரருடன் ராமபிரான் திருவடிகளையடைந்து சீதாபிராட்டியார் விருத்தாந்தங்களை விண்ணப்பஞ்செய்தார். அனந்தரம் ஸ்ரீராமபிரான் வானரசைன்னியங்களோடு அபிஜித்து முகூர்த்தத்தில் புறப்பட்டு தென் சமுத்திரக்கரையை யடைந்து சமுத்திரத்தை வற்றச்செய்து விபீஷணனுக்கு அபயப் பிரதானம்பண்ணி வானரப்படைகளால் சமுத்திரத்தில் அணையைக் கட்டி சமுத்திரத்தைக்கடந்து வானரங்களுடன் இலங்கையை யடைந்து அங்குள்ள பட்டணங்கள், கோபுரங்கள், பிராகாரங்கள், வாவிகள், தடாகங்கள், ரதங்களை இடித்தும் யானை, குதிரை, காலாள்கள் முதலான சதுரங்கசேனைகளை எல்லாம் வாளாலும், கத்தியினாலும், வெட்டியும், பாணங்களைப் பிரயோகித்தும் நாசம்பண்ணினார். உடனே ராவணனானவன் அநேகங்கோடி ராக்ஷஸர்களைச் சேர்த்துக் கொண்டு மரங்களாலும்-பாறைகளாலும்-சண்டைசெய்யும்வானரங்கள் பேரிலும், ராமலக்ஷ்மணாள் பேரிலும் பாணப்பிரயோகஞ்செய்து சண்டைசெய்தான், கும்பகர்ணன், அதிகாயன், மகாமாலி, சம்புமாலி, அகம்பனன், விருபாக்ஷன், யூபாக்ஷன், பாஸ்கர்ணன்முதலான ராக்ஷஸர்கள் நொடிப்பொழுதில் ஸ்ரீராமரால் நாசமானதைக் கண்டு தசானனன் கோபங்கொண்டு மூலபலத்தை யேவினான் ராமர் மோகனாஸ்திரத்தினால் மூலபலம் யாவும் எமலோகம்போகச் செய்தார் பின்பு ராவணனானவன் தன் ரதத்தில் ஏறிக்கொண்டு இராமர்முன்னின்று ராமர் நீதிகளையோ

தியும் கேட்காமல் ராமர்மேல் பாணங்களைப் பிரயோகித்தான் ராமனும் அப்படியே பாணங்களைப் பிரயோகித்தார் இப்படி யொருவரையொருவர் எதிர்த்துச் சண்டைசெய்யும்போது ராமபிரான் அகத்தியரா லுபதேசிக்கப்பெற்ற மகாமந்திரத்தை யுச்சரித்து ரதத்திலேறி அகத்தியரால் கொடுக்கப்பட்ட வில்லில் பிரமாஸ்திரத்தைப் பூட்டிப் பிரயோகஞ்செய்தார். அது அண்டங்கள் யாவும் நடுநடுங்க இராவணனைக்கொன்றுவிட்டு இராமனிடம்வந்து சேர்ந்தது. அனந்தரம் ஹனுமானால் சீதையையடைந்து சீதாபிராட்டியை அக்கினிப்பிரவேசம் செய்வித்து அந்த அம்மனுடன் ரிஷிகளாலும் பிரம்மாதிதேவர்களாலும் துதிக்கப்பட்டு வானர சயின்னியங்களோடு அயோத்தியையடைந்து தாய்மார்களை வணங்கி முடியைச்சூடி தன்னுயிர்போல் மன்னுயிரைக்காத்து ராஜநீதி தவறாமல் ராஜ்ஜியபரிபாலனம் பண்ணிக்கொண்டுவந்தார். அப்பொழுது ஏதோ ஒரு காரணத்தால் சீதையைப் பிரியவிட்டு தன்மனதிலிருக்கும் பாவத்தைப்பிரகாசிப்பிக்க அசுவமேதயாகஞ்செய்ய வாரம்பித்து வால்மீகராச்சிரமத்தை யடைந்துஅ வ்விடத்தில் குசலவர்களைக்கண்டு பரமானந்தங்கொண்டு அயோத்தியை யடைந்து ரிஷிகளோடுசபையில் எழுந்தருளி யிருக்கும்போது குசலவர்களுடைய திவ்விய சங்கீதத்தையும் தன் சரித்திரத்தையும்கேட்டு ஆனந்தங்கொண்டு சீதையுடன் ஸமஸ்தபோகங்களை யடைந்திருக்குங் காலத்தில் தான்வந்த காரணம் முடிந்துவிட்டதென் றாலோசித்துச் சீதையை அக்கினியில் பிரவேசிக்கச்செய்து அப்பட்டணத்திலிருக்கும் சராசரம்முதலான ஜீவராசிகளுக்கு மோக்ஷமளித்து பிதாக்களுடன் ஸரயூநதிதீரத்தை யடைய அவ்விடத்தில் பிரம்மாதிதேவர்களும் சனகாதியோகிகளும் துதிக்க சகல ஸம்பிரமத்துடன் சரயூநதியில் ஸ்நானம்பண்ண உடனே சங்குசக்கிராதி ஆயுதங்களோடுதோன்றி திவ்வியவிமானத்தி லாரோகணித்து தன்னிருப்பிடமாகியவைகுண்டத்திற் கெழுந்தருளினார். கேளும் சௌனகாதிகளே இந்த ராமசரித்திரத்தைக் கேட்டவர்கள் ரோகமில்லாமையும் செல்வமும் பாக்கியமும் ஸுபுத்திரர்களையு மடைந்து பிற்காலத்தில் மோக்ஷமடைவார்கள்.

மூன்றாமம்சத்தில் மூன்றாவது அத்தியாயம்

முற்றிற்று.

# நான்காவது அத்தியாயம்

## சூரியவம்சமும் மருவின் உற்பத்தியும்

கேளும் செளனகரே என்று சூதபுராணிகர் சொன்ன கதையை மருராஜா கல்கிபகவானுக் குரைக்கின்றனர். ராமபிரானுக்குப் பிற்பாடு குசன்பிறந்தான் குசன்குமாரன் அதிதி அதிதியின்குமாரன் நிஷதன் நிஷதன்குமாரன் நபன் நபன்குமாரன் புண்டரீகன் புண்டரீகன்குமாரன் க்ஷேமதன்வா க்ஷேமதன்வாவின் புத்திரன் தேவானீகன் தேவானீகன் குமாரன் ஹீனன் ஹீனன்குமாரன் பாரிபாத்திரன் பாரிபாத்திரன் குமாரன் பலாஹகன் பலாஹகன்குமாரன் அர்கன் அர்கன்குமாரன் சரநாபன் சரநாபன்குமாரன் ககணன் அவன்குமாரன் விதுருதன் அவன்குமாரன் ஹிரண்ணியநாபன் அவன்குமாரன் புஷ்பகன் புஷ்பகன்புத்திரன் உஷன் உஷன்குமாரன் சியந்தனன்சியந்தனன்குமாரன் அக்கினிவர்ணகன் அவன்குமாரன் சீக்கிரகன் சீக்கிரகன்குமாரன் என்னுடையபிதா அவருடைய திருநாமத்தைச் சொல்லக்கூடாது ஆனாலும் கல்கிபகவானே எவனுக்கு சமானபலமுள்ளவன் உலகத்திலகிடையாதோ அவனுடைய நாமமென்றறியவும் அதாவது அதுலவிக்கிரமன் அவருடைய தபோபலத்தினால் நான் பிறந்தேன் என்பெயர் மரு நான் கலாபகிராமத்தையடைந்து தவம்பண்ணிக்கொண்டிருக்குங்காலத்தில் ஸத்தியவதியின் குமாரரான வியாசபகவானாலே உம்முடைய வரவைக்கேட்டு ஸமஸ்த பாபங்களைப்போக்கும் இந்த ஸ்தலத்தில் வசிக்கிறேன் ஓபுண்ணியபுருஷாவென்று மருமஹாராஜ னுரைத்தனன் அனந்தரம் கல்கிபகவான் மருவின் உற்பத்தியைக்கேட்டு ஆச்சரியத்தை யடைந்து மருவைப் பார்த்துச் சொல்கிறார். ஓமருபூபதியே உம்முடைய உற்பத்தியைக்கேட்டேன் நீர் சூரியவம்சத்திலவதரித்தவ ரென்றும் விசேஷமகிமை யுள்ளவரென்று மறிந்தேன் இதோ தேஜோதிதிபோல விளங்குகிறவர் யார் அவருடைய உற்பத்தியெங்கே அவருடைய திருநாமம் என்னவென்றுரைத்த கல்கியின் வாக்கியத்தைக்கேட்ட தேவாபி சொல்லத்துவக்கினர்.

## சந்திரவம்சத்தில் தேவாபியினுத்பத்தி

---

முக்காலத்திலும் முறிபடாத முதற்பொருளே கேளும் பிரளயகாலத்தில் திருப்பாற்கடலில் நீர் பள்ளிகொண் டிருக்கும்போது உம்முடைய நாபிக்கமலத்தில் நின்றும் பிரமன் பிறந்தார் அந்தப்பிரமன் புத்திரர் அத்திரிமஹாரிஷி யவதாரம்பண்ணினர் அவர்புத்திரர் சந்திரன் அவருடையபுத்திரன் புதன் அவருடையபுத்திரன் புரூரவர் புரூரவருடைய புத்திரன் யயாதி யயாதியின்பிள்ளை நகுஷன் நகுஷன்பிள்ளை நாயகன்

இப்படி யிருக்க யயாதியானவர் தேவயானேயைக் கல்யாணம் செய்துக்கொண்டு அவள் வயிற்றில் யதுவும் துர்வசுவும் பிறந்தார்கள். யதுவானவர் விருஷபர்வாவின் பெண்ணுன சர்மிஷ்டையை விவாகம் பண்ணிக்கொண்டு அவளிடத்தில் துருஹியன் - அநு-புரு - என்னும் புத்திரர்களை யுண்டுபண்ணினர். புருவினிடத்தில் ஜயன் பிறந்தான், புருவினிடத்தில் பஞ்சபூதங்களைப்போல் உலகமெல்லாம் பரவும்படியான பிள்ளைகள் பிறந்தார்கள், அதில் முன்சொன்ன ஜயன்புத்தின்பிரசின்வா அவன் புத்திரன் பிரவீரன்-அவன்பிள்ளை மனஸ்யு-அவன்பிள்ளை அபயதன்-அவன்பிள்ளை உருடியன்-அவன்பிள்ளை அருணி - அவன் பிள்ளை புஷ்கராருணி-அவன்பிள்ளை பிருஹத்க்ஷேத்திரன்-அவன்பிள்ளை ஹஸ்தி அந்தஹஸ்தியாலே கண்டுபிடிக்கப்பட்ட படியால் அஸ்தினபுரமென்று பெயர்வந்தது, அந்த அஸ்திராஜன் பிள்ளை அமீடன் - அவன் பிள்ளை ரிக்ஷன்-அவன்பிள்ளை ஸம்வரணன்-அவன்பிள்ளை குரு-குருவின்பிள்ளை பரிக்ஷித்-அவன்பிள்ளை தநு-அவன்புத்திரன் ஜன்ஹு - அவன்புத்திரன் நிஷதன்-அவன்பிள்ளை சுஹோத்திரன்-அவன்பிள்ளை-சுதனு-அவன்பிள்ளை-சியவனன்-அவன்பிள்ளை கிருதி - அவன் புத்திரன் - பிருஹத்ரதன்-அவன்பிள்ளை குசாக்கிரன்-அவன்புத்திரன்-ரிஷபன்-அவன்பிள்ளை ஸத்தியஜித்-அவன்பிள்ளை புஷ்பவான்-அவன் பிள்ளை நாஹுஷ-அவன் பிள்ளை-சராஸந்தன்-அவன்பிள்ளை-சஹதேவன் - அவன்பிள்ளை - ஸோமாபி-அவன் பிள்ளை - சுருதசிரவாஹ-அவன்பிள்ளை - சுரதன் - அவன் பிள்ளை விரூதன்-அவன்பிள்ளை சார்வபௌமன்-அவன் பிள்ளை-ஜயசேனன்-அவன்பிள்ளை-ரதானீகன்-அவன்பிள்ளை-யுதாயு அவன்பிள்ளை கோபனன்-அவன்பிள்ளை-தேவாதிதி - அவன்பிள்ளை - ரிஷன்-அவன்பிள்ளை திலீபகன்-அவன்பிள்ளை - பிரதீபகன் - அவன் பிள்ளையாகிய நானென்றும் என்பெயர் தேவாபி என்றும் அறியக்கடவீர்.

என் இராஜ்ஜியத்தைச் சாந்தனுவின்கையில்லொப்பிவித்து உம்மைக் காணவேணுமென்னுமுள்ளத்தோடு இந்த கலாப கிராமத்தையடைந்து தவம்புரிகிறேன். இந்த தவசிரேஷ்டர்களால் உம்முடைய திருவடிகளை வணங்கும்படியாகிய பெரும்பாக்கியத்தைப் பெற்றேன் என்று உரைத்தார். இப்படி மருவின்உற்பத்தியும் தேவாபியின் உற்பத்தியையும்கேட்ட கல்கிபகவான்பரமாச்சரியத்தையடைந்துமிலேச்சகணங்களை வதைத்து அயோத்தியாபுரிபட்டணத்தை யாளும்படி மருவுக்கு மகுடஞ்சூட்டி புல்கஸஜாதிகளை வதைத்து தேவாபியை அஸ்திஞபுரிக்கரசனுக்கி

மதுராபட்டணத்தை நான் ஆண்டுக்கொண்டு உங்களுடையபயத்தைப் போக்குகிறேன், பிறகு செய்யாகர்ணன் - உஷ்ட்ரமுகன் - ஏககாலன்-விஜேதான் முதலான துஷ்டர்களைக்கொன்று மறுபடியும் கிருதயுகத்தை யுண்டுபண்ணுகிறேன், உம்முடைய தபோவேஷத்தையும் விருதத்தையும்விட்டு மகாபலிஷ்டர்களும், சகல சாஸ்திரங்களையறிந்தவர்களும் எல்லா வில்வித்தைகளையுமறிந்த நீங்களிருவரும் இந்த ரதத்தில் சகல சேனைசன்னியங்களுடன்புறப்பட்டு என்னுடன் சஞ்சரிக்கடவீர்கள், விசாகயூபன் தன்னழகுள்ள கன்னிகையை உமக்கு கன்னியாதானம் பண்ணப்போகிறார். ருசிராசுவனுடைய பெண்ணை ஒதேவாபி நீ விவாகஞ் செய்துக்கொள்ளக்கடவீர் என்று சொன்ன கல்கியின் வாக்கியத்தைக்கேட்ட மருதேவாபிகள் பரமானந்தத்தை யடைந்து கல்கிபகவானை மும்மூர்த்திகளுக்கு மேலான ஸ்ரீமன் நாராயணனென்று நினைத்தார்கள்.

## மருதேவாபிகளுக்கு ரதம்வரும்விதம்.

இப்படி சொல்லிக்கொண்டிருக்கும்போது கோடிசூரியப்பிரகாசம் போல் பிரகாசமுள்ள ரதங்கள் ஆகாயமார்க்கத்தில் நிற்க, விசுவகர்மாவினால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த ரதங்களைக்கண்ட சப்பியாள்-ரிஷிகள்-ராஜாக்கள் முதலானவர்கள் இது என்ன ஆச்சரியமென்றார்கள் அப்பால் கல்கிபகவான் அசுவனிதேவர்களைப்போலவும் சந்திரசூரியர்களைப்போலவும் யமவருணரைப்போலவும் தேவேந்திர குபேரர்களைப்போலிருக்கிற மருதேவாபிகளைப்பார்த்து ஓய் பூபர்களே இச்சக்கிரனால் அனுப்பப்பட்ட ரதங்களில் எனதாக்ஞையா லேறக்கடவீர்கள் என்று பத்மநாபன் சொல்லுமளவில் தேவர்கள் பூமழைபொழிய ஊர்வசிமுதலான அப்ஸரஸ்திரீகளாட கந்தர்வர்கள் கானம்செய்ய அச்சமயத்தில் பொன்வர்ணமுள்ளவராயும் ஜடாதாரியாயும் மரையுரியை யுடையவராயும் ஸர்வசங்க பரித்தியாகம்பண்ணின ஒரு சன்னியாசியைக்கண்டார்.

மூன்றாவது அம்சத்தில் நான்காவது அத்தியாயம்.

முற்றிற்று.

---

## கிருதயுகன் வரவு ஐந்தாவது அத்தியாயம்.

அனந்தரம் கல்கிபகவான் தேஜோநிதியாய் விளங்கும் ஸன்னியாஸியைக்கண்டு தன் சமூகங்களோடு எதிர்சென்று அர்க்கிய பாத்தியம் முதலான உபசாரங்களைச்செய்து தன்டன்ஸமர்பித்தார் பிற்பாடு கல்கி

பகவான் அந்த விருத்த சன்னியாசியைப்பார்த்து சுவாமி தேவரீர்கள் யார் எவ்விடத்திலிருந்து வந்தீர்கள் உங்கள் நாமதேயமென்ன என்னுடைய புண்ணியவசத்தால் எனக்கு பிராப்தமானீர் கேவலம் மனிதர்களாய்ப் பிறந்தவர்கள் உலகங்களைக்காக்க சஞ்சரிக்கிறார்கள் உங்களைக்கண்டால் மனிதராகத்தோன்றவில்லை என்றுரைத்தார். அனந்தரம் அந்த விருத்த சன்னியாசிசொல்லுகிறார். ஓய்கல்கிபகவானே என்பெயர் மஸ்கரி ஓய்ஸ்ரீயப்பதியே நான் கிருதயுகம் உம்முடைய கட்டளையைச் செய்கிறேன் உங்களுடைய அவதாரத்தைக்கேட்டு இவ்விடம் வந்தேன் உபாதியற்றிருக்கிற நீர்காலஸ்வரூபியாய்மாயாரூபமான க்ஷணம்தண்டம் லவம் முதலானதுகளால் மூடப்பட்டுயிருக்கிறீர் உம்முடைய சரீரலக்ஷணம் அகோராத்திரம்-பக்ஷம்-மாஸம்-ருது-அயனம்-ஸம்வத்ஸரம் யுகம் என்று பெயருடையதும் அதில்லாமல் பதினாலு மனுக்கள் என்றும் வழங்கிவருகிறது அவர்களுடைய நாமத்தைச் சொல்லுகிறேன் முதல்சுவாயம்புமனு, இரண்டாவது சுவாரோசிஷமனு, மூன்றாவது உத்தமமனு நான்காவது தாமஸமனு, ஐந்தாவது ரைவதமனு, ஆறாவது சாக்ஷுஷமனு, ஏழாவது வைவஸ்வதமனு, எட்டாவது சாவர்ணிமனு, ஒன்பதாவது தக்ஷஸாவர்ணிமனு, பத்தாவது பிரம்மசாவர்ணிமனு, பதினோராவது தர்மசாவர்ணிமனு, பனிரண்டாவது ருத்திரசாவர்ணிமனு, பதிமூன்றாவது வேதசாவர்ணிமனு, பதிநான்காவது இந்திரசாவர்ணி மனு, என்ற மனுவந்தரங்களெல்லாம் உங்களுடைய விளையாட்டாயிருக்கிறது இதுகளெல்லாம் நாமங்களாலும் ரூபங்களாலும் பேதத்தையடைந்து யிருக்கின்றன இப்படி பதினான்கு மன்வந்தரங்களும் பன்னிரண்டாயிரம்தரம் திரும்பினால் தேவர்களுக்கு ஒருயுகம், அப்படி தேவயுகம் ஆயிரம் தரம் திரும்பினால் பிரமனுக்கொருநாள். இப்படி பிரமனுக்கு நூறுவருஷம் ஆனால் பிரம்ம பிரளயம் என்றறியவும், தேவமனுவந்தரங்களால் எழுபத்தி ஒருதரம் திரும்பினால் ஒரு மனுவினுடைய ஆயுளென்றும் இப்படி பதினான்கு மன்வந்தரம் கழிந்தால் பிரமனுக்கொருநாள் இது தேவமானம் மனிதர்கள் காலப்பிரமாணத்தால் பிரமன் ஆயுளைச்சொல்லுகிறேன் இந்த நான்கு யுகங்களும் ஆயிரந்தரம் திரும்பினால் பிரமனுக்கொரு பகல் இரண்டாவர்த்தி திரும்பினால் ஒருநாள் என்று அறியவும் அப்படி நூருவருஷம் முடிந்தவுடன் பிரம்மன் முதலானோர் அழிந்து விடுகிறார்கள் அப்பால் நீர்யோக நித்திரையையடைந்து யிருக்கும்போது உம்முடைய நாபிக்கமலத்திலிருந்து மறுபடியும் பிரமனுண்டாவார் உடனே கிருதயுகாதிகளையும் சிருஷ்டிபண்ணுவார் ஓகல்கிபகவானே என்று மஸ்கரியினால் சொல்லப்பட்ட வாக்கியத்

தைக்கேட்ட கல்கிபகவான் பரமானந்தபரிதராய் கிருதயுகம் ஆரம்பித்து விட்டது கலியுகத்தை முடிக்கவேண்டும் என்றுதிருஉள்ளம்பற்றி அனேகரதகஜதுரக முதலான சதுரங்க தளத்தோடு திக்விஜயம் பண்ணவாரம்பித்தார்.

## கல்கி திக்விஜயம்.

இப்படி மருவும் தேவாபியும் கல்கியின் வாக்கியத்தைக்கேட்டு வேதவிதிப்படி முன் குறித்த பெண்களைக் கல்யாணம் செய்துகொண்டு கவசம் அங்குலித்திராணம் அஸ்திரம் சஸ்திரம் வில் முதலிய அனேக ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு ஆறு அக்ஷௌஹிணி சேனையை யடைந்து யானைப்படை குதிரைப்படைகளையும் சேர்த்துக்கொண்டு கண கணவென்று சப்திக்கும் ரதங்களில் ஏறிக்கொண்டு யுத்தசன்னத்தராய் புறப்பட்டுப்போகிறபோது தூளிகள் கிளம்பி ஆகாயமெல்லாம் வியாபித்து மண்ணின் தெரியாமல் மறைக்க கதிரோனொளி மழுங்கி பிரகாசமில்லாமல் இருள்மூட இதர ஜனங்கள் இதென்ன ஊழிகாலம் வந்துவிட்டதோவென்று பிரமித்து நிற்க இத்தருணத்தில் கல்கிபகவான் சிவந்த நிறமுள்ள அன்பதினாயிரம் குதிரைகளும் பதினாயிரம் யானைகளும் பத்தக்ஷௌஹிணி சேனைகளுடன் புறப்படவும் அவர் பிராதாக்கள் புத்திரமித்திராள் முதலானவர்களுடன் திக்விஜயம் செய்யக்கருதி இருக்குங்காலத்தில் தர்மமானது பிராமண உருக்கொண்டு கல்கியின் பின்தொடர நரநாராயணுள் தன் பரிஜனங்களான சத்தியம் அனுக்கிரஹம் அபயம் ஸுகம் சந்தோஷம் யோகம் அர்தம் ஸ்மரணம் க்ஷேமம்ரக்ஷணம் முதலானதுகளுடனும் தன்ஸ்திரீஜனங்களான மைத்திரி சிரத்தை தயை சாந்தி துஷ்டி புஷ்டி கிரியா வணக்கம் புத்தி மேதா லஜ்ஜாமுதலான ஸ்திரீஜனங்களுடனும் புறப்பட்டு கல்கிபகவானுக்கு பின்தொடர்ந்து தன் பரிவாரங்களும் தானும் கல்கியின் சமீபத்தில் தான் வந்த காரியத்தையும் தன் பரிவாரங்களுக்கு யிருப்பிடமில்லாமலிருப்பதையுமறிவிக்க கல்கி வணக்கத்துடன் சொல்லுகிறார். நீர்யார் எவ்விடத்திலிருந்து இவ்விடத்திற்கு புத்திராளுடனும் பெண்களுடனும் வந்தீர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் கண்டால் ரொம்பதீனர்களாகத் தோற்றுகிறது உங்களைக்கண்டால் சாதுக்களான வைஷ்ணவர் பாஷண்டிகளால் மறைக்கப்பட்டவர்கள்போல் காண்கிறது உண்மையையறிவியுங்கள் என்று சொன்ன கல்கியின் வாக்கியத்தைக்கேட்டு தர்மமானது பகவானைக்கண்டு ஒரு வாக்கியம் சொல்லுகிறது வாரீர் கல்கிபகவானே என்று வணங்கி துதித்து சொல்லுகிறது, என்னை தர்மதேவதை என்று சொல்லுவார்கள் நான் உங்கள் ஹ்ருதயஸ்தலத்திலிருந்து உண்டாய் காம

ஸ்த ஜனங்களுக்கும் இஷ்டத்தைக் கொடுக்கிறேன் நான் பலிஷ்டனான கலியினால் தோர்வையடைந்து என் காலகதியை நினைத்துக்கொண்டு துக்கத்தையடைந்து உம்மை சரணமடைந்தேன் என்று உரைத்தது அப்பால் தர்மத்தின் வாக்கியத்தைக்கேட்டு கல்கிபகவான் விசனமடைந்து தர்மமே விசனப்படவேண்டாம் நான் உனக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணும் அவைஷ்ணவர்களையும், உன் பிள்ளைகளையும் பெண்களையும் தலை யெடுக்காமல் பண்ணுகிற கலியையும் நாசம் செய்கிறேன். கிருதயுகத்தைப்பாரும் சூரியவம்சத்தில் மருவென்று பெயரையடைந்து பிரக்கிருக்கிறார் நான் கலியை நாசம்பண்ணி உம்மை உலகமெங்கும் பரவும்படி செய்கிறேன் என்று அபயபிரதானம் பண்ணினார் அனந்தரம் தர்மமானது தன் பரிவாரங்களோடு புறப்பட்டு சித்தாச்சிரமத்தை யடைந்து தன்பத்னிகளை அங்குவசிக்கச்செய்து தன் சயிநியங்களை அழைத்துக்கொண்டு கல்கியுடன்வந்து சேர்ந்தது. உடனே கல்கிபகவான் தன்னுடைய ஆயுதங்களோடு புறப்பட்டு அதர்மரூபியாகிய கலியை செயிக்கப்புரபட்டார் இப்படி கல்கியின் வரவைக்கேட்ட கலியானது கோபம்கொண்டு தன்சேனாசமூகங்களான பசுஹிம்ஸகன் தூர்கந்தன் சுவானமாம்ஸபோஜி சூதன் குடியன் கலகன் சோரன் சுவாமித்திரோகி மாதுருகாமிநாஸ்திகன் கபடன் தம்பன் மதன் மாஸ்தரியன் கோபன் காமன் குரோதன் லோபன் பொய்யன் கிருதக்னன் முதலான புத்திரானுடனும் தன் புத்திரிகளான நிர்லஜ்ஜா துர்புத்தி நிர்தயா துராசாராசக்ஷூத் திருஷ்ணா முதலான ஸ்திரி பிரஜைகளும் தன் பிரிய நாயகியான துராசையினிடத்தில் உண்டாயிருக்கும் ஸ்திரீகளுடனும் புறப்பட்டான் இப்படி சகல வைபவங்களுடன் ரணபேரி யடித்துக்கொண்டு என்னுடையராஜ்யத்தில் நான்ஏகச்சக்கிராதிபத்தியம் பண்ணும்போது எவன் கால்வைத்தானோ அவனை ஹதம்பண்ணுகிறேனென்று வீராவாதங்களைப் பண்ணினான்.

மூன்றாவது அம்சத்தில் ஐந்தாவது அத்தியாயம்.

முற்றிற்று.

---

## ஆறாவது அத்தியாயம்

### கலியுடன் கல்கியுத்தம்.

அனந்தரம் கலியானவன் யுத்த சன்னத்தனாய் புறப்பட்ட சமாசரத்தைக் கேட்ட கல்கிபகவான் தன் முன்னின்ற தர்மத்தைப்பார்த்

னுச் சொல்லுகிறார் ஓய் தர்மமே நீர் உம்முடைய சைன்னியங்களோடு பின்னிடையாமல் கலியின் சேனையை நாசம்பண்ணும் என்று உத்திரவு பண்ணினார். உடனே தர்மமானது அதர்மரூபியான கலியுடனும் புண்ணியமானது பாபத்தையும் சாந்தம் குரோதத்தோடும் தயை நிர்தயையோடும் விரக்தி காமத்துடனும் அர்தம் தரித்திரத்தோடும் நிராசை பேராசையோடும் மங்களம் அமங்களத்தோடும் ஆரோக்கியம் ரோகத்தோடும் க்ஞானம் அஞ்ஞானத்தோடும் சுபிக்ஷம் க்ஷாமத்தோடும் பிரஸாதம் லோபத்தோடும் ஸந்தோஷம் துக்கத்தோடும் ஒன்றுக்கொன்று கைகலந்து அகோரமானயுத்தம் செய்யும்போது மருவானவன் கசன் காம்போஜன்முதலான துஷ்டஅரசர்களோடும் தேவாபியானவன் சௌரன் பாபரனுடனும் விசாகயூபனானவன் புளிந்தன் சுவபசன் முதலானவர்களுடனும் கல்கியானவர் கோகன் விகோகன் முதலான பிரம்மாவின் வரத்தால் மதித்த ராஜாக்களோடும் அகோரயுத்தம் செய்துக்கொண்டு வரும்போது தேவர்கள் கண்டு ஆச்சரியங்களோடு ஆகாசமார்க்கத்திலிருந்துகொண்டு சொல்லுகிறார்கள். ஓ ஓ இந்தகோகவிகோகாள் இருவரும் ஒரு ரூபமுள்ளவர்கள் மதித்தவர்கள் பிராதாக்கள் யுத்தத்தில் தேர்ந்தவர்கள் உலகங்களெல்லாம் செயித்தவர்கள்நம்மராஜனை இந்திரன் ஒன்பதுதரம் தோர்வையடைந்தார் இப்பேர்ப்பட்ட பலமுள்ளவர்களை கல்கிபகவான் எப்படி ஜெயிக்கப்போகிறார் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள் இப்படி சொல்லுங்காலத்தில் கத்தி கேடயம் சூலம் பாசம் தோமரம் பிந்தி பாலம் முசலம் சக்தி முதலான ஆயுதங்களாலும் ஐந்திராஸ்திரம், மானவாஸ்திரம், கௌபேராஸ்திரம், முதலான அஸ்திரங்களால், சண்டையில் சூரர்களெல்லாம் கால்வேறு கைவேறு உடல்வேறு தலைவேராக அறுந்துவிழுந்தார்கள்.

## மூன்றாவது அம்சத்தில் ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## ஏழாவது அத்தியாயம்.

## கோகவிகோக யுத்தவர்ணனம்.

சூதர் சொல்லுகிறார் ஓ சௌனகாதிரிஷிகளே இப்படிநிர்க்குணமாய் நாமத்தை யடைந்ததெல்லாம் பகவானுடைய ஸங்கல்பத்தால் ஸகுணமானரூபத்தையடைந்து ஒன்றுக்கொன்று யுத்தம்பண்ணும்போது தர்மமானது அதிகோபத்தையடைந்து கிருதயுகனோடு சேர்ந்து அதர்ம

மான கலியுடன்யுத்தம்பண்ணும்போது கலியானவன் கழுதைகள் பூட்டிய தன்ரதத்தைவிட்டுக் கீழேகுதித்து பாகுயுத்தம்பண்ணியும் ஜெயமடையாமல்தன்னிருப்பிடமான தூர்க்கந்த பட்டணத்தை யடைந்தான் பிறகு தம்பன்தன் சம்போகத்தைவிட்டு ஸ்திரீசமூகங்களோடுசாந்தனையும்தாந்தனையும் எதிர்த்து யுத்தம்பண்ணினான். கல்கியானவர் தன்பாணவர்ஷங்களால் காம்போஜன் மிலேச்சன் முதலான துஷ்ட ராஜாக்களை யுத்தம்பண்ணிநாசமடையச்செய்தார். விசாகயூபனானவன்புலிந்தனைநாசம்பண்ணினான், இப்படி ஒருவரையொருவர் எதிர்த்து யுத்தம்பண்ணும் போதுகலியானவன் கதாபாணிகளான கோகவிகோகனோடுசேர்ந்துகதாயுதங்களாலும் முசலாயுதங்களாலும் சாடிதர்மனையும்கிருதனையும்,யமன் நியமன் முதலான சாத்துவீகர்களோடு சண்டைபண்ணும்போதுதேவர்கள் தங்கள் தங்கள் குடும்பங்களோடு ஜயாபஜயத்தைப் பாற்க வானத்தில் நிறைந்தார்கள்.

## கோகவிகோகவதம்.

அப்பால் கல்கிபகவான் கோபாவேசத்தையடைந்துகதாபாணியாய் இந்த மகா பாபிகளை நாசம்பண்ணாமல் என் கதையைக்கீழேவைப்பதில்லையென்று பிரதிக்கினை பண்ணி கோகவிகோகனுக்கெதிரில்வந்து அடா பாபிகளே இனி நீங்கள் இவ்விடத்திலிருக்கவொண்ணாதென்று சொல்லி கதாயுதத்தால் கோகன்தலையி லடித்துக்கொன்றார். இறந்தகோகனை விகோகன்நோக்க உடனே உயிருற்று எழுந்து அவ்விருவரும் சேர்ந்து மகாபலத்துடன் காமரூபத்தையடைந்து காலமிருத்யுவைப்போல் கல்கியுடன் மிகுந்தயுத்தஞ்செய்தார்கள். திரும்பவும் கல்கிகதையால் சிரசிலடித்துக்கொன்றார். மறுபடியும் ஒருவரையொருவர் பார்த்தவுடன் உயிர் பெருவதைக்கண்டு கல்கிபகவான் சிந்தாக்கிராந்தரா யிருந்தார். அப்போது கல்கியின் குதிரையானது யமனைப்போல் ஒப்பற்ற பலத்தையுடைய அக்கோக விகோகர்களின் மார்பில் உதைத்தது. அந்த உதையினால் மார்பெலும்பு புஜங்கள் முரிபட்டு அக்குதிரையின்வாலை சிறுபிள்ளைகள் கன்றின்வாலை பிடித்திழுப்பதுபோல யிழுத்தார்கள். அப்போது அத்துரகமானது மிகுந்தகோபத்துடன் அவர்களின் மார்பில் கடினமாக உதைத்து அவ்வுதையினால் வாலை விட்டுவிட்டு அக்கோக விகோகர்கள் அப்பூமியில்விழுந்து மூர்ச்சையடைந்து உடனே கல்கியைநோக்கி வீரவாதஞ் செய்தார்கள்.

அப்போது அந்த பகவான் சிந்தாக்கிராந்தராய் நின்று இருப்பதை கண்டு பிரும்மாவானவர் பகவானுக்கெதிரில் வந்து வணங்கி சுவாமி பரமபுருஷா என் இப்படி சிந்திக்கிறீர் இந்த பாபிகளை தனித்தனியாய்க்

கொன்ருல் சாகபாட்டார்கள் ஒரேகாலத்தில் கொல்லக்கடவீர் என்று சொல்லிமறைந்தார். அவ்வாக்கியத்தைக்கேட்டுகல்கிபகவான் தன்னுடைய குதிரை ஆயுதங்கள் யாவற்றையும் விட்டுவிட்டு வஜ்ஜிராயுதத்துக்கொப்பான தன்முஷ்டிகளால் அவர்களின் சிரஸில்குத்தினுர் அக்குத்தினுல் தேவர்களுக்குசத்துருவான அக்கோகவிகோகர்கள்சிகரமழிந்தமலைபோல்பூமியில் விழுந்திறந்தார்கள் இதைக்கண்டு ஆகாயத்தில்தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள் கந்தர்வர் அப்ஸரஸ்திரீகள் நடனஞ்செய்தார்கள் முனிகள் சித்தர்சாரணர் துதிசெய்தார்கள் துந்துபிமுழங்கிற்று திக்குகள் தெளிந்தது பிறகு அவர்களுடைய வதத்தினுல் சந்தோஷமடைந்த கல்கிபகவான் தன் சேனைகளோடு ராக்ஷஸசைன்னியங்களில் பதினுயிரம் குதிரைகளையும் இருபதாயிரம் காலாட்களையும் பதினுயிரம் யானைகளையும் முறியயடித்து ஜயபேரிகையடித்தார், சுமந்திரனெனவன் கணக்கில்லாச்சேனைகளையும் கார்கன்-பர்கன்-விசாலஞ்முதலான சேனுபதிகள் கணக்கில்லாதசேனைகளையும் குதிரைகளையும் எண்ணிக்கையில்லாத யானைகளையும் நாசம்பண்ணினுர், இப்படி கோகவிகோகன்முதலான ராக்ஷஸர்களை நாசம்பண்ணி ஜயபேரி யடித்துக்கொண்டு சகல சைன்னியங்களோடு பல்லாடநகரத்தைக்குறித்து கல்கிசைன்யங்கள் புறப்பட்டதுகள். ஓய் சௌனகாதிகளே யென்று சொன்னுர்.

## மூன்ருவது அம்சத்தில் ஏழாவது அத்தியாயம் முற்றிற்று

---

## பல்லாடநகரத்தில்

## சசித்துவஜ னுக்கும் கல்கிசைன்னியத்துக்கும் யுத்தம்.

சூதபுராணிகர் சொல்லுகிருர் ஜகத்பிரபுவாய் நாராயண ரம்சரான கல்கிபகவான் குதிரையின்மீதேறி கத்தியை கையிற்றரித்து அநேக சேனைகள் புடைசூழ பல்லாடநகரத்தை யடைந்தார் மிகுந்த தேஜஸ்ஸையும் பதினுயிரயானை பலத்தையும் உயர்ந்த சரீரத்தையும் மனதில் கிருஷ்ணத்யானமுமுள்ள அப்பல்லாடராஜன் அக்கல்கியை ஜெகத்பதியான ஸ்ரீமந்நாராயணரென்றறிந்து சந்தோஷத்தால் புளகாங்கிதனுய் தன்னுடைய சைன்னியங்களோடுகூடி யுத்தசன்னத்தனுனன். அப்போது விஷ்ணுபக்தியுடையவளும் ஸுசாந்தையென்னும்பெயருடைய அச்சசித்துவஜன் பாரியை கல்கியுடன் யுத்தஞ்செய்யப்போகிற தன்புருஷனை நோக்கிச் சொல்லுகிருள் ஓ பிராணநாதா இவ்வுலகத்துக்கு

நாதனும் எல்லா ஜீவன்களுக்கும் அந்தர்யாமியும், நாராயணனுமான கல்கிபகவானை நீர் எப்படி அடிக்கப்போகிறீர் என்றுசொன்ன பத்தினியைப்பார்த்து சசித்துவஜன் சொல்லுகிறான். ஓ ஸுசாந்தே அரசர்களுக்கு யுத்தத்தில் குருவானாலும்சிஷனானாலும் எவரானாலும்எதிர்த்து யுத்தஞ்செய்வது உத்தமமென்று பிரமன் கூறியிருக்கிறார் யுத்தத்தில்ஜெயமடைந்தால் ராஜபோகமும் மரித்தால் சுவர்க்கபோகமும் வருவதால் க்ஷத்திரியர்களுக்கு ஜயாபஜய மிரண்டும் சுகத்தையேதருகின்றது. இவ்விதமுரைத்த ராஜனைப்பார்த்து ஸுசாந்தைசொல்லுகிறாள். விஷயாபிலாஷையுடைய காமிகளும், பயித்தியங்கொண்டவர்களும், தேவத்தன்மையும் ராஜ்யமும் அடைவோமென்றெண்ணுவார்கள். விஷ்ணுபக்தர்கள் அவ்வண்ணம் நினைக்கார்கள். நீயோ ஹரிஸேவகன் அவரோ ஜகதிசன் நீ ஆசையற்றவன் அவர் சதாகொடுக்கிறவர் உங்களிருவருக்கும் யுத்தம் அஞ்ஞானத்தால் எப்படி உண்டாகும் சசித்துவஜன் சொல்லுகிறான். த்வந்துவாதீதரான யீஸ்வரரிடத்தில் த்வந்துவம் காணுமாகில் அவரது சேவகரிடத்திலும் அவ்வாறே காணும் அவரிட மாயையாலிவ்வுலகம் ஜனிப்பது மழிவதுமாகும் ஆகையா லிப்போது நான் எனது சேனாசமூகங்களுடன் கல்கிபகவானுடன் யுத்தஞ்செய்யப்போகிறேன். ஓ நாயகியே நீ யந்த லக்ஷ்மீபதியை பூஜிப்பாயாக என்று சொல்லிய பர்த்தாவின் வாக்கியத்தைக்கேட்டு ஸுசாந்தை மிகுந்த சந்தோஷத்துடன் ஓசுவாமி இகத்திலும் பரத்திலும் அந்த ஸ்ரீமந்நாராயணனே எனக்கு ரக்ஷகன் என்று ஸ்துதித்து தன்னைவணங்கும் நாயகியை சசித்துவஜன் சந்தோஷத்துடன் ஆலிங்கனஞ்செய்து தன்னுடைய பெருஞ்சேனையோடு கல்கி சேனையுடன் எதிர்த்து யுத்தஞ்செய்ய ஆரம்பித்தான்.

அப்போது சசித்துவஜன் புத்திரனை சூர்யகேது மருயூபனோடும் அவன் சகோதரனை பிரகத்கேது தேவாபியோடும் சசித்துவஜன் விசாகயூபனோடும் அனேகஅஸ்திரங்களால் யுத்தஞ்செய்தார்கள். அப்போது அவ்விருசேனாவீரர்களால் விடப்பட்ட சூலம் - பாசம் - கதை சக்த்தி தடி-தோமரம்-பல்லம்-கட்கம்-குந்தம்- துவஜம் இவைகளாலுண்டாகிய தூளியானது ஆகாசத்தை மறைத்துவிட்டது. அப்போதுஇவ்வற்புதமான யுத்தத்தைப்பார்க்க ஆகாசவீதியில் வந்திருந்த கந்தருவர், கின்னரர், அப்ஸரஸ்திரீகள், தேவர்கள், யாவரும் வீரர்களின் சிம்மநாதத்தினாலும் குதிரைகளின் கனைப்புகளினாலும் யானைகளின் கெர்ஜ்ஜனைகளினாலும் செவிடுபட்டார்கள்.

பிறகு ரதக்காரர் ரதக்காரர்களோடும் குதிரைக்காரர் குதிரைக்காரர்களோடும், யானைக்காரர் யானைக்காரர்களோடும், காலாள்கள்

காலாள்களோடும், தேவதானவர்களைப்போல் எதிர்த்து யுத்தஞ்செய் யும்போது அவ்விரு சேனைகளிலிருந்து அருக்கப்பட்ட கைகளும், கால்களும் சிரங்களும் பூமியில் விழுந்ததுகள் பேய்க்கூட்டங்களுக்கு திருப்திசெய்விக்க ரக்த ஆறுகள் ஓடியதுகள். இவ்விதமாக யுத்தம் நடக்கும்போது மகாபலவானும் காலனுக்குஒப்பானவனை சூர்யகேது மருவை கணக்கில்லாத பாணங்களாலடித்தான். மரு பத்து பாணங்களி ஞல் சூர்யகேதுவை அடித்தான். அதனுல் சூர்யகேது மிகுந்த கோபங் கொண்டு அவனுடைய குதிரையுடன் ரதத்தை பொடியாக்கிவிட்டான். மரு மற்றொரு தேரிலேரி அவனிட மார்பிலடித்தான். பிறகு சூர்யகேது மருவை கெதையாலடித்து மூர்ச்சை யடையச்செய்தான். அப்போது தர்ம்ம மரிந்த சாரதி மருவை ரதத்துடன் பக்கத்தில் கொண்டுபோன ன். பிரஹத்கேதுவும் தேவாபியை அனேகமான பாணங்களால் சூர்ய னை பனிமூடுவதுபோல மூடிவிட்டான். பிரகு தேவாபியும் கூர்மையான பாணவர்ஷங்களால் அந்த பாணங்களைப்போக்கி பிரகத்கேதுவின் மார் பில் சூலத்தை யெறிந்தான். பிரகத்கேது அச்சூலத்தை தீக்ஷணமான பாணங்களால் முறித்து தேவாபியினுடைய கைவில்லையும் ஒடித்தான். பிறகு தேவாபி கூர்மையான பாணங்களால் பிறகத்கேதுவின் திவ்யதனு சை முறித்தான். பிறகு வில்லருபட்ட சூரனைபிரகத்கேதுகையிற் கற் றிகொண்டு தேவாபியின் சாரதியை குதிரையுடன்கூட வெட்டினன். தேவாபி உடனே பூமியிற்குதித்து வில்லை கீழேபோட்டு அந்த பிரகத் கேதுவை கைகளாலிழுத்து தரையிற்றள்ளி தயையில்லாமல்பிசிந்தான் அப்போது சத்துருவால் பீடிக்கப்பட்டு மூர்ச்சையடைந்திருக்கிற தம் பியைப் பார்த்து சூரியகேது வஜ்ராயுதத்துக்கொப்பான முஷ்டியினல் தேவாபியைசிரஸிலிடித்து மூர்ச்சை யடைவித்து அவனுடைய் சைன் னியங்களை முறியஅடித்தான். அப்போது சசித்துவஜன் சர்வஜகத்து க்கும் ஆதாரனும் சூரியனைப்போல் பிரகாசிப்பவனும் தாமரைபோன்ற திருக்கண்களும் பீதாம்பரதாரியும் விசாகயூபனல் சூழப்பட்டு தர்மனு லும் கிருதனுலும் பூஜிக்கப்பட்டு எதிரில் நிற்கிற கல்கிபகவானைக் கண் டரின்.

மூன்ருவது அம்சத்தில் எட்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

---

## ஒன்பதாவது அத்தியாயம்

### சசித்துவஜனுக்கும் கல்கிபகவானுக்கும் யுத்தம்.

சூதபுராணிகர் சொல்லுகிறார் கேளும் ரிஷிகளே அந்த கல்கிபகவானாகிய நாராயணன் சேனாசமூகங்களோடு பல்லாடநகரத்தை யடைந்து ரணபேரியடிக்க அச்சத்தத்தைக்கேட்ட சசித்துவஜனென்பவன் எல்லாஜனங்களுடன் கூடிக்கொண்டு கல்கியை எதிர்த்தான், உடனேசசித்துவஜனென்பவன்ஜகத்திலுள்ள சராசரங்களை உண்டுபண்ணி பிரமனென்றுபெயரையடைந்தும் ரக்ஷணம்பண்ணி திருமாலென்று திருநாமத்தை யடைந்தும் சம்மாரம்பண்ணி சங்கரனென்றும் பெயரை யடைந்திருக்கிற ஸ்ரீமந்நாராயணனைக்கண்டு மயிர்க்கூச்ச விட்டு ஓய் பரமபுருஷ - பக்தவத்சல - ஆப்தபந்தோ, மூவருக்கும் முதல்வனே வாரும் வாரும் என்னுடைய ஹிருதயத்தில் பாணங்களைப்போடும் அப்படிக்கு இல்லாவிட்டால்அக்கியானந்தகாரமான என்னுடையஹிருதயத்தில்பிரவேசித்துவிடும் குணமில்லாததாய் ஒன்றாயிருக்கும்போது பிராகாரம்ஏது இச்சையில்லாதவனுக்கு செயம் ஏதுக்கு, எனக்கு சேனைகள் சகாயம் வேண்டாம். என்னுடையயுத்தத்தையும் உன்னுடையயுத்தத்தையும்ஜனங்கள் பார்க்கட்டும், ஓய் பரமபுருஷ நீர் யுத்தத்தில் யாரை யடிக்கப்போகிறீர், உம்மை நீரே யடித்துக்கொள்ளும் என்ற ஆத்துமக்கியானம் பிறந்து இப்படி சொன்ன சசித்துவஜனுடைய வாக்கியத்தைக்கேட்ட கல்கிபகவான் கோபத்தைத் தணித்துக்கொண்டு கோபமுள்ளவர்போல்காட்டி பாணங்களை எடுத்து சசித்துவஜன் மார்பிலடிக்க அதை லக்ஷியம் பண்ணாமல் தன் பாணங்களால் மழைகளால் மூடப்பட்ட பர்வதம்போல் கல்கியை மூடினான். இப்படி ஒருவருக்கொருவர் அதிக கோபத்தோடு யுத்தம்பண்ணும்போது பகவான் பிரம்மாஸ்திரம்போட சசித்துவஜனும் பிரம்மாஸ்திரம்போட பகவான் வாயுவாஸ்திரம்போட சசித்துவஜனும் வாயுவாஸ்திரமும்ஐந்திராஸ்திரத்திற்கு ஐந்திராஸ்திரமும், காருடாஸ்திரத்திற்கு காருடாஸ்திரமும்விட்டு யுத்தம்பண்ணும்போது தேவர்கள் கண்டு நடுங்க யக்ஷர்கள் கண்டு ஓடுங்க யுத்தம்பண்ணியும் கொஞ்சகாலம் பாகுயுத்தம்செய்து கொஞ்சகாலம் கால்களாலும் முஷ்டிகளாலும் யுத்தஞ்செய்து ஒருவருக்கொருவர் கொண்டாட அப்பால் இருவர்களும் வச்சிராயுதத்துக்குச்சமானமான முஷ்டிகளாலும் குத்துகளாலும்அடிக்கும்போது கல்கிபகவான் மூர்ச்சையாய் கீழேவிழுந்து கொஞ்சகாலம் பொறுத்து மூர்ச்சைதெளிந்து எழுந்து சசித்துவசனைக்கண்டு ஓய்பரமபாகவதனாகிய சசித்துவஜா நீர்அடித்த அடியால் எனக்கு ரொம்பவும் சந்தோ

ஷமாச்சுது, ஆனாலும் உம்முடைய விஷயத்தில் எனக்கு கோபமில்லே, எழுந்திருந்து யுத்தத்திற்கு வாருமென்றழைக்கச் சுசித்துவஜன் பகவானைக்கண்டு ஆதிமத்தியாந்த ரஹிதனை ஜகன்னதா உம்மை யடிக்கவும் என்கையால் கிழேவிழுந்து மூர்ச்சையடையவும் நான் என்னபாபம் பண்ணினேனோவென்று கண்ணீர்வடிய இருகரங்கூப்பி நின்றான். உடனே பகவானைக்கண்ட தருமன் கிருதன் இருவரும் ஓடிவந்து பகவான் கைகளைப் பிடித்துக்கொண்டு தன்னிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள். அவ்விடத்தில் அனேக விஷ்ணு பக்திமதிகளுடைய நடுவில் சந்திரன் போல் விளங்கும் சுசாந்தையானவள் பகவந்நாமஸ்மரணம் பண்ணிக் கொண்டு நின்றாள். அனந்தரம் சுசாந்தையானவள் பகவானுடைய ஜன் மத்தையும் பத்மாவதியின் விவாஹமஹோத்ஸவத்தையும் கர்காசாரியரிடத்தில் வித்தியாப்பியாஸம் பண்ணினதும் மிலேச்சபாஷண்டிகளோடு சண்டைபண்ணினதும் கேட்டு சந்தோஷத்தையடைந்து தர்மன்-கிருதன் முதலான பகவத்பரிஜனங்களை யுக்தப்படி பூஜித்து பகவானுடைய திவ்விய திருமேனியை வர்ணிக்கத்தொடங்கினாள்.

## மூன்றுவது அம்சத்தில் ஒன்பதாவது அத்தியாயம்.

## முற்றிற்று.

---

# பத்தாவது அத்தியாயம்

## சுசாந்தாகீதம்.

ஓய் தேவர்கட்கிறைவனே எல்லா சராசரங்களுக்கு மாதாபூதமான உன் திருவடியை எனக்கெதிரில் காண்பிக்கக்கடவீர் உம்முடைய திருவடி ஸேவையால் என்பாபங்களைப் போக்கடிக்கக்கடவீர் ஜகத்தினுடைய க்ஷேமங்களுக் கிருப்பிடமாயும் ஸாதுக்களுடைய ஹிருதய கமலத்தில் ஸதா விளங்கிக்கொண்டும் யோகிகளுக்கெட்டாத பெரும் பதத்தைக் கொடுக்க வல்லதாயுமிருக்கிற உம்முடைய திருவடியை என் கண் முன்னே காண்பிக்கக்கடவீர். தாபத்திரயத்தி லடிபட்ட சேதனர்களுடைய தாபத்தைப்போக்க வல்லதாயும் தன் மந்தஹாஸத்தினால் உலகமெல்லாம் பிரகாசிக்கப்பண்ண வல்லதாயு மிருக்கிற உம்முடைய திருமுக மண்டலத்தைக் காண்பிக்கக்கடவீர். கதிரோனைக் கண்ட தாமரைபோலவும் கடாக்ஷத்தினால் ஜகத்திரக்ஷணம்பண்ண வல்லதுகளாயுமிருக்கிற உம்முடைய திருக்கண்களைக் காண்பிக்கக்கடவீர் ஓய் ரக்ஷகா என்னுடைய பர்த்தா அக்ஞானத்தால் உம்முடைய குணங்

களையறியாமல் உம்முடன் யுத்தத்துக்கு வந்தார் ஆதலால் அவரை ரக்ஷித்துக்காற்கவேணும் மஹாதஹங்காரங்களால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த சரீரத்தை உமக்கற்பிதமாய் கொடுக்காவிட்டால் எவ்விதமாய் புனர்ஜனனமில்லாமலிருக்கும். பாஞ்சபூதிகமான சரீரமும் சப்தாதி மாத்திரைகளும் சத்துவாதி முக்குணங்களும் அக்கியானங்களும் நிறைந்த சரீரத்தை நானடைந்து பயனென்ன, என்னிடத்தில் தயைசெய்யும் ஓய் ஜகதீசா, எல்லா பாபத்தைப் போக்கவல்லதாயும் பதினான்கு உலகத்தையும் பரிசுத்தம் பண்ணத்தக்கதான உம்முடைய திருநாமத்தை எவர் சொல்லுகிறாரோ அவர்களுக்கு சம்சார பயமேது, ஓ பக்தவத்ஸலா நீர் இப்போது கல்கியாயவதரித்த காரணம் யாதெனில்கொடியவர்கள் உன்னைச்சேர்ந்தவரா யிருந்தபோதிலும் சம்ஹரிக்கவும் சாதுவானவர் சத்துருவாயிருந்தபோதிலும் ரக்ஷிக்கவும் கிருதயுகத்தை யுண்டு பண்ணவும் தர்மத்தை நாலுபாதத்தால் நடத்தத் திருவுள்ளம் பற்றி இந்த அவதாரம் செய்தீர். ஆபத்பந்தோ என்னுடைய புத்திர மித்திர தௌஹித்திர-பௌத்திர-தன-கனக-வஸ்துவாஹன ரதகஜ துரக பதாதிகளெல்லாவற்றிலும் ஆசையை நீக்கி உன் திருவடிகளில் ஆசையை உண்டுபண்ணவேண்டுமென்று ஸ்துதிசெய்தாள்.

பிற்பாடு சுசாந்தையின் கீதத்தைக்கேட்டு கல்கிபகவான் ஆனந்த பாஷ்பம் பெருகச்சொல்லுகிறார். ஓசுசாந்தே உன்னுடைய ஸ்தவமானது என்மனதை யுருகப்பண்ணிற்று. நான் யுத்தஞ்செய்ய வரவில்லை உன்னுடைய ஸ்தவத்தைக்கேட்க நான்வந்தேன், என்றுரைத்து சுசாந்தையை பின்னிட்டுக்கொண்டும், கிருதன் தர்மன் சசித்துவஜன் இவர்களை இருபுரங்களிலும் வைத்துக்கொண்டு ஒரு வாக்கியம் சொல்லுகிறார் ஓ சுசாந்தே நீ யார் என்ன காரணமாய் இங்குவந்து என்னைத் துதிசெய்கிறாய் சூரனை சசித்துவஜனைவன் என்பின் ஏன் வந்தான் ஓய் தர்மமே ஓய் கிருதயுகமே நாம் எல்லோரும் என் சத்துருவின் வீட்டில் பிரவேசிக்கவேண்டும் சத்துருவின் பத்தினியானவள் என்னை ஏன் ஸ்தோத்திரம் செய்கிறாள். நான் யுத்த பூமியில் மூர்ச்சையாய் கிடக்கும்போது சசித்துவஜன் என்னைக்கொல்ல ஏன் எத்தனப்படவில்லை என்று உரைத்தார். இப்படிக்குரைத்த பகவத்வாக்கியத்தைக் கேட்டு சுசாந்தையானவள் சொல்லலுற்றாள். முராரிபோ பாதாளத்திலும் பூமியிலும் சுவர்க்கத்திலும் பிரம்மலோகத்திலும் பகவானுகிய உன்னை பஜனைபண்ணுதவர் ஒருவருமில்லை.

உலகங்களிலுள்ளசராசரங்களெல்லாம் உம்முடைய ஸேவகர்கள் ஆதலால் உம்முடன் யுத்தம்பண்ண யார் துணிவார்கள். யுத்தம்பண்ணி

னாலும் அவ்வயனான உன்னை யார்கொல்வார்கள் உன்னை காயத்தினாலும் வாக்கினாலும் மனத்தினாலும் சரணமடைந்தவற்கு மோக்ஷமேதவிர மற்றவர்களுக்குக்கிடையாது. என்று சுருதிஸ்மிருதியும் சொல்லுகிறது ஶ்லோ ॥ காயேந வாசா மநஸேந்த்ரியைர்வா புத்த்யாத்மநா வா ப்ரக்ருதிஸ்வபாவாத் । கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்பயாமி ॥ என்கிறபடியால் உன்னைச்சரணமடைந்தேன், சுவாமி உமக்குத் தாசியாய்விடுகிறேன், நீர் எனக்கு பிரபுவாய் விளங்குகிறீர் ஆதலால் கேவலம் அகிஞ்சனனான என்னை ரக்ஷிக்கக்கடவீர். உம்முடைய அனுக்கிரஹத்துக்கு என்னைப் பாத்திரனாக்கவேண்டும் என்று சொன்னாள். அப்பாலந்த தர்மனானவன் பகவானைக்கண்டு சொல்லுகிறான் நான் உம்முடைய நாமஸங்கீர்த்தனத்தால் தன்னியனானேன், பிறகு கிருதன் சொல்லுகிறான், தீனதயாளா உம்முடைய தாஸனான நான் உம்முடைய பக்தனான சசித்துவஜனைக் கண்டமாத்திரத்தில் என் பாபசமூகங்கள் நசித்துவிட்டது என்று உரைத்தான். இப்படி கிருதன் வாக்கியத்தைக்கேட்ட சசித்துவஜன் சொல்லுகிறான், மதுசூதனா நான் உம்முடைய திருவடிகளிற் அபசாரப்பட்டேன், தேவரீர்களுடைய கல்யாணகுணங்களை யறியாமல் நான் ஆயுதபாணியாய் எதிரில்வந்து யுத்தம்பண்ணினேனே என்னை தண்டிக்கக்கடவீர்.

## சசித்துவச கன்னிகையின் விவாஹம்.

அனந்தரம் சசித்துவஜனானவன் தன்புத்திரர்களையழைத்து சுசாந்தையின் அபீஷ்டத்தையுமறிந்து அப்பா குழந்தைகளே நான் அக்கியானத்தினால் பகவானுடைய ஸ்வரூபங்களை யறியாமல் நான் அபசாரப்பட்டேன், அந்த அபசார க்ஷாபணமாய் நம்முடைய பொற்கொடிபோன்ற ரமாவை கல்கிபகவானுக்கு கன்னிகாதானம் செய்யக்கருதியிருக்கிறேன் என்றுசொல்லி மருதேவாபி விசாகயூபராஜன் முதலான ராஜாக்களுடன் தாம்தாமென்று அஷ்டாதசவாத்தியங்களுடனும் ரதகஜதுரகபதாதி ஸம்ராட் முதலான ஜனங்களோடும் வீதி கிபிடீகரிக்கபுறப்பட்டுபல்லாடநகத்தை யடைந்து உத்தம முகூர்த்தத்தில் கல்கிபகவானுக்கு கன்னிகாதானஞ் செய்துக்கொடுத்து வேண்டிய மரியாதைகளையும்செய்தான்.

இந்த மஹோத்ஸவத்தைக் கண்ணுற்றுப்பார்க்க அஷ்டாதச வாத்தியங்களோடு நடவிட காயகாள் முதலான எல்லா ஜனங்களும் வந்து சேர்ந்தார்கள். இப்படியிருக்க பிராமணர்கள் மந்திராக்ஷதைகளோடும், பூர்ணகும்பங்களோடும், ஸ்வஸ்திவாசன வாக்கியங்களோடும்

கோஷித்து கல்கிபகவானை ஆசீர்வதித்தார்கள்க்ஷத்திரியர்கள்- வைசியர்கள்-சூத்திரர்கள்-யாவர்களும்-விசித்திர அல்ங்காரமணிந்திருக்கும்பகவானை தெரிசிக்கவந்தார்கள். அப்போது இந்திரலோகம்போன்ற சபாமண்டபத்தில் ஸமஸ்தஜனங்கள் நடுவில்கல்கிபகவான் எப்படி விளங்கினாரென்றால் அநேக நக்ஷத்திரங்கள் நடுவில்பூர்ணசந்திரன்போல் விளங்கினார் இப்படி சசித்துவஜன் தனக்கு சேர்ந்த மாப்பிள்ளையைப்பார்த்து பரமானந்தங்கொண்டு நிர்பரனாய்நின்றான்.

## மூன்றாவது அம்சத்தில் பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## பதினோராவது அத்தியாயம்

### சசித்துவஜனுடைய பூர்வஜன்ம விருத்தாந்தம்.

இப்படி இருக்கும்போது அந்த சபாநடுவில் வீற்றிருந்த சாதுக்கள் பாரதந்திரியானமுள்ளவனும் விஷ்ணுபக்தியில் சிறந்தவனுமான இந்த சசித்துவஜன் ஒருவனே என்றுகொண்டாடினார்கள். இராஜாக்கள் சொல்லுகிறார்கள் நீங்கள் ஸ்ரீமந்நாராயணனுக்கு மாமியார்மாமனாராய் விட்டீர்கள் நாங்களும் இந்தராஜாக்களும் ரிஷிகளும் அந்தபகவானைக்கண்டு ஆச்சரியமான மனதையுடையவர்களாய் விட்டோம் இந்த அழிவில்லா பக்தியானது உமக்கு எப்படிஉண்டாயிற்று ஓய்சசித்துவஜமஹாராஜனே உமக்கு யாராலாவது சிக்ஷிக்கப்பட்டதா அல்லது தானேஉண்டாயிற்று இந்தவிஷயத்தைக்கேட்க விரும்புகிறோம் பகவத்ஸம்பந்தமான இந்த இந்தவிஷயத்தை யருளிச்செய்யக் கடவீர் பிறகு சசித்துவஜன்சொல்லுகிறான். ஸ்திரீபுருஷர்களானஎங்கள்விருத்தாந்தத்தைச்சொல்லுகிறேன் கேளுங்கள் அனேக ஜன்மங்களுக்குமுன் நானும் என் பாரியையும் துர்கந்த மாம்ஸத்தை புஜிக்கும் கழுகு பக்ஷியாயிருந்தோம் நாங்கள் கூடுகளைக்கட்டிக்கொண்டு சுகமாய் வாஸம்பண்ணினோம் எங்களைப்போல் ஸ்திரீ புருஷசுகத்தை எவரும் அனுபவித்ததில்லை இப்படியிருக்கும்போது மாம்சத்திலாசையுள்ள ஒருவேடன் அந்தகாட்டில் சஞ்சரித்துக்கொண்டுவந்தான் அப்போது கூட்டுக்குள் பெருத்தசரீரத்தோடுகூடிய எங்களைக்கண்டான். நாங்கள் அந்த வேடனைக்கண்டு எமனென்று நினைத்து நடுக்கத்தோடு யிருக்கும்போது அந்தவேடன் வலையை வீசினான். உடனே வலைக்குள் அகப்பட்டுக்கொண்ட எங்களைக்கண்டு வேடன் சந்தோஷப்பட்டு எங்கள் கழுத்தைப்பிடித்து முரித்து எங்களை கண்டகீநதிக்கரையில் பெரிய கல்லின்பேரில் யெங்கள் சரீரங்களை வெட்டிவெட்டி துண்டுசெய்து பசனம் பண்ணினான் அந்த கண்டகீ நதிக்

கரையில் மரணத்தை யடைந்ததினால் எங்களிருவருக்கும் திவ்யவி மானம் வந்தது. உடனே விஷ்ணு தூதர்கள் எங்களைக்கண்டு புண் ணியாத்துமாக்களே இந்த விமானத்தின்பேரில் ஏரிக்கொள்ளுங்கள் என்று எங்களைவேண்ட அதுபோல் நாங்கள் விமானங்களில் ஏரும் போது நான்கு புஜங்களும் சங்கசக்கிராதி ஆயுதங்களும் வந்தது அப் படிக்கே இந்திராதி தேவர்களால் சூழப்பட்டு விஷ்ணு லோகத்தை யடைந்து அவ்விடத்தில் நூறு யுகங்கள் வஸித்தோம் அப்பால் பிரம்ம லோகம் வந்து அவ்விடத்தில் ஐநூருயுகங்கள் வசித்தோம் பிறகு காலத் தின் கொடுமையால் தேவலோகத்திற்சென்று நாநூறு வருஷங்கள் வசித்தோம் அவ்விடத்திலிருக்கும்போது பூமியிற்போய் வஸித்து புத் திரமித்ராளுடன் வாழவேணுமென்று நினைத்தேன் அதுபோல் இவ்வி டத்தில் வந்து பிறந்து பகவானுடைய திருவடிகளைப் பணிந்தோம் அந்த கண்டகி நதிக்கரையில் மரித்த எங்களுக்கு, இப்பேர்ப்பட்ட போகமும் பூர்வஜன்ம விருத்தாந்தமும் வந்தது அந்த நதியில் ஸாளக் கிராம ரூபியாயிருக்கும் ஸ்ரீமன்னாராயணனைக் கிரஹங்கள்தோரும் ஆலயங்கள்தோரும் பூஜிக்கும் மஹானுபாவர்களுக்கு கோடி சூரிய னுதித்தாப்போலும் அப்பிராகிருத திவ்விய சரீரத்தைக்கொடுத்து பிரம் மாநந்தத்தை யளிப்பவன் பரமபதனதனென்பதற்கு சந்தேகமே கிடை யாது. வாசுதேவனுடைய நாமங்களைச்சொல்லும் பாகவதர்களுடைய மகிமையை யென்னால் சொல்ல ஒண்ணாது ஆதலால் ஹரிகீர்த்தனை களை பண்ணிக்கொண்டு நாங்கள் காலத்தைக் கழிக்கின்றோம் ஸ்ரீமந் நாராயணன் கலியின் நாசத்திற்காக கல்கியா யவதரிக்கப்போகிறாரெ ன்று பிரம்மரிஷிகளால் சொல்லக்கேட்டேன். உம்முடைய வீரியம் முதலானதுகளை நானறிவேன் ஆதலால் உம்முடைய திருவடிகளைப் பணிந்தோம என்னுடைய தனகனகவஸ்து பிராணன் முதலானதுக ளெல்லாம் உம்முடைய சுவாதீனம் என்று பகவதர்பணம் பண்ணி த ன்னை கிருதார்தனாக வெண்ணினான். இப்படிக்கி சசித்துவஜன் தன்னு டைய பூர்வவிருத்தாந்தங்களை சொல்லக்கேட்டசபாஜனங்கள் ஆச்சரிய மடைந்து சொல்லுகிறார்கள் ஓசசித்துவஜராஜனே பக்தியாவது யென் ன - யார் பக்தன் - அவனுடைய - லக்ஷணங்களென்ன - அவன் நடக் கையென்ன - அவன் என்ன புஜிப்பான் - எப்படி தூங்குவான் எங்கே வஸிப்பான் இதுகளை வர்ணித்து எங்களை பரிசுத்தமாக்கத் திருவுள் ளம் பத்தியருளவேண்டும். என்றுரைத்த ரிஷிகளின்வாக்கியத்தைக்கே ட்டு சசித்துவஜன் சொல்லுகிறான் கேளுங்கள் முன்பொருகாலத்தில் பிரம்மசபையில் தேவரிஷிகளின் நடுவில் ஸனகர் நாரதரைக்கேட்

டார். அக்கியானத்தைப் போக்கவல்லதான அந்த ஹரிபக்தியானது எப்பேர்ப்பட்டது முதலில் அந்த விஷயத்தைச் சொல்லியருளவேண்டும். இவ்விதமாய் பிரச்சினைபண்ணின ஸனகரைப்பார்த்து நாரதர்சொல்லுகிறார் கேளும் ஸனகரே பஞ்சேந்திரியங்களையும் ஆறாவதிந்திரியமான மனதையும் பரமபுத்தியால் அடக்கவேண்டியது பிறகு ஆசாரியனிடத்தில் பக்திபண்ணி அவரை தெய்வமாகவினைத் தாதரிக்கவேண்டியது ஆசாரியர் எல்லாவிஷயங்களிலும் வல்லவராயும், சுத்தராயும், பிரம்மநிஷ்டராயு மிருக்கவேண்டியது எப்படியென்றால், [illegible] இவை முதலான உத்தமகுணங்களோடு கூடியவராய் இருக்கவேண்டும்அப்படிப்பட்ட ஆசாரியர்பிரஸன்னரானால்பகவானும்பிரத்தியக்ஷராவார் அனந்தரம் அந்தகுருவானவர் பிரணவத்தை முதலாக உடைய அஷ்டாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டு முல்லைமுதலிய புஷ்பங்களாலும் வாடாமலரான மனதினாலும் பகவானுடைய திருவடிகளை யர்ச்சித்து சுத்தமான மனமுடையவராய் சர்வாங்க சுந்தரராய் ஹிருதயகமலத்தில் சூக்ஷ்மரூபியாய் விளங்கும் ஹரியை முதலில் தியானம்பண்ணவேண்டியது. [illegible] ॥

என்று சொல்லுகிறபடி க்ஞானக்கண்ணினு லறியவேண்டியது. மனோவாக்காயங்களால் ஹரியை பஜிக்கவேண்டியது அந்தபகவானுக்கு வேதாகமங்களே சரீரங்கள் பிரும்மருத்திர இந்திராதிகள் அவயவங்கள் எப்படி யென்றால், [illegible] ॥ என்று வேதத்தில் சொல்லியபடி அவனுடைய ஆபாதமஸ்தகமானது மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களால் சேவிக்கத்தக்கது அக்கியானமும் மோஹமும் மருபடியும் கற்பவாசனைக் கிடமானது பகவானிடத்தில் பூர்ணபக்தியுள்ளவன் கூத்தாடுவான், நடனஞ்செய்வான், குதிப்பான், சிரிப்பான், ரோதனம்பண்ணுவான் கீழேவிழுந்து புரளுவான் வாயில்வரும் சப்தங்களெல்லாம் ஸ்ரீமந்நாராயணன் நாமங்களாகவேயிருக்கும் இப்படி பகவானென்றும் இதரவஸ்துக்களென்றும் சொல்லமாட்டான் அந்த பாகவதரால் தான் இவ்வுலகம் பரிசுத்தமாகிறது என்னவென்றால் [illegible]. என்று சொன்னபடி

யே உலகங்களை பரிசுத்தம்பண்ணும் பரமபாகவதர்களுடைய திருவடிகளை நான் தியானம்பண்ணுகிறேன். பக்தியானது திருமூர்த்திகள் விஷயத்திலும் சேரும். அதில் ஹரிபக்தியானது சத்துவகுணத்தினுல் பரபிரம்மானுபவத்தையடைவிக்கிறது. ரஜோகுணத்தினுல் சம்சாரத்திலாசையுண்டாக்குகிறது. தமோகுணத்தினுல் நரகத்தை யடைவிக்கிறது. எச்சிலாயிருந்தாலும் தான் போஜனம்பண்ணி மிகுதியாயிருந்தாலும் ருசியில்லாமலிருந்தாலும் பக்தர்களால் பிரியத்துடன் கொடுக்கப்பட்டது அந்தபகவானுக்கு உத்தம ஆகாரமாகிறது. ராஜஸ ஆஹாரமானது இந்திரியவிருத்தியையும் ஆயுளையும் ஆரோக்கியத்தையும் உண்டுபண்ணுகிறது. தாமஸ ஆகாரமானது நரகத்தையும்புனர்ஜன்மத்தையும் உண்டுபண்ணும். சாத்துவீகர்கள் மகாரண்யத்தில் ஏகாந்தமாய் வசிப்பார்கள் ராஜஸர்கள் கிராமத்தில் வசிப்பார்கள் அரிபக்தியுள்ளவன் தானம்வாங்கவுமாட்டான் கொடுக்கவுமாட்டான். அரிபக்தியைத் தவிற வேருவிஷயங்களில் பிரவேசிக்கவும் மாட்டான் இப்படி பாகவதலக்ஷணங்களைச்சொல்லி நாரதர்சுரலோகம்போய்ச் சேர்ந்தார்.

## மூன்ருவது அம்சத்தில் பதினேருவது அத்தியாயம் முற்றிற்று

---

## பன்னிரண்டாவது அத்தியாயம்.

### விஷ்ணுபக்தியுள்ளவன் ஹரியோடியுத்தஞ்செய்தகாரணம்.

சசித்துவஜன் ஒய் அரசர்களே உங்களுக்கு சொல்லவேண்டிய விஷயங்களைச் சொன்னேன் பக்திலக்ஷணத்தையும் பூர்வஜன்ம கிருத்தியத்தையும் சொல்லுகிறேன். இன்னும் என்னசொல்லச்சொல்லுகிறீர்கள் என்று சொன்னுன். பிறகு பூபர்கள் எல்லோரும் சொல்லுகிருர்கள். பிரபுவே வீங்கள் விஷ்ணுபக்தியில் சிறந்த வைஷ்ணவர் நீர் எல்லாஜனங்களிடத்திலும் தயையுள்ளவர் அப்படியிருக்க ஏன் ஹரியோடு யுத்தம்பண்ணினீர் உலகத்தில் சாதுக்கள் ஜீவஹிம்ஸைபண்ணத் துணியமாட்டார்கள் கூடுமானவரையில் திரிகரணங்களாலும் ஹிம்ஸைபண்ணமாட்டார்கள் என்று விண்ணப்பம் பண்ணினுர்கள் அனந்தரம் சசித்துவஜன் சொல்லுகிருன் இஷ்டப்படி உருவெடுக்கும் பிரகிருதியானது துவைதத்தை விளங்கச்செய்கிறது வேதாகமங்களும் முக்குணங்களும் அதிலிருந்து உண்டாயிற்று. அந்த வேதங்கள் தருமங்களை வெளிப்படுத்தின்

றன விஷயத்தி லாசையுள்ள காமிகளுக்கு வாத்ஸ்யாயனுதிரிஷிகள் பக்தியை யுபதேசிக்கின்ருர்கள். வேதவாக்கியங்களை யனுசரித்து ஈசுவரனுடைய கட்டளைக்குள்பட்டு நடப்பார்கள் நாமும் அந்தரிஷிகளின் அனுஷ்டானத்தை யனுஷ்டிக்கக்கடவோம் வேதாந்தத்தில் சொல்லியபிரகாரம் மரணத்தை எது எது யார்கையாலடையும்படி பகவான் கட்டளையிட்டிருக்கிருரோ அப்படிதான் முடியும் அப்படிசெய்வதில் பிராயச்சித்தங்கிடையாது அதினுல் அதர்மமூமுண்டாகமாட்டாது நான் ஒருவராலும் செயிக்கக்கூடாதசேனைகளைவைத்துக்கொண்டு சண்டை பண்ணினேன் அதினுல் கிருதன்-தருமன்-சாந்தன்முதலானவர்கள் எல்லோரும் தோர்வையடைந்தார்கள் அப்படி ஜெயித்ததற்கு அந்த ஹரிபக்தியே காரணம் நான் வேதவாக்கியத்தை யனுஸரித்துச் சொல்லுகிறேன்விஷ்ணு யாரைக்கொல்லுகிருரோ, அவர்தானே மரணத்தை யடைந்ததுபோலாயிற்று ஏனென்ருல் எல்லா இடங்களிலும் நிரைந்தவராதலால் கொல்லுகிறவனும் அவர்தான் சாகிறவனும் அவர்தான்செயமடைந்தவனு மவர்தான் தோர்வையடைந்தவனு மவர்தான் அப்படியிருக்க என்னைப்பார்த்து செயித்தாயென்று சொல்வது தகுமா யுத்தத்திலும் யாகத்திலும், மரணத்தையடைந்தவர் மரித்தவர்களாகார்கள் எப்படி என்ருல், ந்ரஸ்வேதிக காயொஸ்யஸ꞉ காயெ ந ஜீவதி கீர்த்தி சரீரத்தால் ஜீவிக்கிருன் அப்படி ரிஷிகள் சொல்லுகிருர்கள் மாயையை யடைந்து ஸேவ்யனென்றும் ஸேவகனென்றும் பேதத்தையடைந்து ஜீவிக்கிருர்கள் அந்தமாயையை எப்படி நீக்கிக்கொள்ளலாம். குருசாபத்தால் சிஷ்யன் துர்கதியும் சிஷ்யசாபத்தால் குரு துர்கதியையும் அடைகிருன். ஆதலால் மாயையை நீக்கிக்கொள்வது எப்படி எங்களுக்கு சந்தேஹமா யிருக்கிறது மாயையை அடைந்த சம்சாரிகள் இந்திரஜாலவித்தையைப்போல் சஞ்சரிக்கிருர்கள். இப்படி சொன்ன அரசர்களுடைய வாக்கியத்தைக்கேட்டு சசித்துவஜன் சொல்லுகிருன். அனேக ஜன்மாந்திரங்கடந்து தீர்த்தயாத்திரை யடைந்தால் சாதுக்களுடைய சம்மந்தம்கிடைக்கிறது. அவர்கள் சம்பந்தத்தால் பகவத்பக்தியுண்டாகிறது, அந்த பக்தியால் பகவத் தரிசனமுண்டாகிறது, பகவத்தரிசனந்தால் சாயுஜ்யபதவியை யடைகிருன். அநேகவிதமான போகங்களை யனுபவித்து பரமபாகவதனென்றும் பெயரையடைந்து பரமேகாந்தியாய் வீடுகிருன். அந்தபகவானுடைய நித்தியமஹோத்ஸவத்தை யதேஷ்டமா யனுபவித்து திரிகரணங்களால் கைங்கரியங்களைச்செய்து இந்த உலகத்தில் அர்சாவதாரங்களை யெடுத்து சேதனுஜ்ஜீவனமாய் பிரகாசிக்கும் பரமாத்துமாவின் கைங்கரியங்களைச்செய்யும் பரமபாகவதர்களுக்கு

மோக்ஷத்தில்விருப்பமிருக்கமாட்டாது. அவர்கள் அனேக ஜன்மங்களை யெடுத்து ஹரியின் மகிமையை வெளியிட்டு உலகத்தை உஜ்ஜீவிக்கப்பண்ணுவார்கள். எப்படியென்றால் [illegible] க்ஷேத்திரங்கள்-தீர்த்தங்கள்- யக்கியங்கள் - எல்லாம் விஷ்ணுரூபங்கள். ஸேவியன்-ஸேவகன் - பிராணன்-ஆத்துமா-இமைக்கொட்டுதல்முதலான எல்லாம் பகவன் மாயைதான் எப்படி பகவானுக்கவதாரமோ அப்படியே சேவகர்களுக்கும் அப்படியேதான்ஒருமனிதன் எப்படிஇமைக்கொட்டுதலையடைகிறானோ அப்படிதான் ஜன்மமுண்டாகிறது முக்தனான வசிஷ்டனும் சரீரத்தை யடைய மனமுடையவனாக இருந்ததாற் சிஷ்ய சாபத்தினாற் சரீரத்தை யடைந்தவிதம் உங்களுக்கே தெரியும். பக்திலக்ஷணமும் பக்தலக்ஷணமும் சொன்னேன் இந்தச்சரித்திரமானது ஹரிபக்தியை விருத்திபண்ணத்தக்கதாயும் பாபத்தைப்போக்க வல்லதாயும் காமக்குரோதாதிகளை யொழிக்க வல்லதாயும், நானாவித சாஸ்திரங்களுடைய அர்த்தத்தை யளிக்கவல்லதாயும், வியாசபராசராதிகளால் அருளிச்செய்த தத்துவங்களை யளித்து ஸ்ரீகிருஷ்ணனுடைய சாயுஜ்ய பதத்தை யளிக்கும்.

மூன்றாவது அம்சத்தில் பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## பதிமூன்றாவதத்தியாயம் த்விவிதோபாக்கியானம்.

இப்படி சசித்துவஜனானவன் தன் சரித்திரங்களையும் வேதாந்த விஷயங்களையும் சொல்லி பிரீதியையடைந்து இருகரங்கூப்பி கல்கிபகவானைக்குறித்து ஒருவாக்கியம் சொல்லுகிறான். ஓய் சரண்ணியனே! நீர் மூவுலகங்களுக்கும் நாதன் இந்த ராஜாக்கள் யாவரும் உம்மையடைந்தவர்கள் அவர்களைப்போல் என்னையும் அறியும். ரிஷிகளுடைய வாசத்துக்கிருப்பிடமாகிய ஹரித்துவாரக்ஷேத்திரத்தில் தவம்புரியப்போகிறேன், இதோ என்னுடைய புத்திரமித்திராதிகள் யாவரும் உம்மைச்சேர்ந்தவர்கள் அவர்களைக் காக்கவேண்டுமென்று பிரார்த்தித்து பிறகு தன்பாரியையுடன் தவம்புரியப்புறப்பட்டபோது அவ்விருவரைக்கண்டு கல்கிபகவான் அதோமுகராயிருந்தார்.

இப்படி அதோமுகராயிருக்கும் கல்கிபகவானைக்கண்டு இராஜாக்கள் இதென்னவென்று திகைத்தார்கள். ஓஸ்வாமி சசித்துவஜமகாராஜன்

என்னசொன்னூர். ஏன் தலையைக்குனிந்துக்கொண்டீர். எங்களுக்கரிவிக் கக்கடவீர், கல்கிபகவான் சொல்லுகிறூர், உங்களுடைய சந்தேகங்களை நிவர்த்திசெய்த சசித்துவஜனைக் கேளுங்கள் என்றுரைத்தார். பிறகு ராஜாக்கள் சொல்லுகிறூர்கள் ஓய் பரமபாகவதரான சசித்துவஜமகாரா ஜனே நீர் என்னசொன்னீர். ஏன் அதோ முகராயிருக்கிறூர் அந்த சம்சயத்தை நிவர்த்தி செய்யவேண்டும் என்று பிரார்த்தித்த ராஜாக்களைக்குறித்துச் சசித்துவஜன் சொல்லுகிறுன். நான் சொல்லப்போகிற உபாக்கியானமானது, ஆச்சரியத்தைக் கொடுக்கத்தக்கது ஏகமனதுள்ளவர்களாய்க் கேளுங்கள் பூர்வம் ராமாவதாரத்தில் லட்சுமணரால் இந்திரசித்து மரணமடையும்போது அந்த இந்திரசித்துவினுடைய சரீரத்தில் ஒருநாகஜ்வரம் உண்டாய் அந்த ஜ்வரமானது லக்ஷ்மணனுடைய் சரீரத்தில் பிரவேசித்தது. ஏனென்றுல் பிரும்மசந்ததியில் பிறந்து மகாவீரனுய் இறந்ததினூலும் அக்கினிஹோத்திரம் செய்ததினூலும் பிரும்ம தேஜஸ்சு ஒரு நாகஜ்வர ரூபமாய்விட்டது. அந்த ஜ்வரத்தினுல் லக்ஷ்மணன் அதிக தாபத்தையடைந்ததை த்விவிதன் என்ற வானரன் பார்த்து தான்அசுவனிதேவவம்சத்தில் பிறந்தவனுனதாலும் தன்வந்திரி போல் வைத்தியனுனதாலும் லக்ஷமணனுக்கு சிகித்ஸை செய்வதில் பயனில்லையென்றறிந்து ராமனுடைய பிரதிமையையெழுதி லட்சுமணனுக்கெதிரில் கொண்டு காட்ட உடனே லட்சுமணன் எழுந்து சுவஸ்தசித்தனுய் உனக்கென்ன வரம்வேண்டும்என்றுரைக்க, அவ்வாக்கியத்தைக்கேட்ட த்விவிதன் சொல்லுகிறுன், சௌமித்திரரே மகாவீரரான உம்முடைய கையால் நான்மரணத்தையடைந்து வானரஜன்மம் நீங்கும்படி அனுக்கிரகிக்கவேண்டும் என்று கேட்டான். அதைக்கேட்டு லட்சுமணன் ஓய் த்விவிதா இந்த ஜன்மத்தில் உனக்கு வானரஜன்மம் நீங்காது. சமுத்திரத்தின் வடகரையில் பலராம ரூபியான என்னுடைய சரத்தினுல் உனக்கு நல்ல ஜன்ம முண்டாகும், இந்த லேகனமானது ஓர் நாக ஜ்வரத்தை போக்கும்படியானது என்று ஒரு பத்திரத்தில் எழுதிக்கொடுத்து இந்த பத்திரத்தைப் பார்த்தவர்களுக்கு ஏகாஹிக ஜ்வரமானது போய்விடும் என்ற வரத்தையடைந்து ஸ்வஸ்தமா யிருந்துக் கொண்டு பலராமனுடைய பாணத்தினுல் தேகத்தை விட்டு மோட்சத்தை யடைந்தார்.

அந்த இடத்தில் சூதபுத்திரரான ரோமகர்ஷரானவர் பலராமனுடைய பாணத்தினுல் மரணத்தையடைந்தார். நைமிசாரண்ணியத்தில் பிறந்தார். நாராயணன் வாமனுவதாரம் எடுத்தபோது பிரும்மபுத்திர

ராணஜாம்பவான் எம்பெருமானுடைய மேல்திருவடியை ஒரு முகூர்த்தத்தில் மூன்றுபிரதக்ஷணம் பண்ணபோது திருவிக்கிரமன் ஜாம்பவானைப்பார்த்து உமக்கு வேண்டும் வரங்கேளும் என்றுரைத்தார். அவ்வாக்கியத்தைக்கேட்டு ஜாம்பவான் சொல்லுகிறார். ஆபத்பந்தோ அப்படிக்கானால் உம்முடைய சக்கிராயுதத்தால் நான்மரணத்தை யடையவேண்டும். இது எனக்கு பரமபுருஷார்த்தம் என்றுரைத்தான். அவ்வாக்கியத்தைக் கேட்ட திருவிக்கிரமன் சொல்லுகிறார்.

இந்த ஜன்மத்தில் உனக்கு சக்கிரத்தால் மரணங்கிடைக்காது கிருஷ்ணவதாரத்தில் மோக்ஷங்கொடுக்கிறேன்கிருஷ்ணவதாரத்தில் சூரிய பக்தனை ஸத்ராஜித்தாலே ஒருரத்தினவிஷயமாய்எனக்குஅபவாதம்வரப்போகிறது அந்த அபவாதத்தை போக்கடித்துக்கொள்ளும்பொருட்டு அந்த மணியைத்தேடிக் கொடுக்கப்போகிறேன் அப்போது அந்த ரத்தினத்திற்காக உமக்கும் கிருஷ்ணனை எனக்கும் யுத்தம் உண்டாகப் போகிறது அந்த சமயத்தில் என்னுடைய சக்கிரத்தினால் உனக்கு மோக்ஷமுண்டாகப் போகிறது என்று சொல்லியருளினார். அதுபோல் யுத்தமுண்டாய் ஜாம்பவான் தன் பெண்ணை ஜாம்பவதியையும் அந்த மணியையும் கிருஷ்ணனுக்குக் கொடுத்தான். கிருஷ்ணன் ஜாம்பவதியை விவாஹம்செய்துக்கொண்டு மணிமாலையை தரித்துக்கொண்டு துவாரகாபுரியில் வாசம்பண்ணி பிறகு தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்தார். இப்படி யிருக்க கிருஷ்ணன் போகும்போது அந்த மணியை என்னிடத்தில் கொடுத்தார் அந்த மணியையும் சத்திய பாமாவையும் என்னிடத்திலிருக்கக்கண்டு சததந்வாவானவன் என்னை யுத்தத்தில் ஜெயித்து என்னைக்கொன்று அந்த மணியை எடுத்துக்கொண்டான் நான் போனதுகண்டு சத்தியபாமாவும் ஏதோ ஒருவழியாலே அந்த தேகத்தை நீக்கிக்கொண்டு சசித்துவஜனென்னும் பெயருடைய எனக்குப் பெண்ணைப் பிறந்தாள் அந்தப்பெண்ணை கல்கியாயவதரித்த பகவானுக்கு நான் கன்னிகாதானம் செய்ததினாலும் என்னால் தோர்வையடைந்ததினாலும் மாப்பிள்ளை யென்றறியாமல் இப்படி தன்னைச்செய்ததினாலும் லஜ்ஜையினாலும்தலையைக் கவிழ்ந்துக்கொண்டிருக்கிறார். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், சத்தியபாமாரூபியாகிய இந்தப் பெண்ணை அந்த பகவானுடைய சொத்தென்று தெரிந்துக்கொண்டுஅவருடைய சொத்தை அவரிடத்தில் கொடுத்துவிட்டேன், இதோ நான் என்னுடைய பாரியையோடு தவம்புரிந்து மோக்ஷமடையப்போகிறேன், அது

தான் பூர்வவிருத்தாந்தம். இந்த வாக்கியங்களைக்கேட்டு ராஜாக்கள் பரமாச்சரியத்தை யடைந்து திகைத்துநின்றுர்கள்.

## மூன்ருவது அம்சத்தில் பதிமூன்ருவது அத்தியாயம் முற்றிற்று.

---

## பதிநான்காவது அத்தியாயம்.

## கல்கிபகவான் காஞ்சனபுரியில் பிரவேசம்.

சூதபுராணிகர் சொல்லுகிருர் கேளுங்கள் சௌனகாதிகளே அனந்தரம் கல்கிபகவான் தன்மாமஞராகிய சசித்துவஜனிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு ராஜகூட்டங்களோடு காஞ்சனபுரியை யடைந்தார். சசித்துவஜனைவன் கல்கிபகவானிடத்தில் நின்றும் வேண்டியவரங்களையடைந்து பத்தினியுடன் வனத்தையடைந்தார். அப்பால் கல்கிபகவான்வாஸுகி-தக்ஷகன் முதலான நாகங்களாலும் வேருசர்பங்களாலும் சூழப்பட்டு உள்ளே பிரவேசிக்கக்கூடாமையாயிருப்பதை அரிந்து காருடாஸ்திரத்தைப் பிரயோகம்பண்ணி அந்த சர்பங்களை ஹதாஹதம்செய்தும் ஓயாமல் இருக்க, கல்கிபகவான்கண்டு இதென்ன ஆச்சரியமாயிருக்கிறதென்று திகைத்துநின்று மேல்நடத்துவது தெரியாதவராய் நின்றுக்கொண்டிருக்கும்போது அசரீரிவாக்கானது ஒன்று சொல்லிற்று. ஓய்கல்கிபகவானே நீர் ஒருவராய் மாத்திரம் யுத்தம்பண்ணிஞல் செயிக்கமுடியும் என்றுசொல்லிற்று. அவ்வாக்கியத்தைக்கேட்டு கல்கிபகவான் தன் சுகத்தின்மேலேரிக்கொண்டு காஞ்சனபுரியின் பிராகாரங்களைக் கடந்து உள்ளே பிரவேசிக்கும்போது ரதிதேவிபோல் ரூபலாவண்ணியமுள்ள விஷகன்னிகையானவள் பகவானைக்குறித்து ஒருவாக்கியம் சொல்லுகிருள். இந்தகர்மசக்ஷுஸ்ஸாலே அரியக்கூடாத திருமேனியுடையவரே மரணதர்மத்தையடையத்தக்கினவும், உக்கிரமான பராக்கிரமத்தையுடைய ஜனங்களும் அரசர்களும் எத்தனையோகாலம் இப்பூமியையாண்டுமரணத்தையடைந்தார்கள். ஆதலால் உன்திருவடிக்கமலத்தை தெண்டன் ஸமர்ப்பிக்காதவர்களுக்கு சத்கெதிகிடையாதென்று ஸநகாதிகள் சொல்லியிருப்பதால் நான் உன்திருவடிக்கமலத்தைப்பணிந்தேன், என்னுடைய கொள்ளிக்கண் எங்கே என்னுடைய அபரிசுத்தமான நடக்கை எங்கே, ஆகா நான் பண்ணின பாக்கியமே பாக்கியம். என்ன தவம்பண்ணினேனே உங்க

னுடைய சேவையெனக்கு பிராப்தமாயிற்றேயென்று கொண்டாடினாள் அதைக்கண்டு கல்கிபகவான் ஓ மாமணியே நீயார் எதினால் இந்தகதி உனக்கு ஸம்பவித்தது, அல்லது ஊழ்வினையால் இப்படி லபித்ததா என்று உரைத்தார். அதுகேட்டு விஷகன்னிகையானவள் சொல்லுகிறாள். ஜகத்ரக்ஷகா சித்திரக்கிரீவனென்கிற கந்தர்வராஜாவின் பாரியையான சுலோசனை யென்கிற பெயரையுடையவள் ஒருகாலத்தில் என்பர்த்தாவோடு விமானத்தின்மேலேறிக்கொண்டு கந்தமாதன மலையை அடைந்து அக்காடுகளில் நாங்களிருவரும் கிரீடித்துக்கொண்டு இருக்கும்போது விகாரமானஜடையும்கருத்தசரீரத்தையுடைய யக்ஷமுனியைக்கண்டேன் நான் சௌந்தரிய மதத்தால் அவரை ரிஷியென்று பாராமல் பரிஹாஸம் பண்ணினேன் அந்த நிந்தா வாக்கியத்தைக்கேட்டு நீவிஷதிருஷ்டியுள்ளவளாய் காஞ்சனபுரியில் எல்லா ஜனங்களையும் விஷதிருஷ்டியாலெறித்துக்கொண்டு பதியில்லாமலும் தைவமில்லாமலும் வசிக்கக்கடவாய் என்று சபித்தார். நான் அந்த மஹானுபாவரை வணங்கிக் கேட்டுக்கொண்டதில் எந்தகாலத்தில் கல்கிபகவான் சுகத்தின்பேரில் ஏறிக்கொண்டு உன்னைப்பார்க்கப் போகிறாரோ அப்போது உனக்கு பூர்வஜன்மம் வரக்கடவது என்று அனுக்கிரஹம் பண்ணினார் என்று தன்னுடைய விருத்தாந்தங்களைச் சொல்லிவிட்டு பகவான் திருவடிகளில் பணிந்து சுவர்க்கலோகம் போய்ச்சேர்ந்தாள். அப்பால் கல்கிபகவான் அந்த காஞ்சனபுரிக்கி மகாமதியை ராஜாவாக்கி தான் தன்னுடைய சேனைகளோடு புறப்பட்டு அவர் வம்சத்தில் பிறந்த மனுவை அயோத்தியா பதியாய்ச்செய்து தான் மதுராபட்டணத்தை யடைந்தார். அந்த மதுராபட்டணத்துக்கு சூரியகேதுவை அரசனாக்கி வாரணவதியில் தேவாபியை அரசனாக்கி அஸ்தினாபுரியையடைந்து அவ்விடத்தில் பிருஹத்திரதனை ராஜாவாக்கி அந்த அஸ்தினாபுரியைச்சேர்ந்த ஹரிஸ்தலம்-விருகஸ்தலம்-மாகந்தம் முதலான உபதேசங்களுக்கும் தேவாபியை ராஜனாகச்செய்து தன் சதுரங்கபலத்தோடு சம்பல கிராமத்தையடைந்தார்.

பிறகு சௌம்பதேசத்தையும் பௌண்டரதேசத்தையும் புலிந்தேசத்தையும் தன் பிராதாக்களான, கவி-பிராக்கியன்-சுமந்திரன் முதலானவர்களுக்கு முடிசூட்டி, கீகடம்-மத்தியகர்ணடம்-ஆந்திரதேசம்- ஒட்ரம்-கலிங்கம்-அங்கம்-வங்கம் முதலான தேசங்களை தன்கோத்திரத்திற்பிறந்தவர்களுக்குக்கொடுத்து தான் சம்பளநகரத்தில் வஸித்துக்கொண்டு-கங்கதேசம்-கேகதேசம்-கலாபதேசம் முதலானதுகளை விசாகயூபனுக்குக்கொடுத்து, சோளதேசம்-பர்பரதேசம்-கர்பதேசம் முதலான தே

சங்களை தன்புத்திரனுக்குக்கொடுத்து தன் பெரியதகப்பன் முதலான வர்களுக்கு அனேக தனரத்தினம் முதலானதுகளைக்கொடுத்து திருவடிகளில் பணிந்து பத்துமாவதியோடு கிரஹஸ்தராய் விளங்கிக்கொண்டு தர்மத்தை நாலுபாதத்தினுல் நடத்திக்கொண்டுவருங்காலத்தில் தேவர்கள் அங்கங்கே பிராமணுள் முதலானவர்களால் கொடுக்கப்பட்டஅவிர்பாகங்களை யதேச்சையாயனுபவித்துக்கொண்டு வருங்காலத்தில் தக்க காலங்களில் மழைபெய்தபடியால் பூமியெங்கும் பயிர்களால் நிறைந்து மரங்களெல்லாம் பலவத்துக்களாய் இருந்தன. பூசுரர்களெல்லொரும் சுருதி ஸ்மிருதி புராணங்களை அப்பியாசித்து, அக்கினிகோத்திரம்-வைசுவதேவம் முதலான நித்தியகர்மங்களைக் குறைவர நடத்தியும் அரசர்கள் மனுநீதிதவராமல் ராஜ்யதந்திரங்களை யனுஷ்டிக்கவும் வைசியர்கள் கிருஷி கோரக்ஷணம் பண்ணிக்கொண்டும், சூத்திரர்கள் பிராமணசேவைபண்ணிக்கொண்டு விஷ்ணுபூஜையைப்பண்ணிக்கொண்டுவந்தார்கள் ஏன் சிவபூஜைபண்ணக்கூடாதென்றுல், [illegible] என்று சொல்லியதுபோல எல்லா ஜனங்களும் தைவபக்தியுள்ளவர்களாயிருக்கிறுர்கள்.

மூன்ருவது அம்சத்தில் பதிநான்காவதத்தியாயம் முற்றிற்று.

---

## பதினைந்தாவது அத்தியாயம்.

### மாயாதுதி.

சௌனகர் சொல்லுகிருர் ஓய் சூதபுராணிகரே சசித்துவஜமகாராஜனானவர் மாயையை ஸ்துதிசெய்து எங்கேபோனுர் மாயையாவது என்ன அதினுடைய விஸ்தாரத்தை யருளிச்செய்யவேண்டும் என்று வினவினுர். சூதபுராணிகர்சொல்லுகிருர். ரிஷிகளே நான்சொல்லப்போகிறயாவும் சுகமுனிவர் மார்க்கண்டேயருக்குச் சொல்லியருளினுர். அந்த சரித்திரத்தைக் கேட்டவர்கள் முக்தியடைவதில் சந்தேகமில்லை. கேளும் சசித்துவஜமகாராஜனே! பல்லாடநகரத்தைவிட்டுப்புறப்பட்டு தன் சரீரத்தியாகம் பண்ணும்பொருட்டு மகாமாயயை ஸ்தோத்திரம்

பண்ணுகிறார். ஹ்ரீமென்கிற அக்ஷரத்தையும் பிரணவத்தையும் உருவமாயுடையவும், பிரணவமென்கிற தாமரைக்கமலத்தில் வீற்றிருக்கிறவளுமான ஓமாயையே வேதங்களாலும் வேதாந்தங்களாலுமறியக்கூடாத சத்துவமூர்த்தியான பகவானிடத்தில் நின்று மவதரித்தவளும், பிரம்மாதி தேவர்களால் துதிக்கப்பட்டவளும், பஞ்சபூதங்களும் தன் மாத்திரையான சப்தாதிகளுமாய் உலகத்தை அதிக்கிரமித்து இருப்பவளும், உற்றுப்பார்த்தால் ஒருருவமும் இரண்டுருவமாய்த் தோன்றவும் வித்துவான்களால் துதிக்கப்பட்டவளும் காலமாகிற அலையில் தள்ளப்பட்ட சம்சாரங்களையுடையவளும், ஆதிஅந்தமில்லாமலிருப்பவளும் அநேக தேவமனுஷியாள் ரிஷிகள் முதலானவர்களுக்காதாரபூதமாயிருப்பவளும், எந்த பகவதி பிரகாசித்தால் உலகமெல்லாம் பிரகாசிக்கிறதோ, எப்போது பிரகாசிக்காமலிருக்கிறதோ அப்போது உலகம் பிரகாசமில்லாததாயுமிருக்குமோ, அப்பர ப்ரம்மஸ்வரூபியை, வணங்குகிறேன், பிராம்மணர்களுடைய நித்தியகர்மங்களில் பிராதக்காலையில் பால்யரூபியாய் பிரும்மாவை அடைந்தவளாயும், மத்தியான்னகாலத்தின் யெவ்வனரூபியாய் ருத்திரமூர்த்தியை யடைந்தவளும், சாயுங்காலத்தில் வார்த்திக்கரூபியாய் விஷ்ணுமூர்த்தியையடைந்தவளாய் விளங்கும் பரப்பிரம்ம ரூபியாகிய உன்னைவணங்குகிறேன். ஓ வைஷ்ணவி உன்னை வராகியென்றும், மாஹேந்திரியென்றும், சாமுண்டியென்றும் உன்னைச்சொல்லுகிறார்கள். உலகங்களில் சராசரம்யாவும் உன்னடைக்கலம். ஓதாயே உன்னையே நம்பியிருக்கின்றேன். உன்னைத்தவிர வேறொருவருமில்லை என்னைக்காக்கவும் என்று துதிசெய்த சரித்திரத்தை எவர்கள் கேழ்க்கிறார்களோ, எவர்கள் பாராயணம் செய்கிறார்களோ, அவர்களுக்கு இகத்தில் சுகமும் பரத்தில் பகவானுடைய கிருபையால் மோக்ஷமும் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை.

மூன்றாவது அம்சத்தில் பதினைந்தாவது அத்தியாயம்.

முற்றிற்று.

---

## பதினாறாவது அத்தியாயம்

## விஷ்ணுயஜஸின் மோக்ஷம்.

சூதர் சொல்லுகிறார் கேளுங்கள் தபசிகளே அனந்தரம் ஒப்பற்றிருக்கிற கல்கியின் சரித்திரத்தைக்கேட்க விருப்பமில்லாதவர்கள் சன்

டாள ஜன்மத்தையடைந்து பிறகு திர்யக்யோனியில் பிரவேசிப்பார்கள் வேதங்கள்-தர்மம்-கிருதயுகம்-தேவர்கள்-ரிஷிகள் முதலானவர்கள் எங்கும் சந்தோஷமுள்ளவர்களாயும், பூமியெங்கும் செழித்து பரமசந்தோஷங்களாய்விட்டதுகள். எல்லாவிஷயங்களும் எல்லா ஜனங்களும் பகவன் மாயாரகிதர்களாய் பிரகாசித்தன. அந்த காலத்தில் எல்லா வர்ணத்து ஜனங்களும் தங்கள் தங்கள் வர்ணாசிரமத்துக்குரிய புண்டரங்களைத்தரித்துக்கொண்டு விளங்குவார்கள். அந்த கிரமமாவது ப்ராஹ்மணா வேதபரா: ஸத்யவ்ரதா: । க்ஷத்ரியா: க்ஷத்ரவர்மாண: வைஶ்யா: ஸ்வவ்ருத்திநிஷ்டா: ஶூத்ராணாம் த்விஜஸேவனம் ॥ என்று சொல்லியிருக்கிறது. பிற்பாடு சம்பளக்கிராமத்தில் பத்மாவதியோடுவிளங்கும் கல்கிபகவானைப் பார்ப்பதற்கு விஷ்ணுயஜசும் வருவதைக்கண்டு கல்கிபவான் தன் பரிஜனங்களோடு தன்பிதாவை சாஷ்டாங்கமாக தெண்டன் சமர்ப்பித்துச் சொல்லுகிறார். ஓபிதாவே தேவரீருடைய திருவுள்ளப்பிரகாரம் அசுவமேதம் அப்தோரியாமம் முதலான யாகங்களைச்செய்து தேவர்களுடைய சமூகத்தைத் திருப்திசெய்யக்கடவீர் என்று சொன்ன கல்கியின் நியமனப்படி அந்தவிஷ்ணுயஜசு அப்படிச்செய்வதற்குஉத்தமமான யிடமானது கங்காநதியும் யமுனாநதியும் ஒன்றுசேரும் இடத்தில் வசிஷ்டர்-வாமதேவர்-கிருபாசாரியர்-ராமன்-தௌமியர் அசுவத்தாமர்-மதுச்சந்தர்-மந்தபாலர் முதலான ரிஷிகளை வைத்துக்கொண்டு யாதங்களைச்செய்து வேதங்களைக்கரைகண்ட பிராமணர்களுக்கு வேண்டும் தானம்-தனம்-ரத்தினம்-க்ஷேத்திரம்-வாஹனம் முதலானதுகளைக் கொடுத்து மனதைத்திருப்திசெய்து அவபிருதஸ்நானம்செய்து போசனம் முதலான பால்களாலும், லேகியம் முதலானதுகையல்களாலும் சோஷ்யம் முதலான வத்தல்களாலும் திருப்திபண்ணிவைத்தார். அப்படியிருக்க எங்களுக்கு போஜனம் வேண்டாம் வேண்டாமென்று உத்கோஷித்துக்கொண்டு இருக்கும்சமயத்தில், தும்புரு-ஹாஹா-ஹூஹூ முதலான கந்தர்வர்கள் பாடவும், அப்சரஸ்திரீகள் ஆடவும்,நடவிட காயகாள் தங்கள் தங்கள் வித்தைகளைபிரகாசிப்பித்துக்கொண்டும்இருக்குங்காலத்தில் செந்தாமரையிதழ்போன்ற திருக்கண்களையுடைய கல்கிபகவான் ஸ்திரீ பால-விருத்தாள் முதலானவர்களுக்கு இஷ்டமானமட்டும் தனம் முதலானதுகளைக்கொடுத்தார்.

பின்பு பிதாவாகிய விஷ்ணு யசஸ்ஸின் அநுமதியால் கல்கிபகவான் கங்காதீரத்தில் உபவாசமிருந்து யாகத்தை முடித்துவிட்டு அவபிருத ஸ்நானம்பண்ணி சுகமாய் காயகர்களாலும், வேதாங்கங்களை

யறிந்த பிராமணர்களாலும், கௌதிகளாலும் காலத்தைப்போக்கினர். அத்தருணத்தில் விஷ்ணுபக்தர்களுக்குள் சிறந்தவராயும் ஸ்ரீமந் நாராயணஸ்மரணம்பண்ணுகிறவரும், மகதிஎன்றும் வீணையை எடுத்துக்கொண்டு ஆகாயத்தில் நின்றும், சூரியபகவானைப்போல் விளங்கும் நாரதபகவானைக்கண்டு பிதாபுத்திரர்களிருவரும் எழுந்து பிரத்யுத்தானம்பண்ணி தண்டன் சமர்ப்பித்து ஓபிரும்மஸ்வரூபியே நாங்கள் ஜன்மாந்தரத்தில் பண்ணின பாக்கியவசத்தால் தங்கள் தரிசனங்கிடைத்தது. இப்போதுதான் நாங்கள் பண்ணின யக்கியங்களும் அக்கினி ஹோத்திரங்களும் பரிசுத்தமாய்விட்டது. எங்கள் பிதுருக்கள் நற்கதியை யடைந்தார்கள். பரமஸாதுவாகிய தேவரீரைக்கண்ட எங்களுக்கு அஷ்டஐசுவரியமும் பரமலாபமும் பிரும்மானந்தமுமுண்டாயிற்று.

தேவரீரை சாமான்னியமான பாஞ்சபூதிகமான சரீரத்தை யுடையவராய் நினைக்கவில்லை ஸ்ரீமாதவனைவன் சாதுஸம்ரக்ஷணத்திற்காக எப்படி ராமகிருஷ்ணாதி அவதாரங்களைப் பண்ணியருளினரோ அப்படிப்போல் தர்மபிரவசனார்த்தமாய் அந்த ஹரியேவந்து தேவரீருருவமாய் அவதரித்ததாய் நினைக்கின்றோம் ஓ நாரதபகவானே மாயாசமுத்திரத்தில் ஜீவனாகிற கப்பல் ஈஷணாத்திரயங்களாகிற பெருங்காற்றால் தவித்துக்கொண்டு நிற்கயிடமிராம லிருக்கும்போது தேவரீருடைய சம்சர்கத்தால் முராரியினுடைய திருவடியில் பண்ணும் பக்தியாகிற கௌகாதண்டத்தால் இருப்பிடம் போகலாச்சுது சுவாமி விஷ்ணுயசஸ்ஸென்றும் பெயரையுடைய அடியேன் பவக்கடலில் நின்றும் யெப்படி கரையேறி அழியா வுலகமாகிய பரமபதத்தை யடையும்படி திருவுள்ளம் பற்றியருளவேண்டும் என்று உரைத்தார் அதுகேட்டு நாரதபகவான் சொல்லுகிறார் மாயையானது ரொம்ப கஷ்டமானது எல்லாம் ஆச்சரியமானது அந்த மாயாபலத்தினால் பிதாவையும் மாதாவையும் விடுகிறதில்லை ஓ விஷ்ணுயசஸ்ஸெ பூர்ணாவதாரமான நாராயணன் கல்கிபகவானாய் அவதாரம் பண்ணியிருக்க என்னைக்கண்டு நான் யோக்ஷமடைய வழி தேடவேண்டும் என்று சொன்னது ஆச்சரியமாயிருக்கிறது அப்படிக்காயினும் சொல்லுகிறேன் என்று உரைத்து ஏகாந்தஸ்தலத்தில் விஷ்ணுயசஸைக்கண்டு சொல்லுகிறார் கேளும் ஒருகாலத்தில் விந்தியமலையின் சிகரத்தில் மாயையானது ஒரு ஸ்திரீரூபத்தை யடைந்து ஜீவனைப்பார்த்துச் சொல்லுகிறாள் ஓ ஜீவனே நானில்லாமல் நீ எப்படி ஜீவிப்பாய் ஜீவன் சொல்லுகிறது. ஜீவனத்துக்கிருப்பிடமாகிய இந்த சரீரத்தில் நான் வசிக்கவில்லை அஹம் என்ற வேறுபுத்தி தேகமில்லாமல் எப்படியுண்டாகும். மாயை சொல்லுகிறாள் இந்த தேக

பக்ஷத்தில் உனக்கு அப்படிப்பட்ட புத்தியானதுஉண்டாயிற்று, மாயை யில்லாமல் சர்வசேஷ்டை உனக்குஎப்படியுண்டாகும். ஜீவன்நானில்லா மல் பிராக்கியனென்றதுஎப்படியுண்டாகும். மாயா மாயையினால் மனிக ன்ஜீவிப்பான். சேதனமில்லாமல் வியாபாரங்களைச் செய்வான். மாயாபல த்தினால் சாரமில்லாமலிருப்பதெல்லாம் சாரமானதுபோல்பிரகாசிக்கும். எப்படியென்றால் யானை புசித்த விளாங்கனிபோல் பிரகாசிக்கும். ஜீவனு கிய நீஎன்னுடைய ஸம்சர்க்கத்தினாலுண்டானாய். அல்லாமலும் அனேக ரூபங்களாய் பிரகாசிக்கிறாய். நானில்லாமல் நீயும்இருக்கமாட்டாய் எப்ப டியென்றால் சூரியன் பிரகாசிக்கும்போதுஇருள்போல் இருக்கிறாய் ஓமா யையே என்னுடைய விளையாட்டுக்கெல்லாம் காரணமாயிருக்கிறாய் நீ முதலிலேயும் கடைசியிலேயும் நடுவிலும் பிரகாசிக்கமாட்டாய். நான் எக்காலத்திலும் பிரகாசிப்பேன், இப்படி விஷயரகிதமாயும் மனதின்வி யாபாரமில்லாததாயும், பிருதிவி சம்பந்தமில்லாததாயும், ஜீவஸம்பந்த மில்லாததான இந்தச்சரீரத்தையொழிக்கவேண்டும். அதல்லாமல் அந்த மாயையானது என்னை இவ்விதமாயிருப்பதறிந்து நீ ஓரிடத்திலும் நிலை த்திருக்காமல் போகக்கடவீர் என்றுசாபங்கொடுத்தது. அப்படிப்பட்ட மாயையானது உமக்குப் பிள்ளையாயிருக்கும். கல்கிபகவானுக்கு தாசி யாயிருக்கிறது. எல்லாம்அந்தவைகுந்தநாதனால் என்றுஅறியும். அப்படி க்கறிந்து எல்லாவிஷயங்களிலும் ஆசையற்றவராய் அஹங்கார மமகார மற்றவராய் ஸாத்வீகராயிருக்கக்கடவீர்.

இவ்வித குணங்கள் உண்டாவதற்கு ஏகாந்தமான ஆரண்ணியத்தி லாவது பர்வதசிகரத்திலாவது நதிக்கரையிலாவது வசிக்கவேண்டும் வைஷ்ணவா சத்தீவ ஏஹாரணே நிராஶ்ரயஃ । உஷிக்ஷாதவை ஸ்ரூயவாயூ்யாதிஸிஓாதநஃ॥ என்று சொல்லியிருக்கும் பிரகாரம் நீர் மோக்ஷமடையக்கடவீர், என்று விஷ்ணுயசஸ்ஸுக்குஏகாந்தத்தில் வேதாந்தங்களை யுபதேசித்து கல்கிபகவானை பிரதக்ஷணஞ்செய்து கபி லாச்சிரமத்தையடைந்தார். அனந்தரம் விஷ்ணுயசஸ்ஸானவர் நாரதர் வாக்கியத்தைக்கேட்டு பரமானந்தபரிதராய் தன்குமாரனை ஜகத்துக்குக் காரணபூதரென்றும் மோக்ஷபிரதனென்று மறிந்து பத்ரிகாச்சிரமத்தைய டைந்து அவ்விடத்தில் இடை பிங்கலை நாடிகளை நடுநாடியில் சேர்த்து பிரும்மரந்திரத்தின்வழியாய் ஜீவாத்துமாவை நிர்வாணகதியில் சேர்த்து த் தன்மயமாய் ஆய்விட்டார்.

இவ்விடத்தில் பிரேதமாய்க்கிடக்கும் தன் நாயகனைக்கண்டு சுமதி யானவள்சரீரத்தின்மேல்விழுந்தழுது பதிசரீரத்தோடுஅக்கினியில்சேர்

ந்தாள். இப்படி விஷ்ணுயசஸ்சும் சுமதியும் உத்தமகதியை யடைந்த தைக்கண்ட நாரதர் கல்கிபகவானிடத்தில்சொல்ல அவரும் மரணத்துக்குச்சமானமான மூர்ச்சையடைந்து பிதாவுக்குச்செய்யவேண்டிய உத்தரகிருத்தியத்தைத்தன்பிராதாக்களோடுமுடித்து, பத்மாவதியோடுவே தங்களுக்கும்சாஸ்திரங்களுக்கும் விரோதமில்லாமல்சம்பளகிராமத்தை பரிபாலனம் செய்துவந்தார். இப்படியிருக்க கல்கியின் ஸேவார்த்தமாய் பரசுராமன் மஹேந்திரபர்வதத்தில் நின்றும் புறப்பட்டு தீர்த்தயாத்திரை பண்ணிக்கொண்டு சம்பளக்கிராமத்தையடைந்தார். பரசுராமன்வருவதைத்தெரிந்துக்கொண்டு கல்கிபகவான் பத்தினியுடன்அர்க்கியபாத்தியம் முதலான ஷோடச உபசாரங்களைச்செய்து மதுரமான பதார்த்தங்களால் விருந்தளித்து சைத்தியோபசாரம்பண்ணி அவர் திருவடிகளைப்பிடித்து கட்டிலில் சயனிக்கச்செய்து ஆலவட்டங்களால் விசிறி உபசரணைசெய்து நான் எக்காலத்தில் என்ன தவம்பண்ணினேனே தேவரீருடைய அனுக்கிரஹ வசத்தால் சமஸ்த சத்துருஜயமுமடைந்து சசித்துவஜன் பெண்ணின் விவாஹத்தையும் இன்னும் தான்செய்த சரித்திரங்கள் யாவையும் விண்ணப்பம் செய்தார்.

## மூன்றுவது அம்சத்தில் பதினருவது அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினேழாவது அத்தியாயம்.

### ருக்குமணி விரதம்.

சூதர் சொல்லுகிருர் பிறகு ஜாமதக்னியானவர் ரமாவானவள் புத்திரனில்லாமலிருக்கக்கண்டு கல்கியின் மதத்தை யவலம்பித்து அந்தரமாவுக்கு ருக்குமணி விரதமென்கிற ஓர் விரதத்தைச் செய்துவைத்தார். அந்த விரதத்தினுல் ரமாபுத்திரர்களைப்பெற்று அவர்களோடு சுகமாய்வாழ்ந்துக்கொண்டிருந்தாள்என்றனர். இதைக்கேட்டசௌனகாதிகள்சூதரைப்பார்த்துசொல்லுகிருர்கள். ஓபரமபாகவதரான புராணிகரே ருக்குமணிவிரதமாவதென்ன எப்படி செய்கிறது அதினுல் என்னபிரயோஜனம் அதையார் செய்து எவ்வித பலத்தை யடைந்தார்கள். அதின் விஸ்தாரத்தை யருளிச்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்பால் சூதர் சொல்லுகிருர்.

கேளுங்கள் பிரம்மவித்துக்களே முன்பு விருஷபர்வாவின் பெண்ணுன சர்மிஷ்டையானவள் மஹாநதியில் ஸ்நானம்பண்ணிவித்தியக்கட

னை முடித்துக்கொண்டு சகிஜனங்களோடும் தெய்வயானையோடும் சேர்ந்துசங்கரீனை ஸாக்ஷாத்காரம்பண்ணி வணங்கி பரவசமாகி அதிவேகமாய்ப்புறப்பட்டபோது தெய்வயானை தன்வஸ்திரமென்றுநினைத்துசர்மிஷ்டையின் வஸ்திரத்தை எடுத்து இடையில் தரித்துக்கொண்டு நிற்கும்போது சர்மிஷ்டை தான் ராஜகுமாரத்தி என்ற கர்வத்தாலும்ஐசுவரியமத்தாலும், தெய்வயானையைப்பார்த்து அடி பிச்சை எடுக்கும் பார்ப்பாரப்பெண்ணே உனக்கு இந்த வஸ்திரம் தகுமோ நாய்க்கும் நல்லமுதமோ நலங்கெட்ட பெண்ணுக்கு நாகரீகமோவென்று உதாசினமாய்ச்சொல்லி தன்வஸ்திரத்தைப் பிடுங்கிக்கொண்டு சுக்கிரகுமாரத்தியை அத்துணியினல் கட்டி ஒருபாழுங்கிணற்றிற்றள்ளிவிட்டு தன்சகிகளோடு நகரத்தையடைந்தாள்.

இவ்விடத்தில் தெய்வயானை வஸ்திரமில்லாமல் நக்கினயாய் அழுதுக்கொண்டு முழுகி முழுகிக்கிளம்பி அக்கிணற்றில் தொங்கும் கொடியைப்பிடித்துக்கொண்டிருக்கும்போது நகுஷன்குமாரனை யயாதி வனவேட்டையாடிக்கொண்டு வரும்போது கிணற்றினின்றும் உண்டான தீனசத்தத்தைக்கேட்டு மனதிளகி சமீபத்தில்வந்து பார்க்குங்காலத்தில் நக்கினயாயிருக்கும் தெய்வயானையைப்பார்த்து தன்வஸ்திரத்தைக் கொடுத்து தன்கையால் பிடித்துத்தூக்கிக் கரையில்விட்டுஇதென்னவென்று கேட்கும்போது சர்மிஷ்டையினல் கெடுதிநேரிட்டதை யறிந்துக்கொண்டு அவளை சமாதானப்படுத்தி அவளுடைய அபிப்பிராயம்போல் கல்யாணம் பண்ணிக்கொள்ள முயன்றான். தெய்வயானை தனக்கு சர்மிஷ்டையால் நேர்ந்ததுயரங்களை தன்பிதாவாகிய சுக்கிராசாரியருடன்சொல்லியழுதாள்.

உடனே சுக்கிரபகவான் கோபங்கொண்டு விருஷபர்வாவைப் பார்த்துச்சொல்லுகிறார். அடா சண்டாளா அடா குலபாம்சனே உன்னுடைய ராஜ்ஜியதந்திரம் இப்படி யிருக்கிறதா, அநீதியான ராஜ்யம் அடியோடே அழிந்துவிடும் பிடிடாசாபம் என்று உரைத்தார். அதுகண்டு விருஷபர்வா நடுங்கி ஒடுங்கி ஸ்வாமின் வேதசாஸ்திரங்களைக்கற்ற உங்களுக்குக் கோபங்கூடாது க்ஷமிக்கவேண்டும். உங்களால் அடியேன் தண்டிக்கத்தக்கினவன், என்னை எவ்வித தண்டனைக்குள்ளாக்கினலும் உட்படுகிறேன். அப்படி துஷ்டையான சர்மிஷ்டையையாவது அவளை ஈன்ற அடியேனையாவது தண்டிக்கக்கடவீரென்று காலில் விழுந்து புலலைக்கவிழ்ந்துக்கொண்டான்.

அதைக்கண்டு தைத்தியகுருவானவர் அவள்பண்ணின அபராதத்திற்கு அவளை என்பெண் தெய்வயானைக்கி தாசித்தொழில் செய்துவரும்படி கட்டளையிடுவென்றார். அதுபோல் விருஷபர்வாவும் தன் குமாரத்தியையழைத்து பெண்ணே நீசெய்த அடாதகாரியத்தால் படாதுபடக்கடவாய். இதோ ஆசாரியபுத்திரியான தெய்வயானைக்கு ஊழியவேலைகளைச் செய்யக்கடவாய்என்று சொல்லி தெய்வயானையுடன் அனுப்பிவிட்டு துக்கத்தோடு நின்றான். பிறகுசுக்கிராசாரியர் யயாதியையழைத்து தன்மகளை மணம்புரிவித்து ராஜாவையழைத்து இந்தசர்மிஷ்டையை நீ இச்சித்துஅவளுடன் சேருவாயானால் உடனேகிழத்தனம் உண்டாகக்கடவதென்று சாபமிட்டுகின்றார். அவ்வாக்கியத்தைக்கேட்ட யயாதிகில் கொண்டு சர்மிஷ்டையை ஒருதோட்டத்தில் அரண்மனையமைத்து அதில் அவளைஇருக்கச்செய்தான் தான் தெய்வயானையோடு சுகமாய் வாழ்ந்துக்கொண்டுவந்தான். இப்படியிருக்கசர்மிஷ்டைதெய்வத்தைவெறுத்துவிதியைநினைத்து அழுதுக்கொண்டிருக்குங்காலத்தில் மாகஸ்நானத்துக்காக கங்காநதியைக் குறித்துப்போய் ஸ்நானம்பண்ணும்போது அக்கரையில் அநேக ஸ்திரீகூட்டங்களோடுசுகமாய் வசிக்கும் விசுவாமித்திரரைக்கண்டாள் அவ்விடத்தில் கூடாரமடித்துக்கொண்டு சுவர்ணபட்டங்களைக் கட்டி வச்சிர வைடூரியங்களாலலங்கரித்து முத்தாரம் சாத்தியஒருவாசுதேவபிம்பத்தைக்கண்டாள். பிறகு அப்பிம்பம் அவ்விடத்திலிருக்கும் ஸ்திரிகள் யாவரும் புருஷஸூக்தங்களாலும், பஞ்சாமிருதத்தினாலும், பஞ்சகவ்வியத்தாலும், ஒரு பத்திராசனத்தில் எழுந்தருளப்பண்ணி கஸ்தூரி, குங்குமங்களா லபிஷேகம்பண்ணினார்கள். பிற்பாடு கங்கை, யமுனைமுதலான நதிதீர்த்தங்களாலும், ஹரித்திரை, சந்தனம், அருகு முதலான ஒஷதிகளாலும். அபிஷேகம் பண்ணினார்கள் அனந்தரம்பீதகவாடையும் முத்தாஹாரமும், யக்கியசூத்திரமும், மல்லிகைமுல்லையிருவாக்ஷி, பாடலீமுதலான புஷ்பங்களாலும், திவ்விய மாலைகளாலும் அலங்கரித்தார்கள். பிறகு அம்மாதர்கள் யாவரும் அந்த பகவானைத் தொழுது ஓ வாசுதேவா ஓ ஆபத்பாந்தவா அனாதரக்ஷகா நாங்கள் கொடுக்கும் அர்க்கியம்முதலான உபசாரங்களை ஸ்வீகரிக்கவேண்டும் ஓ நாராயணா நீர் ருக்குமணிதேவியுடன் நாங்கள் செய்யும் உபசாரங்களையும் பிரதிக்கிரகிக்கவேண்டும். பரமானந்தத்தைக் கொடுக்கும் கர்பூரார்த்தியை திருவுள்ளம்பற்றி யருளவேண்டும் சம்சார சத்துருவான தாபத்திரயத்தை நிக்கிரகிக்கவேண்டியது இப்படி ஷோடசஉபசாரங்களைச் செய்துக்கொண்டு தங்கள் தங்கள் இஷ்டபூர்த்தியை யடைந்த ஸ்திரீகளை சர்மிஷ்டையானவள் கண்டாள் உடனே அவர்கள் சமீபத்திற்குப்போய் அம்மா அம்மா நான் பதியில்லாப்பாவியாய் விட்டேன் நீங்

கள் அனுக்கிரகித்து என்னை கிருதார்த்தையாய்ச் செய்யவேண்டும் இப்படி சொல்லக்கேட்ட ராஜஸ்திரீகள் தயவைப்புரிந்து இதோயிருக்கும் பூஜா திரவியங்களை எடுத்துக்கொள் இதோயிருக்கும் ருக்குமணியோடு கூடிய வாசுதேவனைப் பூஜிக்கக்கடவாய் என்று உரைத்தார்கள் இந்த ருக்குமணிவிரதத்தை யனுஷ்டித்து சீதாதேவியானவள் ராமனைச் சீக்கிரத்திலடைந்தாள் தமயந்தியானவள் இந்த விரதத்தையனுஷ்டித்து நளச்சக்கிரவர்த்தியை யடைந்தாள். சாவித்திரியும் அனுஷ்டித்து மரணத்திலிருந்து தன் பர்த்தாவைக் காத்தாள் பிருஹதச்சுவருடைய அனுக்கிரகத்தால் திரௌபதி தனக்கு அனுரூபமான ஐந்து பர்த்தாக்களை யடைந்தாள். அதுபோல் நீயுமடைவாய் என்று சொல்ல உடனே சர்மிஷ்டையும் அந்த விருதத்தையடைந்து யயாதிராஜாவைப் பதியாயடைந்தாள் ஆதலால்உன்பாரியையும் அந்த விரதத்தை யனுஷ்டிக்கக்கடவள் என்று ஜாமதக்கினி உரைத்தார். அவ்வாக்கியத்தைக்கேட்டுசந்தோஷத்தையடைந்து பத்மாவதியோடு கல்கிபகவானும் அனுஷ்டிக்க அந்த விருதபலத்தால் மேகமலனென்றும் வலாஹனென்றும் இரண்டு பிள்ளைகள் பிறந்து எக்கியங்களாலும் சிரார்த்தங்களாலும்,தேவபிதுர்க்களைத்திருப்திபண்ணினுர்கள். இவர்கள் ரூபத்தாலும், குணத்தாலும், வீரியத்தாலும் கல்கிபகவானுக்குச்சமானமானவர்கள் இப்படி இந்தகுமாரர்கள் சகலவிபவங்களாலும், சம்பத்தாலும், கீர்த்தியாலும், குபேரனையும், இந்திரனையும், பிருஹஸ்பதியையும் திரஸ்கரித்தார்கள். இந்தகுழந்தைகள்விஷ்ணுபக்தியில் சிறந்து பரமபாகவதர்களென்று பெயர் பெற்றுர்கள் இப்படிக்கிச் சொல்லினபின்பு பரசுராமர் தன்னிருப்பிடம்போய்ச் சேர்ந்தார்.

## மூன்ருவது அம்சத்தில் பதினேழாவது அத்தியாயம். முற்றிற்று

---

## பதினெட்டாவதத்தியாயம்

### கல்கிபகவானிடவிஹாரம்.

சூதபுராணிகர் சொல்லுகிருர் கேளுங்கள் பிராமணுேத்தமர்களே மூன்றுலோகங்களிலும் கொண்டாடத்தக்கின இந்த ருக்குமணிவிரதத்தை யுங்களுக்குச் சொன்னேன் இனிமேல் கல்கிபகவான் அனுஷ்டித்த விஷயங்களை அறிவிக்கிறேன் அந்த கல்கிபகவான் அநேக வருஷகாலம் சம்பளக்கிராமத்தில் வசித்து தன் புத்திரர்களோடும், பிராதாக்களோடும் சுகத்தையடைந்திருந்தார். அந்நகரமானது அமராவதிபோல்

காற்புறமும் மகரதோரணங்களாலும், துவஜபடங்களாலும்; வாத்திய கோஷங்களாலும், வேதசத்தங்களாலும், வீணாரவங்களாலும், பக்ஷிகள் ஒலிகளாலும் சூழப்பட்டிருந்தன. அந்த பகவானுடைய சேவாநிமித்தமாய் பூமண்டலத்திலுள்ள புண்ணியதீர்த்தங்கள்யாவும் ஸ்திரீரூபத்தை யடைந்து சம்பளக்கிராமத்தில் வசித்ததுகள். அக்காலத்தில் அகால மிருத்யுவுக்கு மரணமுண்டாய்விட்டது. அக்காலத்தில் வனங்கள் உபவனங்கள் லதாமண்டபங்கள் இவைகளெல்லாம் சுகந்தபுஷ்பங்களோடிருக்கக்கண்ட ஷட்பதங்கள் அம்மலர்களிலிருக்கும்மகரந்தங்களைக்கிரகித்து கூடுகட்டி அதிதிகளுக்கு விருந்தளித்ததுகள். அப்பொழுது இந்திரனு லனுப்பப்பட்ட விமானத்தில் பகவான் பத்மாவதியோடும் ரமையோடும் நதிகள், பர்வதங்கள், குஞ்சங்கள்முதலான இடங்களில் சம்சாரசுகத்தை யனுபவித்தார். இப்படி சம்சாரசுகத்தை யனுபவித்துக்கொண்டு ரமையுடனும் இதரஸ்திரீகளுடனும் ஒரு மலைக்குகைக்குள் பிரவேசித்தார். அப்பொழுது பத்மாவதியானவள் ஏதோ வனவிசித்திரங்களைக் கண்ணுற்று இருக்கும்போது பகவான் இந்த இடத்திற்குப் போனுரென்றறியாமல் எங்கும்தேடியும் காணுமல் துக்கப்பட்டு தன்தோழிகளுடனே ஓரிடத்தில் தன் கண்மையினுல் கல்கிபகவானைப் போல் ஒரு பிம்பமெழுதி அந்த பிம்பத்தைப்பார்த்துத் தன் தாபத்தை தணித்துக்கொண்டு இருக்கும்போது பகவான் பத்மாவதியைக் காணுமல் சிந்தாக்கிராந்தராய் தேடிக்கொண்டு வரும்சமயத்தில் பத்மாவதி படும் துயரத்தைக்கண்டு கல்கி காடாலிங்கனம் பண்ணிக்கொண்டார்.

பத்மாவதியானவள் பகவானைவிட்டுப்பிரிந்த சமயம்முதல் அதுபரியந்தம் அனுபவித்த கஷ்டம் ஒருவராலும் சொல்லமுடியாது. அப்படிப்பட்ட பத்மாவதியும் கல்கியின் நீலமேக சாமள திருமேனியைக்கண்டு அடங்கா ஆனந்தங்கொண்டு மெய்மறந்து நாத் தழதழத்து மயிர்க்கூச்சலடைந்து ஹா-பிராணநாதா, ஹா-பக்தவத்ஸலா, ஹா-பரமபுருஷா, இப்படி அடியாளை உபேக்ஷிக்கக்கூடுமா என்று சொல்லி துதித்து தன் ஆபரணங்களைக் களைந்துவிட்டு மறுபடியும் சுரதத்துக்காரம்பித்தாள். இப்படிவெகுகாலம் விளையாடிக்கொண்டு சைத்திரவனத்திலேயும், நந்தனவனத்திலேயும், காடுகளிலும், அனேகயுவதிகளுடனும் விளையாடினுர்கள். அந்த கல்கிபகவான் பத்மாவதியின் முகமதுவை பானம்பண்ணி அதிதிருப்தியாய் இருக்கும் யுவதிகள் யாவரும் பகவானை சமாலிங்கனம் பண்ணிக்கொண்டு சுரதரஸங்களை யனுபவித்துக்கொண்டிருந்தார்கள்,

இப்படிக்ரீடைகளை யனுபவித்த சரித்திரத்தை எவர்கள் கேட்கிறார்க ளோ அவர்கள் சம்சாரபந்தத்தில்நின்றும் விடுபட்டுமோக்ஷத்தையடை வார்கள்.

## மூன்றாவது அம்சத்தில் பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## பத்தொன்பதாவது அத்தியாயம்

### கல்கியின் நிர்வாணம்.

சூதபுராணிகர் சொல்லுகிறார். பிற்பாடு பிரம்மாமுதலான தேவத கள் தங்கள் தங்கள் விமானங்களில் ஏறிக்கொண்டு கல்கிபகவானை ண்டன் ஸமர்ப்பிக்கவந்தார்கள், அத்திரி பிருகுசமதக்கினிமுதலானரிஷி களும் ஒன்றுசேர்ந்து கல்கிபகவானைக்காண சம்பளக்கிராமத்தில்வந்து சேர்ந்தார்கள். அப்போது நீலமேகஸ்யாமளனாய் சூரியோதயம்போல் கிரீடமும் புன்சிரிப்போடுங்கூடிய முகமும் சர்வலோகங்களை ரக்ஷிக் கத்தக்கின கடாக்ஷமும் ஆம்பல் குஸுமத்தின் பரிமளத்தை நிகர் க்கின்ற பரிமளத்தோடுகூடிய பீதாம்பரமும், சூரியசந்திரனுதித்தாற் போலிருக்கிற சங்குசக்கிராயுதங்களும் மணிமயமான கிரீடங்களும் மாணிக்கப்பதக்கங்களும், செங்கமலத்தை நிகர்க்கிற திருவடியும் காஞ்சி தாமபூஷணங்களையுடைய கடிதடத்தையு முடைத்தாயிருக்கிற கல்கிபக வானைக்கண்டு யக்ஷ கின்னர கிம்புருஷ சித்தவித்தியாதரர் முதலானதே வர்கள் தோத்திரஞ்செய்கிறார்கள். ஓ விசுவேச தேவேச பூதேச உம்மு டையகடைக்கண்பார்வையால் உலகங்களை ரக்ஷிக்கத்திருவுள்ளம்பற்றிய தீனபந்தோ உம்முடைய தேககாந்தியால் நீருண்ட மேகமண்டலத்தை திரஸ்கரிக்கும் தீனபந்தோ உம்முடைய பத்தினிமார்களுடனும் அனந் தகருட விஷ்வக்ஸேனன் முதலான நித்தியசூரிகளாலும் சேவிக்கப்ப டும் செங்கண்மாலே உம்மைவணங்குகிறோம். தீனபந்தோ உம்முடைய ஜ்யோதியில்லாமல் வைகுண்டம் பாழாய்விட்டது எழுந்தருளவேண் டும் என்று பிரார்த்திக்கப்பட்ட கல்கிபகவான் தன்குமாரர்களை யழைத் து தன்ராஜ்ஜியத்தில் பட்டாபிஷேகம் செய்துவைத்து ஜனங்களை ரக்ஷி க்கும் தன்மையையுபதேசித்து ஜனங்களையழைத்து தான் வைகுண்டம் போகவேண்டியது அவசியமான காரியமாகையால் எனக்கு உத்திரவு அளிக்கவேண்டுமென்று உரைக்க அம்மொழியைக் கேட்ட ஜனங்கள் ஓவென்றுகதறி ஓநாதா நாங்கள் தங்களுக்கடிமைசெய்து வரும்பொழுது எங்களை ஏன் நீக்கிவிட்டுப் போகிறீர் உமக்கு தர்மமா நீங்கள் யெங்கே

போனபோதிலும் நாங்களும் அவ்விடத்திற்கு வருவோமென்று நிர்பந்தித்த ஜனங்களை உத்தமவாக்கியங்களால் நல்வார்த்தை சொல்லி நிறுத்திவிட்டுத் தன்பத்தினிகளுடன் புறப்பட்டு மகாவனத்தையடைந்து தேவகந்தர்வர்களால் சூழப்பட்டு கங்காஜலங்களால் பரிசுத்தமான இமயமலைச்சாரலையடைந்து கொஞ்சகாலமவ்விடத்தில் வசித்து தன்னைத்தான் நினைத்துக்கொண்டு நிற்குங்காலத்தில் பகவானுக்குநான்குபுஜமும் கௌஸ்துபாபரணமும் பீதாம்பரமும் ஸ்ரீவத்ஸ சின்னமும் கதை கட்கம் முதலான ஆயுதங்களும் தோன்றி அப்பிராகிருத திவ்விய மங்கள விக்கிரஹமும் தோன்றிற்று. அப்போது தேவர்கள் புஷ்பவர்ஷங்களை வர்ஷித்தார்கள். துந்துபி வாத்தியமடித்தார்கள், அந்த அற்புதமான சரீரத்தைக் கண்டு ரிஷிகள் உபனிடதங்களாலும் புருஷசூக்தங்களாலும் ஸ்தோத்திரம்பண்ணினுர்கள். தன் பர்த்தாவின் நிர்வாணகதியைக்கண்ட பத்மாவதியும் சரமாவதியும் சந்தனக்கட்டைகளை எரித்து தாங்களும் அந்த செந்தணலில் குதித்தார்கள். அப்பால் தர்மமும் கிருதயுகமும் பூமியெங்கும் பரவி சத்துருவில்லாமல் சஞ்சரித்ததுகள். தேவாபியும் மருமஹாராஜாவும் கல்கியின் ஆக்ஞையை சிரமேல்கொண்டு பிரஜைகளை தர்ம்மந்தப்பாமல் காப்பாற்றிவந்தார்கள்.

விசாகயூப பூபாலனும் கல்கியின் நிர்வாணத்தைக்கேட்டு தன்குமாரனை ராஜ்யத்தில் ஸ்தாபித்து வனமேகினுன். இப்படி அனந்தன் சரித்திரத்தையும் கல்கியின் கதையையும் விசிதமாகச்சொல்லி கிளியானது நரநாராயணுச்சிரமத்தை யடைந்தது. இப்படி கல்கியின் சரிதத்தைக் கேட்டவர்களும் படித்தவர்களும் வியாதி-அற்பாயுள்-தரித்திரம் -மாஸ்தரியம்-நாஸ்திகவாதம் முதலானதுகளையடையமாட்டார்கள். கல்கிபகவானுடைய மஹோத்ஸவமான அவதார விசேஷத்தைக் கேட்டவர்கள் தனம்-தானியம்-புத்திரன்-மித்திரன்-களத்திரம்-பசு- ரத்தினம் முதலானதுகளை மேன்மையாயனுபவித்து பரமபதத்தையும் அடைவார்கள். இந்த கல்கியின் சரிதமானது எல்லாப்பாபங்களையும் தாபத்திரயங்களையும் மனோவியாதிகளையும் போக்கடிக்கவல்லது. இப்படிலோமஹர்ஷருடைய புத்திரரான சௌனகரானவர் கல்கியின் சரித்திரத்தை பரமபாகவதசிகாமணியான சூதபுராணிகரிடத்தில் கேட்டுப் பரமசந்தோஷத்தையடைந்து மறுபடியும் கங்காஸ்தவத்தையும் கேட்டார்.

மூன்ருவது அம்சத்தில் பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

## இருபதாவது அத்தியாயம்.

### கங்காஸ்தவம்.

சௌனகர் பிரஸ்னைபண்ணுகிறார் ஓ பாகவதோத்தமரே தேவரீர்களுடைய அனுக்கிரகத்தால் அஸ்மதாதிகள் நற்கதியையடையும்படியாயிற்று. ஆனபோதிலும் உலகத்தில் ஜான்னவியென்று கொண்டாடிக் கொண்டிருக்குங் கங்காநதியின் பெருமையை கிருபைசெய்தருளவேண்டும் என்றுரைத்தார். அவ்வாக்கியத்தைக்கேட்டு சூதபுராணிகர் சொல்கிறார்; கங்கையானவள் சோகத்தையும்மோகத்தையும் சம்சாரக்கடலில் நின்றும் கரையேத்திபரலோகத்தையளிக்க வல்லவள்எவன் பாகீரதியை ஸ்மரணை பண்ணுகிறானோ அவனே புண்ணியாத்துமா, எவன்பாகீரதியென்றும் கெங்கையென்றும் ஜான்னவீயென்றும் திரிபதகையென்றும் உச்சாரணம் பண்ணுகிறானோ அவனே உத்தமபுருஷன். அவனே தனவான், அவனே பண்டிதன், அவனேபுத்திரவான், கங்காஜலத்தில்மூழ்கி கரையேறி தன்னிச்சையாய் போகும்போது பசுபக்ஷி மிருகங்கள்ஏதாகிலும் அவனுடைய காற்றில்தொடப்பட்டல் அவர்கள்புனராவர்த்தி ஜனனமில்லாமலிருக்கிற மோக்ஷத்தையடைவார்கள். கங்காநதிக்கரையில் போய்நின்றுக்கொண்டு ஓமாதாவே, லோகபாவனி - சுரசுந்தரி - ஹரிபதாப்ஜஸம்பூதே-திரிபதகெ-ஜான்னவி-வைஷ்ணவி- சகரவம்சமோக்ஷபிரதே என்று எட்டு திருநாமங்களை யுச்சரிப்பானானால் அவனை ஸமஸ்தரோகங்களும் மனோவியாதிகளும் தரித்திரங்களும் அணுகாது. உலகத்தில் கங்காநதிக்கு மிஞ்சின நதியும் கிடையாது, அரிபக்திக்குமிஞ்சின பக்தியும் கிடையாது, ஏகாதசி விரதத்தைக்காட்டிலும் உத்தம விரதமுங்கிடையாது, பாகவதோத்தமர்களுக்கு மிஞ்சின தெய்வமும் கிடையாது. திருஷ்டாந்தம் [illegible] ॥

#### மூன்றாவது அம்சத்தில் இருபதாவதத்தியாயம்.

முற்றிற்று.

# இருபத்தோருவது அத்தியாயம்.

## புராணச்சுருக்கம்.

1 முதலில் கலியின் விவரணமும் தேவர்கள் பூமிபிராட்டியுடன் பிரும்மலோகத்தையடைந்ததும் பிரமன்பிரார்த்தனையால் பகவான்விஷ்ணுயஜஸ்ஸின் கிருகத்திலவதரித்ததும் பிதாவும் புத்திரனும் ஸம்வாதம்பண்ணியபிறகு உபனயனாதி சமஸ்காரங்களையடைந்து பரசுராமனிடத்தில் வேதாத்தியாயனத்தையும் தனுர்வேதங்களையும் மஹோபதேசங்களையும் அடைந்து விசாகயூபராஜாவினால் தன்புத்திரியின்வர்ணனையைக்கேட்டதும் சுகத்தின்வரவும் பிறகு கல்கிபகவான் கிளியுடன் ஸம்வாதம்செய்ததும் சிவனுடைய அனுக்கிரஹத்தால் பத்மாவதி தனக்கிஷ்ட புருஷனையடைந்ததும் இராஜக்கூட்டங்களைக்கண்டு ஸ்திரீகளின் தன்மையடைந்ததற்கு காரணத்தை தெரிந்துக்கொண்டும் கிளியால் ஹரியின் பாதாதிகேசபரியந்தம் வர்ணனையை பத்மாவதி கேட்டதும் அவள் பகவானை தியானம்பண்ணினதும் சுகத்திற்கு ஆபரணாதிகளளித்ததும் கல்கிபகவானுக்கும் பத்மாவதிக்கும் விவாகம் நடந்த சரித்திரமும் கல்கியின் தர்சனமாத்திரத்தினால் அரசர்கள் புமபாவத்தை யடைந்ததும் அனந்தன் வந்ததும் அவரோடு ஸம்வாதமும் கல்கிபகவான் பிதா மரணதர்மத்தையடைந்ததும், உத்தரகிருத்தியத்தை முடித்ததும் அனந்தனுடைய கியானபக்திகளை வர்ணித்ததும் பத்மாவதியோடு சம்பளக்கிராமத்தையடைந்ததும் புத்திரபிராதா சேனாஜனங்களோடும் ஸ்திரீகளோடும் யுத்தம்பண்ணினதும் குதோதரியைவதைத்து அவள்புத்திரர்களை மாய்த்து ஹரித்துவாரத்தையடைந்து ரிஷிகளை தெண்டன் சமர்ப்பித்து சூரியவம்சவர்ணனையும் ஸோமவம்ச வர்ணனையுங்கேட்டு ராமனுடையதிவ்விய சரித்திரத்தைச்செவியுறக்கேட்டுதேவாபியினுடையவும், மருவினுடைய ஸ்நேகத்தையும்டைந்து இமயமலைச்சாரலில் கோகவிகோகனைவதைத்து பல்லாடநகரத்தை யடைந்து சய்யாகர்ணனைவதைத்துசசித்துவஜனுடைய பாணத்தினால் கல்கிபகவான்மூர்ச்சையடைந்ததும்சுசாந்தையின் ஸ்தோத்திரமும் கல்கியின் பெருமையும் அவ்விடத்தில் விவாகமும்சசித்துவஜராஜா தன்பூர்வஜன்ம விருத்தாந்தத்தை வர்ணித்தலும் சசித்துவஜன் மோக்ஷமடைந்ததும் விஷகன்னியபாபோசனமும் ராஜாக்களுக்குப் பட்டாபிஷேகமும் மாயாஸ்தவமும் சம்பளக்கிராமத்தில் யக்ஞயமுத

லான கிரமங்களை வர்ணித்ததும் கல்கிபகவான் தன்பத்தினிகளோடுவிஷயபோகங்களை யனுபவித்ததும் கிருதயுகப் பூமியில்வந்ததும் ருக்குமணிவிரதத்தின் பெருமையைக்கேட்டதும் சர்மிஷ்டை உத்தமபுருஷனையுடைந்ததும் தேவர்கள் பிரார்த்தித்ததும் பகவான் மோக்ஷலோகத்தையடைந்ததும் சுகம் நரநாராயணாச்சிரமத்தை அடைந்ததும்கங்காஸ்தோத்திரமும அதின்பெருமையும் வர்ணிக்கப்பட்டது. இந்த புராணம் பிரளயகாலத்தில் ஸ்ரீபகவான் தன்வாக்கினால் சொன்ன விஷயங்கள் யாவும் தான் கல்கிபுராணமென்று சொல்லப்படும். இந்த சரித்திரத்தை வியாசபகவான் புராணரூபமாய் பூமியில் விரைத்தார்.

இந்தப்புராணசாரத்தை எவர்கள் கேட்டாலும் படித்தாலும் அவர்கள் நற்கதியடைவதில் சந்தேகமில்லை, முதலில் நாரதபகவானிடத்திலிருந்து வியாசர்கேட்டு நைமிசாரண்ணியவாசிகளுக்குபதேசிக்க அவர்களிடத்திலிருந்து சூதபுராணிகர்கேட்டு சௌனகாதிரிஷிகளுக்கு உபதேசித்தார்.

## கல்கிபுராணம்

## முற்றிற்று.